Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

දිනමුරසු වාරමලර්

ஒக்டோபர் 06 - 12, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 931

## தஞ்சக் கோரிக்கைகள் நிராகரிப்பு சர்வதேசம் நடவடிக்கை



## இலங்கைக்கு எதிராக களத்தில் குதிக்கிறது கனடா

## ஆண்ட பரம்பரையின் நீண்ட நினைவுகள்

## பக்தியும் ஆன்மீகமும்

பக்தியில் ஈடுபடுவது மட்டும் ஆன்மீகமாகிவிடாது. பக்தி என்பது ஒரு பரிதவிப்போடு இருப்பது. பக்தி, ஆன்மீகத்திற்கு மெல்ல மெல்ல அழைத்துப்போகும். போக வேண்டும். ஆனால், ஆன்மிகம் என்ற நிலைக்கு வந்துவிட்ட பிறகு, பக்தி, அம்மாதிரியான பிரிவுகளிலெல்லாம் மாட்டிக்கொள்ளாது. நீ, நான் என்றெல்லாம் கூறு போடாது. ஆன்மீகம் என்பது ஆழ்ந்து சிந்தித்தல். தன்னை உணர்தல். உள்ளே என்ன நடக்கிறது என்று உற்றுப் பார்த்தல். அப்படி உற்றுப் பார்ப்பதின் பொருட்டுத்தான்.

எல்லா அபிஷேகமும் ஆராதனையும் கதை சொல்லலும், நாடகம் நடத்தலும், பூச்சொரிதலும், பூவாணம் விடுதலும் நடைபெறுகின்றன. இது தவறில்லை. ஆனால், இவற்றில் சிக்கிக்கொண்டு, இவற்றுடன் சண்டையிட்டு எங்கு போக வேண்டுமோ அங்கு போகாது நாம் தேங்கி விடுகிறோம். இதை உதறி இன்னும் மேலே நடக்க, வேறொரு உலகம் தெரியும். வேறொரு வாழ்க்கை அமையும்.

நீங்கள் மட்டுமே இருக்கின்ற தனி உலகம், வேறு எவரையும் சார்ந்திராத தனி வாழ்க்கை. எதையும் சார்ந்திராத என்பதற்கு, உணவு, உடை, உறைவிட தேவையைப் பொறுத்து சொல்லவில்லை. யார் கருத்தையும் ஏற்காது, எந்தவித ஏக்கமும் கொள்ளாது, எந்த மதத்திலும் சிக்கிக்கொள்ளாது, எந்த மார்க்கத்திலும் ஈடுபடுத்திக்கொள்ளாது, தான் மட்டும் தனியாக நின்று கடவுளைத் தேடுதல்தான் ஆன்மீகம். அங்கு குரு என்பவர் கூட ஆரம்பகால இலட்சணம்தான். இப்படியொரு வழி இருக்கிறது என்று காண்பிப்பதோடு குருவின் வேலை முடிகிறது. பிறகு தனித்த பயணம்தான் மேற்கொள்ள வேண்டும். உள்ளுக்குள்ளே உட்கார்ந்து பார்ப்பதற்கு ஒருமுறை சொல்லிக் கொடுத்துவிட்டால் அந்த முறையை பிடித்துக்கொண்டு முன்னேற வேண்டும். அதிலேயே மிதந்து கொண்டிருக்க வேண்டும்.

**எஸ்.கருணாகரன், யாழ்ப்பாணம்.**

## பாரம் சுமக்கும் நண்பர்கள்

ஆன்மீகம்

திருமண வீடுகளில் 'முப்புரிநூல்' பற்றி பேசுவார்கள். கணவன், மனைவி, கர்த்தர்" ஆகிய மூன்றுபேரும் இணைந்ததே முப்புரிநூல். கணவனுக்கும், மனைவிக்கும் இடையே ஆழமான நட்பும் சிநேகிதமும் இருக்க வேண்டும். மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்ப வாழ்க்கை கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டு செடிகளை ஒன்றோடொன்று ஒட்டவைத்தோம் என்றால் அது ஒரு புதிய செடியை உருவாக்குகிறது. ஒட்டுமாம்பழத்தின் சுவை மிக ருசியானது.

அதைப்போல ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒரு மனமாகும்போது, சிநேகிதமாக அன்பின் ஐக்கியம் கொள்ளும்போது அந்தக் குடும்பம் மிக மேன்மையுள்ளதாய் இருக்கும். அதோடு நின்றுவிடக்கூடாது. அந்த ஒட்டுச்செடியானது திராட்சை செடியாகிய கிறிஸ்துவோடு கூட ஒட்ட வைக்கப்பட வேண்டும். அவரே மெய்யான திராட்சை செடி. நாம் அவரில் நிலைத்திருப்போம்என்றால் திரளான கனிகளைக் கொடுப்போம். அந்தக்கனி சுவையுள்ளதாய் விளங்கும்.

உங்களுடைய வாழ்க்கையில் உங்களோடு இணைந்து ஜெபிக்கக் கூடிய ஜெப நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். உண்மையாய், ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமந்து ஒருவருக்கொருவர் மன்றாடுகிற சிநேகிதர்கள் அவசியம்.

**ச.றொசான், கொக்குவில்.**

## உத்தம நபி கூறிய உள்ளத்தூய்மை

அறிந்து கொள்ளுங்கள். உடலில் ஒரு சதைத்துண்டு இருக்கிறது. அது சீராகிவிட்டால் முழு உடலும் சீராகிவிடும். அது கெட்டுவிட்டால் முழு உடலும் கெட்டுவிடும் அதுதான் இதயம்.

ஆகவே, ஒரு மனிதன் தன்னுடைய உள்ளத்தை விழிப்புடன் வைத்துக்கொள்ள வேண்டும். உள்ளமே மனிதனுடைய அனைத்து செயற்பாட்டிற்குமான ஆணிவேராய் இருக்கிறது.

ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு ஸஹாபி வந்தார். அவர் வந்த நோக்கத்தைப் புரிந்துகொண்ட இறைதூதர் அவர்கள் அவரிடம் நன்மை என்றால் என்ன? என்று கேட்கவா வந்தீர் என்றார்கள்.

அதற்கு அவர் ஆம் என்றார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். நீ உனது உள்ளத்திடமே(பத்வா) கேட்டுக்கொள். உனது உள்ளம் எதில் அமைதி காண்கிறதோ அதுவே நன்மையாகும். இதுவே உத்தம நபி கூறிய உள்ளத் தூய்மை.

**எம்.சீ.கலீல், கல்முனை-05.**

## வாசகர் சாலை

### எதிர்பார்ப்பு!

வாரம் ஒருமுறை நான் எதிர்பார்த்துக் காத்திருக்கும் எனக்கு வசந்தமாய் வந்து என்னை யாசிக்கச்செய்யும் முரசே! உனக்கு ஆயிரம்கோடிகள் நன்றி. நீ சுமந்து வரும் அனைத்து விடயங்களும் சூப்பரோ சூப்பர். உன்னில் வருபவைகளில் மருத்துவர் ஜமுனானந்தாவின் காசநோய் பற்றிய கட்டுரைத்தொடர் மிகவும் பலனைத் தரக்கூடியவகையில் உள்ளது. இதுபோன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியவை-களைப் பிரசுரித்தால் நன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

**எஸ்.நோதயான், நீர்கொழும்பு.**

### முரசே முழங்கு!

வாசகர் நெஞ்சங்களைத் தொட்டுவிட அனைத்தையும் சுவைபட அள்ளித்தரும் முரசே! இனத்துக்காய் நீ செய்யும் சேவை என்றுமே மறக்க முடியாதவை. 928 இல் முரசில் கவிதைபோட்டியில் வெளிவந்த அ.சந்தியாகோ என்பவரால் எழுதப்பட்ட 'ஆவல்' என்னும் கவிதை என் நெஞ்சை நெகிழவைத்தது. கண்டி சந்தியாகோ அவர்களுக்கும் முரசுக்கும் என் நன்றிகள்.

**க.லோகநாதன், மட்டக்களப்பு.**


### விழிப்பு!

தினமுரசுக்கு எனது வணக்கம். முரசை வாரம் ஒரு முறை எதிர்பார்த்தபடி காத்திருக்கின்றேன். எமது மக்களுக்கு எதைச் சொல்ல, எப்படிச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறாயோ அதை அப்படியே செய்கிறாய். கடந்த முரசோடு முடிவடைந்த அத்திமுகத்தோனின் தொடரை உற்று நோக்கும்போது அவர் சொல்ல வந்ததை அவரால் முழுமையாகச் சொல்லமுடியாமல் போய்விட்டது என்று நினைக்கின்றேன். இருந்தாலும் அங்கு சொல்லப்பட்டவைகளை விட மக்கள் மேலான துன்பங்களை அனுபவித்தார்கள் என்பதற்கு இங்கு அவர் கண்கூடான ஒரு சாட்சியாகவுள்ளார். அடுத்து புலித்தளபதியின் வாக்குமூலத்தினூடாக மக்களுக்காக என்று சொல்லித் தொடங்கப்பட்ட போராட்டத்தில் ஒரு சிலரின் சுகபோக வாழ்க்கைக்காக மக்கள் எப்படி, எங்கு, எவ்வாறு பகடைக்காய்களாக நகர்த்தப்பட்டனர், இந்த அழிவுக்கு யார் பொறுப்பு! என்ற கேள்வியை என்னுள் எழ வைக்கின்றது. ஆனால் இதற்கு யார் பொறுப்பு என்பதை முரசு சொல்லத் தயங்கவில்லை. அப்படி சொல்லத் தயங்கிருந்தால் அது பத்திரிகைத் தர்மத்திற்கு ஆகாததாகும்.




**எஸ்.அருணோதயன், புதுக்குடியிருப்பு.**

## கவிதைப் போட்டி இல.931



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.10.2011

**கவிதைப் போட்டி இல. 931 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.**

**இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### பயங்கரம்

பறவைக் கூட்டுக்குள்
குட்டி யானை
மக்கள் வீட்டுக்குள்
மர்ம மனிதர்
இரண்டுமே
பயங்கரம்.

**அ.சந்தியாகோ,**
**தென்னக்கும்புர.**

### தவிப்பு

மனிதப் பொறிக்குள்
சிக்கித் தவிக்கும்
இந்த ஐந்தறிவு
ஜீவனைக் காப்பாற்ற
மனிதநேயம்
கொண்டவர்கள்
யாரும் இவ்வுலகில்
இல்லையா?

**சு.ஜெயரூபன்,**
**பருத்தித்துறை.**

### இது நியாயமா?

குருவிக் கூட்டுக்குள்
யானை புகுந்தது போல்
மக்களின் வீடுகளுக்குள்
கிறீஸ் பூதம்
புகுந்து வேட்டையாடுது...
இது நியாயமா?
இதைக் கேட்க யாரும்
இல்லையா?

**ராணிமகள் றெசிந்தா,**
**சங்கத்தார் வயல்.**

### உனக்குத் தெரியும்!

பிறர் குடும்பத்தை
கலைத்து
சந்தோசம் கொள்ளும்
நீயெல்லாம் ஒரு
தைரியசாலியா
இல்லறத்தை இழந்து
திரியும் இவர்களுக்குத்தான்
தெரியும் அதன்
கஷ்டங்கள்!?

**க.லோகநாதன்,**
**மட்டக்களப்பு**

### 'ஓசை'

அழகான கூட்டுக்குள்
அகப்பட்ட யானை
ஆணையிட்டு கதறி
தும்பிக்கையை உயர்த்தி
அழைக்கும் ஓசை
யானை-இனங்களுக்கு
கேட்கவில்லையோ...?

**வீ.அன்னராசா,**
**கொம்மாந்துறை.**

## கவிதைப்போட்டி இல.928

### பாராட்டுக்குரியது



### அடை காப்பது யாரோ?

யானைக் குஞ்சு
கோழிக் குட்டி போட்டதோ
பானை வயிற்றில்
குட்டி எல்லாம்
நசிவதோ?
சேனைக்குள்ளே
சேர்த்த கம்பு, குச்சுகள்
யானைக்கு
குஞ்சும்
அடைகாக்கப் போதுமோ?

**ஐ.கவிதாயினி,**
**யாழ்ப்பாணம்.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772,
கொழும்பு,
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):- thinamurasu@live.com

## உங்கள் பக்கம்



### வீதி அகலிப்புக் கோரிக்கை

தலைநகர் கொழும்பில் வாகன நெரிசல் மிக்க பௌதிகளுள் காலி வீதியில் வெள்ளவத்தைப் பகுதியில் அமைந்துள்ள W.A சில்வா மாவத்தை சந்திப்பகுதியானது எந்நேரமும் வாகன நெரிலாலும், சனநடமாட்டத்தினாலும் நிறைந்து காணப்படும் ஒரு பகுதியாகும். குறித்த சந்தியில் குறிக்கப்பட்டுள்ள போக்குவரத்துக்கட்டுப்பாட்டு விளக்குகள் சீரற்ற முறையில் இயங்குவதைப் பல காலமாகவே அவதானிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வெள்ளவத்தை புகையிரத நிலைய வீதியிலிருந்து வரும் ஒருவர் குறித்த சந்தியைக் கடக்க வேண்டுமாயின் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. குறித்த வீதியால் வருபவர், அச்சத்தியைக் கடப்பதற்கான பச்சைவிளக்கு சில விநாடிகள் மட்டுமே ஒளிர்கின்றது. இக்குறுகிய காலப்பகுதிக்குள் இரண்டு அல்லது மூன்று வாகனங்கள் மட்டுமே சந்தியைக் கடக்கக்கூடியதாகவுள்ளது. இதனால் புகையிர நிலைய வீதி, எந்நேரமும் வாகனங்கள் நிறைந்த பகுதியாகக் காணப்படுகின்றது. அத்தோடு குறித்த வீதி மிகவும் ஒடுக்கமானதாகவும் காணப்படுவதால் குறித்த வீதியின் மறுபக்கத்தில் பயணம் செய்கின்ற வாகனங்கள் பயனிப்பதற்கு வீதி அகலம் போதாமலும் இருக்கின்றது. குறித்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வெள்ளவத்தை புகையிரத நிலைய வீதியால் பயணிக்கின்ற பொதுமக்களுக்கும், வாகனங்களுக்கும் ஏற்படுகின்ற அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென தினமுரசின் வாரமலரின் உங்கள் பக்கம் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**க.பசுபதிப்பிள்ளை-வெள்ளவத்தை.**

# அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதன் ஊடாகவே பாரிய வேலைத்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும்

## — ஜனாதிபதி —



கண்டி ஜனாதிபதி வாசஸ்தலத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

**நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்லும் தருணத்தில் நாடளாவிய ரீதியாகவுள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் கிராமங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில் கிராமங்கள் குறித்த அனைத்து தகவல்களும் தமக்கு கிடைப்பதாகவும், பாரிய நிதி அவற்றின் அபிவிருத்தியின் பொருட்டு ஈடுபடுத்தியுள்ளதாகவும், அதிகாரத்தில் இருக்கின்ற அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக பாரிய வேலைத்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார்.

மத்திய அரசாங்கமும் மாநகர சபைகளும் ஒரே ஆட்சியின் கீழ் வரும் பட்சத்தில் மாத்திரமே அதனுடைய அபிவிருத்தி தொடர்பாக துரித நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

## முஸ்லிம் காங்கிரசுக்குள் மீண்டும் உட்கட்சி மோதல்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம்.ஹரிசுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல்காசிம் கட்சித் தலைமைத்துவத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிசினால் தனது செயலுக்குக் களங்கம் ஏற்படும் வகையில் பொய்யான பிரச்சாரம் ஏற்பட்டு வருவதாகவும் கட்சியின் ஒழுங்குவிதிகளை மீறியுள்ளதாகவும் பைசால் ஹாசிம் எம்.பி குறிப்பிட்டுள் ளார். இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு பைசல் ஹாசிம் எம்.பி.யினால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் 'தான் கட்சிக்கு விரோதமாக சுயநலத்துடன் செயற்படுவதாக பொய்யான பிரச்சாரங்களில் ஈடுபட்டு வரும் ஹரிஸ் எம்.பிக்கு எதிராகக் கட்சி விதிகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

## காசல்ரீ மின்னிணைப்புக்கு காசோலை வழங்கல்

ஹட்டன் பிரதேசத்தில் டிக்கோயா காசல்ரீ தோட்டத்தில் இதுவரை காலமும் மின்சார வசதியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் மின்னிணைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான காசோலைகள் வழங்கிவைக்கப்பட்டன. நுவரெலியா மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரத்தின் ஆலோசனைக்கமைய குறித்த காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பங்குபற்றிய மத்திய மாகாண சபை உறுப்பினர் சிங் பொன்னையா தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற தொழிற்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கின்ற அதே வேளை தோட்டப்பகுதிகளின் அபிவிருத்தியிலும் தொழிலாளர் தேசிய சங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது என்றார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப் படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் பின்தங்கிய தோட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பயன்படுத்தப் பட்டு வருவதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.சிறிதரன் அங்கு கூடியிருந்த மக்களிடம் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் சர்வதேசத்தை ஈர்க்கும் வர்த்தகக் கண்காட்சி

மட்டக்களப்பில் நாளை ஆரம்பமாகவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் எதிர்வரும் 07,08,09 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கண்காட்சி யை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் சிறுகைத்தொழில் அதிகார சபை, மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் அபிவிருத்தி சம்மேளனம் மற்றும் இலங்கை கண்காட்சி நிறுவனம் என்பவை இணைந்து நடத்துகின்றன.

இக்கண்காட்சியில் 150 காட்சிக்கூடங்கள் நிறுவப்படவுள்ளன. 15 உயர்கல்வி நிறுவனங்கள், 20 வெளிநாட்டு நிறுவனங் கள் என்பன நேரடியாகப் பங்குபற்றுவதுடன் தேசிய மட்டத்திலுள்ள அனைத்து நிறுவனங்களும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கிழக்கு மாகாணத்தின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களும் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

சர்வதேச மட்டத்தின் கவனத்தை ஈர்க்கும் வகை யில் முதல் தடவை யாக மட்டக்களப்பில் நடைபெறவுள்ள இவ் வர்த்தகக் கண்காட்சியைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆரம்பித்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்டியில் அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகம்

கண்டி மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருவதாகவும் கடந்த சில தினங்களில் மட்டும் எட்டு சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஆண்டு ஒன்றில் கல்விபயிலும் ஆறு வயதுடைய சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் இத்துஷ்பிரயோகங்கள் தொடர்பாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ள பொலிசார் தமது உடன் பிறந்த சகோதரனால் சிறுமி ஒருவர் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் ஒன்றும் இடம்பெற்றதாகத் தெரிவித்துள்ளனர்.

## யாருக்கும் எமது வளத்தை பங்குபோட அனுமதிக்க முடியாது

### மீனவர் சங்கத் தலைவர் எஸ்.தவரட்ணம்



இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு இலங்கை மீனவர்கள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 7ஆம் திகதி இந்திய மீன்பிடித்துறை மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இலங்கை மீன்வளத்துறை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அதில் இலங்கை மீன்வளத்தை இந்திய மீனவர்களுடன் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஆராயப்படுமெனவும் செய்திகள் வெளியாகிய நிலையிலேயே இலங்கை மீனவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட மீனவ சங்கத் தலைவர் எஸ்.தவரட்ணம் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதுவரையில் இது தொடர்பாக தம்மிடம் எவ்வித கருத்துக்களையும் அரசு தரப்பினால் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்றும், எனினும் அவ்வாறான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமாயின் தாம் அதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கை மீனவர்கள் படகுகள் மூலம் மீன்பிடிப்பதற்கே அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டு மீனவர்கள் றோலர் போன்ற நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி எமது மீன்வளங்களைக் கொண்டு செல்கின்றனர். இது தொடர்பாக அரசாங்கம் இதுவரையில் எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அதுதவிர மன்னார், மற்றும் கற்பிட்டிப் பிரதேசங்களில் எண்ணெய் அகழ்வு காரணமாக குறிப்பிடத்தக்களவு கடற்பரப்பில் மீன் பிடித்தொழில் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழக மீனவர்களும் அனுமதிக்கப்பட்டால் யாழ்ப்பாண மீனவர்கள் பெருமளவில் பாதிக்கப்படவேண்டி ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

## வைத்தியருக்கு விளக்கமறியல்

முன்னாள் மூர்வீதிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வைத்தியர் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மூர்வீதிப் பகுதியில் பயணம் செய்துகொண்டிருந்த குறித்த வைத்தியரின் வாகனம் ஏழு வயதுச் சிறுவனை மோதியதினால் அச்சிறுவன் பலியாகினான். இதனைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட வைத்தியர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது கொலைக் குற்றம் சாட்டப்பட்ட வைத்தியருக்குச் சார்பாக மன்னார் நீதிமன்றத்திலிருந்த அனைத்துச் சட்டத்தரணிகளும் வாதாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

## முரசம்

# வாய்ச்சொல்லில் வீரரடி!

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை மீண்டும் சமூகத்தோடு இணைக்கின்ற இலங்கை அரசின் வேலைத்திட்டமானது வரவேற்பைப்பெற்றுள்ளது. ஆனால் இந்த நிகழ்ச்சி நிரலானது ஒரு கால நிர்ணயத்தோடும் ஒழுங்கமைப்போடும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது கவனத்தை ஈர்க்கின்றது.

புனர்வாழ்வு முகாமில் இருக்கின்றவர்களின் பெயர்களை முறையாக வெளிப்படுத்தப்படாமை, அவர்கள் குறித்த செய்திகளை உறவினர்கள் கூட அறிந்துகொள்ள முடியாமை என்பவை ஒரு புறமிருக்க, உறவினர்கள் அதாவது மனைவி அல்லது கணவன், பிள்ளைகள் ஆகியோர் தூர இடங்களுக்கு அலைந்து திரிவதும், அந்தரித்துக் கிடப்பதும், புனர்வாழ்வளிக்கப்படுகின்ற முன்னாள் புலிகள் விடயத்தில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளில் திருப்தி அளிக்கக் கூடிய வகையில் இல்லை என்றே உறவினர்கள் கூறுகின்றனர்.

யுத்தம் முடிவடைந்து இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் சரணாகதி அடைந்த அல்லது கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் தொடர்பான விபரத்தை அறிந்துகொள்ள முடியாமல் உள்ள நிலையானது அதிர்ச்சி தருவதாகவே உள்ளது.

இதன் குறைபாடு நிவர்த்திக்கப்பட முடியாமல் உள்ளதா? அல்லது திட்டமிட்ட வகையிலான குறைபாட்டு அம்சமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இதற்கு நல்ல உதாரணமாக அண்மையில் ஜனாதிபதி அவர்களினால் 1600 மறுவாழ்வளிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்ட செய்தியைக் காணலாம். இரண்டரை ஆண்டுகளாக துருவித்துருவி விசாரிக்கப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட வகையில் புனர்வாழ்வளிக்கப்பட்டு எங்கே உறங்க வேண்டும், எங்கே மலசலம் கழிக்க வேண்டும் என்பது உட்பட ஒளிவுமறைவு ஏதுமற்று முழுக்கட்டுப்பாட்டில் இருந்தவர்களின் விபரங்கள் சரியாகத் திரட்டப்படவில்லை என்றும் ஆகையால் ஜனாதிபதி அவர்களினால் விடுவிக்கப்பட்டிருந்தாலும் கூட, அவர்கள் மீதான மேலதிக பதிவுகள் செய்யவேண்டி இருப்பதாலும், அவர்களை விடுவிப்பதில் கட்டம்கட்டமான தாமதங்கள் இருப்பதாக உறவினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதும், ஜனாதிபதியினால் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறப்பட்டவர்கள் உறவினர்களிடம் இன்னும் முழுமையாக ஒப்படைக்கப்படாமல் இருப்பதும் கவலையளிப்பதோடு நகைச் சுவையாகவும் இருக்கின்றது என்கின்றனர் ஆர்வலர்கள்.

பொதுவாகவே தமிழ் மக்களுக்கு வழங்கப்படுகின்ற உறுதிமொழிகளும் அதை ஒட்டி நடைமுறைப்படுத்தப்படுகின்ற விடயங்களும் சொல்லுக்கும், செயலுக்கும் தொடர்பற்றதாகவே உள்ளது என்ற குற்றச்சாட்டுக்களுக்கு இந்தச் சம்பவமும் வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது.

எனவே தமிழ் மக்கள் தொடர்பில் நியாயமானதும் உறுதியானதுமான முடிவுகள் எடுக்கப்படுவதும் நடைமுறைப்படுத்தப்படுவதும் மிகமிக அவசியமாகிறது.

இதேவேளை கொழும்பு மாநகரசபைக்கு நடைபெற இருக்கும் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கேள்விக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கபடத்தனமான பதிலானது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை கையாளக் கூடியவர்கள் யார் என்பதை உணர்ந்து தலைநகர் வாழ்தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென திரு.சம்பந்தன் கூறியிருக்கின்றார்.

இக்கூற்று, நேரடியான ஆதரவை எதிர்பார்த்திருந்த ஜனநாயக மக்கள் முன்னணியின் மனோ கணேசனுக்கு ஏமாற்றமாகும். ஏனென்றால் வடக்கில், கூட்டமைப்புக்கு ஆதரவாக நேரடியாகவே களத்தில் குதித்திருந்தார். அவ்வாறான நேரடி ஆதரவைக் கூட்டமைப்பு மனோகணேசனுக்கு வழங்கவில்லை.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆகியிருந்தால் தமிழ் மக்களுக்கு இத்தனை அழிவுகள் ஏற்பட்டிருக்காது. ஆகவே, தமிழ் மக்களைப் புரிந்துகொண்ட கட்சி என்ற வகையில் கூட்டமைப்பு தமக்கே ஆதரவு அளித்திருப்பதாக ஐ.தே.கட்சி தொப்பியைப் போட்டுக்கொண்டுள்ளது.

மறுபக்கத்தில் தமிழ் மக்களின் ஆதரவு இருந்தால் அரசாங்கம் பிரச்சினையைத் தீர்க்க உதவும் என்ற வகையில் கூட்டமைப்பின் கூற்று இதையே வெளிப்படுத்துகின்றது என அரச தரப்பு வேட்பாளர்கள் கூறுகின்றனர்.

இவற்றைப் பார்க்கும்போது கூட்டமைப்பின் கபடத்தனமான அரசியல் போக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல தலைநகர் வாழ் தமிழர்களுக்கும் குழப்பத்துக்குரியதாகவே உள்ளது என்பது தெளிவாகின்றது.

**மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை**

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# தஞ்சக் கோரிக்கைகள் நிராகரிப்பு சர்வதேசம் நடவடிக்கை

எக்ஸ்ரே ரிப்போர்ட்

சிவன்

இலங்கையில் போர் நடந்த காலப்பகுதியில் அகதிகளாகச் சென்ற இலங்கை தமிழ் மக்களை அரவணைத்து அவர்கள் வாழ்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதில் மேலைநாடுகள் பின்நிற்கவில்லை.

1983 இல் நடைபெற்ற இனக்கலவரம் பற்றிய கோரக் கதைகளையும் அதன்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட வேதனைகளையும் நன்கு அறிந்த மேலை நாடுகள் இலங்கைத் தமிழ் மக்களை பரிதாபக் கண் கொண்டே பார்த்தன. அதன் பிரதிபலிப்பே அகதிகளாக சென்றவர்களுக்கு அதிகளவான வரவேற்பு கிடைக்கக் காரணமாக இருந்தது.

அக்கால கட்டத்தில் அகதிகளாகச் சென்றவர்கள் உண்மையிலேயே உள்நாட்டு யுத்தத்தினால் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டவர்கள் யுத்தத்துக்கு அகப்பட்டு பாதிப்புக்கு உள்ளானவர்கள் அல்லது புலிகளை அடக்குவதற்காக அரச படைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் எதேச்சையாக அகப்பட்டுக் கொண்ட அப்பாவிகளாக இருந்தனர். சோதனைகளில் தப்பி ஓடியவர்களுக்கு வசதி வாய்ப்புகள் கிடைத்ததும் சாதனை செய்ய வேண்டும் என்ற வெறி ஏற்பட்டது.

கடின உழைப்பை வெளிப்படுத்தினார்கள். தாம் உண்டு தம் வேலை உண்டு எனக் கட்டுக்கோப்புடன் வாழ்ந்தார்கள். இதனால் மேலைநாடுகளின் பார்வையில் இலங்கைத் தமிழர்கள் கடின உழைப்பாளிகள் ஆகவும் சோலிசுறட்டு அற்றவர்களாகவும் அடையாளப்படுத்தப்பட்டனர். இதனால் நல்ல மரியாதையும் கிடைத்தது.

இதன்விளைவாக காலப் போக்கில் இலங்கையில் இருந்து அகதி அந்தஸ்து கோருபவர்கள் மீது மென்போக்கை கடைப்பிடித்த மேலைநாடுகள் அகதி அந்தஸ்துக் கோருபவருக்கு உண்மையிலேயே நாட்டில் அச்சுறுத்தல் உள்ளதா என்ற விடயங்களைக் கூட ஆழமாக ஆராயாமல் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். மேலை நாடுகளில் இந்த மென் போக்கை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட தமிழ் மக்கள் மேலை நாடுகளை நோக்கி படையெடுக்கத் தொடங்கினர். இக்காலப் பகுதிகளின் அகதி அந்தஸ்து கோரியவர்களில் மிகக் குறைந்த வீதத்தினரே உள்நாட்டு யுத்தத்தினால் பாதிப்புக்களைச் சந்தித்தவர்களாக இருந்தனர். ஏனையவர்கள் தொழில் வாய்ப்புக்களுக்காவும் வெளிநாட்டு மோகத்தினாலும் வசதி வாய்ப்புகளைத் தேடியும் சென்றிருந்தனர். இவர்கள் அகதி அந்தஸ்து கோருகின்றபோது நாட்டில் தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகவே தெரிவித்தனர். அதிலும் பெரும்பாலானவர்கள் தாம் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தாகவும் அதனால் இலங்கை அரச படைகளினால் அச்சுறுத்தல் இருப்பது போன்ற கதைகளையே தெரிவித்திருந்தனர். அதாவது இது வெறும் கட்டுக்கதைகள் என்பதை மேற்குலக அதிகாரிகள் அறிந்திருந்த போதிலும் இவர்களுக்கான அகதி அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு ‘லேடி ஓசன்’ என்ற கப்பல் கனடாவை சென்றடைந்த பொழுது கனேடிய அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், “490 இலங்கையர்கள் வந்திருக்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் 490 விதமான கதைகளுடன் வந்திருப்பார்கள். அதில் பெரும்பாலானவை கற்பனைக் கதைகளாக இருக்கும்” என நகைச்சுவையாக ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார்.

இதிலிருந்து அகதி அந்தஸ்து கோருபவர்களில் பெரும்பாலானவர்கள் கதைவிடுகின்றார்கள் என்று தெரிந்துகொண்டே மேலைநாடுகளில் கடந்த காலங்களில் அகதி அந்தஸ்து வழங்கியது என்பது தெளிவாகிறது. இதற்குக் காரணம் இலங்கையிலிருந்து செல்பவர்கள் மூலம் குறைந்த ஊதியத்துடன் அதிகமான தொழிலைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற சுயநலனும் மறைந்திருந்தது என்பது மறுப்பதற்கில்லை.

இவ்வாறு வரையறை இன்றி இலங்கையிலிருந்து படையெடுத்துச் சென்ற அனைவரையும் அகதிகளாக ஏற்றுக் கொண்டதால் அந்தந்த நாடுகளில் இலங்கைத் தமிழ் சமூகத்தின் தொகை கணிசமான அளவில் அதிகரித்தமை ஒருபுறம் இருக்க இலங்கையில் உதவாக்கரைகளாவும் பெற்றோர்களுக்கு கட்டுப்படாதவர்களும், குடும்பப் பொறுப்பற்ற ஊதாரிகளாவும் இருந்தவர்களும் அங்கு போய்ச் சேர்ந்து கொண்டனர். இவ்வாறானவர்களுக்கு மேலைநாடுகளின் கலாசாரமும் வாழ்க்கை முறையும் வழங்கிய சுதந்திரம், கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கை முறைக்கு வழிகாட்டியது. இஷ்டத்துக்கு ஆட்டம் போடத் தொடங்கினர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் இலங்கை தமிழர்களுக்கு அளவுக்கு அதிகமான அனுமதி கொடுத்துவிட்டோமோ என்று மேலைநாடுகளை சிந்திக்க வைத்தது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், சர்வதேச அரசியல் மாற்றங்கள், 2001 இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின்னர் உலகில் ஏற்பட்ட மாற்றங்கள், இவை எதனையும் கிரகித்துக் கொள்ளாது இஷ்டத்துக்கு செயற்பட்டுக் கொண்டிருந்த புலம்பெயர் சமூகத்தின் நடவடிக்கைகள் மேற்குலகை எச்சரிக்கை அடைய வைத்தது.

2009 இலங்கையில் இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் புலிகளைக் காப்பாற்றுவதற்காக புலி ஆதரவாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என்பவற்றில் எல்லாம் இலங்கையிலிருந்து புதிதாக புலம்பெயர்ந்து சென்று பூரணமாக அகதி அந்தஸ்து ஏற்றுக் கொள்ளப்படாதவர்களும் பிரஜா உரிமை கிடைக்காதவர்களுமே முன்னிறுத்தப்பட்டனர். இவற்றை ஒழுங்கு செய்தவர்கள் அந்தந்த நாடுகளில் நீண்ட காலமாக வாழ்ந்து, பிரஜா உரிமை உடையவர்கள் இருந்த போதிலும் தமது பிரஜா உரிமைக்கு பங்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற அக்கறையில் பெரும்பாலானவர்கள் மறைந்து இருந்தே செயற்பட்டனர். ஆனால் அகதி அந்தஸ்துக்காக காத்திருப்பவர்கள் முன்னுக்கு நின்றனர். இதற்கு, ஒருவேளை புலிகள் அழிக்கப்பட்டு நாட்டில் யுத்தம் முடிவடைந்த தோற்றம் ஏற்படுமானால் தாங்கள் நாடு திரும்ப வேண்டி ஏற்பட்டு விடும் என்ற காரணத்தால் புலிகள் அழியவும் கூடாது, யுத்தம் தொடர வேண்டும் என்ற குறுகிய நோக்கத்துடனேயே பலர் போராட்டங்களில் முன்நின்று செயற்பட்டனர்.

> **முன்பு அகதி அந்தஸ்தை கோருவதற்குப் பயன்படுத்திய “புலி” என்ற வார்த்தையே இப்போது பெரும்பாலானவர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட காரணமாக இருக்கின்றது. புலிகள் சார்பானவர்களைத் தமது நாட்டில் வாழ அனுமதிப்பது எதிர்காலத்தில் தமக்கும் தலைவலியைக் கொடுத்து விடுமோ என மேற்குலகம் எண்ணுவதாகத் தெரிகிறது.**

இதனை எல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த மேற்குலகு இப்பொழுது அப்படியானவர்களை குளறுபடியாளர்கள் என அடையாளப் படுத்திவிட்டது. இப்படியானவர்களை தொடந்தும் வைத்திருந்தால் எப்பொழுதுமே தமக்கு தலைவலிதான் என்பதே மேற்குலகின் எண்ணமாக இருக்கின்றது.

அண்மையில் பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்ப தீர்மானிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆர்ப்பாட்டங்களில் முன்னுக்கு நின்று கொடி பிடித்தவர்கள் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்மூலம் மேற்குலகின் நிலைப்பாடு தெளிவாகிறது.

முன்பு அகதி அந்தஸ்தை கோருவதற்கு பயன்படுத்திய ‘புலி’ என்ற வார்த்தையே இப்போது பெரும்பாலானவர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட காரணமாக இருக்கின்றது.

அண்மையில் கனடாவிலும் புலி உறுப்பினர்கள் என உறுதிப்படுத்தப்பட்ட இருவருக்கும் நாடு கடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு எதிராக மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களை இறுக்கிக்கொண்டு வருகின்ற சம காலத்தில் புலிகள் அல்லது புலி ஆதரவாளர்கள் என அடையாளப் படுத்தப்படுபவர்கள் நாடு கடத்தப்படுவதானது சாதாரண மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

ஆனால் மேற்குலகம் இவ்விடயத்தில் தெளிவாகவே இருக்கின்றது. அதாவது இறுதி யுத்த காலத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் கண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் அக்கறையுடன் இருக்கின்ற மேலைநாடுகள் புலிகள் விடயத்தில் சற்றுக் கடுமையான போக்கையே கடைப்பிடிக்கின்றன.

புலிகளிடம் காணப்பட்ட கடும்போக்கு, சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு இசைந்து போகாத பிடிவாதக் குணம் என்பவற்றினால் பேச்சுவார்த்தைக் காலத்தில் ஏற்பட்ட மனக்கசப்பு மேற்குலகின் அடிமனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. இது புலிகள் அழியும்போது மேற்குலகம் மௌனம் காத்ததற்கு காரணமாக இருந்தது. இப்போதும் அதுவே தொடர்கிறது. இதனாலேயே புலிகள் சார்பானவர்களை தமது நாட்டில் வாழ அனுமதிப்பது எதிர்காலத்தில் தமக்கும் தலைவலியைக் கொடுத்து விடுமோ என மேற்குலகம் எண்ணுவதாகத் தெரிகிறது. இதன் விளைவுதான் தொடரும் நாடு கடத்தல் படலங்கள்.

# இறுதியில் நெடியவனும் காஸ்ரோவும் தொடர்பைத் துண்டித்தனர்

## துரோகத்தனம் தாண்டவமாடியது

**புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்**

**நன்றி : இணையம்**



> **தலைவர் நாட்டை விட்டு வெளியேற மறுத்தமையால் அவரை இலங்கையின் அடர்ந்த காடு ஒன்றில் அவரையும் சில பொறுப்பாளர்களையும் இறக்கிவிட்டு அண்ணி மற்றும் துவாரகா, பாலச்சந்திரன் பொட்டரின் மனைவி பிள்ளை ஆகியோரை உலங்கு வானூர்தி மூலம் அந்த ஒதுக்கப்பட்ட கப்பலுக்கு கொண்டு செல்லப்படுவர் எனவும் தலைமை ஒழுங்கு செய்திருந்தது. இதற்காக அந்தக்கப்பலில் கே.பி இருப்பார் எனவும் சொல்லப்பட்டது. மிக ஆபத்தான வாழ்வா சாவா என்ற இந்த நடவழக்கைகளை செய்ய நமது வான்படை தயாராக இருந்தது. அத்துடன் இந்த நடவழக்கை வெற்றி பெற்றால் மேலும் சிலர் கொண்டு செல்லப்படுவர் எனவும் முழவெடுக்கப்பட்டது.**

இத்திட்டத்தின் படி வன்னியை விட்டு நகரமாட்டேன் என பிடிவாதமாக அது-வரை நாழும் இருந்த தலைவரை சாள்ஸ் மூலமாக தலைவரை சம்மதிக்க வைத்ததுடன் உடனடியாக நடைமுறைப்படுத்த ஆவன செய்யும்படி கே.பி யிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நகர்வுக்கு ஏறத்தாள 3 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் பணம் தேவை என்றும் கே.பி சொன்னதற்கு, அதற்கான அனைத்து ஒழுங்குகளையும் நெடியவன் மற்றும் காஸ்ரோ மூலம் கே.பிக்கு கொடுக்க ஒழுங்கு செய்யப்பட்டது. உடனடியாக பணத்தை கே.பி இடம் கொடுக்குமாறும் தலைமைப் பீடத்தால் நெடியவனுக்கும் காஸ்றோவுக்கும் உத்தர விடப்பட்டது.

அன்றைய காலத்தில் நமது புலம்பெயர் நிதிகளுக்கு இந்த இருவரும் தான் பொறுப்பு. ஆனால் நடந்தது வேறு! சார்ள்ஸ் அன்ரனி தலைவரை பாதுகாக்கும் பொறுப்பேற்றபின் அவரது குடும்ப அங்கத்தவர்கள் முக்கிய நபர்களைக் காப்பாற்ற ஒழுங்கு செய்யும்படி கே.பி இடம் சொல்லப்பட்டது . அதற்கு கே.பி வான்வழி மூலம் காப்பாற்றுவதற்கான முதற்கட்ட ஏற்பாடுகளை செய்துவிட்டு அதற்கான பணத்தை தரும்படி சாள்சிடம் மறுபடி தொடர்பு கொண்டார்.

இத்திட்டத்தின்படி கடற்படை கண்ணில் படாத தொலைவிலுள்ள ஆபிரிக்க நாடுகள் அல்லது நமது நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் ஆசிய நாடு ஒன்று இவை ஏதாவது ஒரு நாட்டுக்கு கொண்டு செல்வது எனவும் இதற்காக கே.பி இந்த நாடுகளின் சிரேஷ்ர தலைவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களது சம்மதத்தைப் பெற்றும் இருந்தார் என்று எங்களுக்கு சொல்லப்பட்டது. எனவே நாம் இந்த மிகவும் அபாயகரமான முயற்சியை எடுக்க முடிவுசெய்து கொண்டோம்.

அதன்படி மிக வறிய ஆபிரிக்க நாடு ஒன்றின் துறைமுகத்திலிருந்து கப்பல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உக்ரேய்ன் நாட்டிலிருந்து ஒரு உலங்கு வானூர்தியையும் வாங்க ஒழுங்கு செய்யப்பட்டு அதன் மாதிரியும் அனுப்பப்பட்டிருந்தது. இதை ஓட்டுவதற்காக நமது வான்படையைச்சேர்ந்த மிக பயிற்சி பெற்ற இரு விமானிகள் வன்னிக்கு உலங்கு வானூர்தியை கொண்டு செல்வதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் சாள்ஸ் அன்ரனி தவிர மற்றைய தலைவரின் குடும்பம் அவர்களுடன் பொட்டுஅம்மான், வேறு முக்கிய சில பொறுப்பாளர்கள் உட்பட முதலில் 15 பேரை கொண்டு செல்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆனாலும் தலைவர் நாட்டை விட்டு வெளியேற மறுத்தமையால் அவரை இலங்கையின் அடர்ந்த காடு ஒன்றில் அவரையும் சில பொறுப்பாளர்களையும் இறக்கிவிட்டு அண்ணி மற்றும் துவாரகா, பாலச்சந்திரன் பொட்டரின் மனைவி பிள்ளை ஆகியோரை உலங்கு வானூர்தி மூலம் அந்த ஒதுக்கப்பட்ட கப்பலுக்கு கொண்டு செல்லப்படுவர் எனவும் தலைமை ஒழுங்கு செய்திருந்தது. இதற்காக அந்தக் கப்பலில் கே.பி இருப்பார் எனவும் சொல்லப்பட்டது.

மிக ஆபத்தான வாழ்வா சாவா என்ற இந்த நடவடிக்கைகளை செய்ய நமது வான்படை தயாராக இருந்தது. அத்துடன் இந்த நடவடிக்கை வெற்றி பெற்றால் மேலும் சிலர் கொண்டு செல்லப்படுவர் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தத திட்டத்தை செயற்படுத்த தேவையான மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை நோர்வேயில் இருந்த நெடியவன் மற்றும் காஸ்ட்ரோ,கே.பி இடம் சிறிது நேரத்தில் கொடுப்பதாக எமக்கு ,அதாவது சாள்ஸுக்கு காஸ்ரோ சொல்லியிருந்தார். இங்குதான் காஸ்ரோவினதும் நெடியவனதும் சூழ்ச்சி நடந்தது. ஆம் அந்தப் பணத்தை அவர்கள் கே.பி இடம் இந்தா அனுப்புகிறோம் அந்தா அனுப்புகிறோம் அனுப்பிவிட்டோம் இன்னும் சிறிது நேரத்தில் உலங்கு வானூர்தி வரும் என்றெல்லாம் அந்த நெடியவும் காஸ்ரோவும் சொல்லிக்கொண்டே இருந்தனர். ஆனால் செய்யவே இல்லை. நேரம் நகர்ந்து கொண்டே இருந்தது. படைகளும் நெருங்கிக்கொண்டே இருக் கிறார்கள், என்ன செய்வதென்று தெரியாது எமக்குள்ளே ஒரு தடுமாற்றத்துடன் போராட்டம் பணம் வரவில்லை என கே.பி எம்மை குடைந்து கொண்டே இருக்கிறார்.

நாம் நெடியவனையும் காஸ்ரோவையும் தொடர்புகொண்டால் அவர்கள் அனுப்பி விட்டதாக சொல்லுகிறார்கள் . நமக்கு என்ன நடந்து கொண்டு இருக்கின்றது என்று எதுவும் புரியவில்லை.தொடர்புகளும் துண்டித்துக்கொண்டு வருகின்றது.நாம் நெடியவனை நெருக்கிக்கொண்டிருக்க கடைசி நேரத்தில் இந்த நெடியவனும் காஸ்ரோவும் தொடர்பையும் துண்டித்து விட்டார்கள். என்ன செய்ய முடியும் ?

**(தொடரும்...)**

---

# வெளியிடப்பட்ட ஸ்பெக்ட்ரம் கடிதத்தின் 'சிதம்பர' இரகசியம் என்ன?

**தமிழக அரசியல்**

**ரிஷி**



ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக, மத்திய அரசுக்குள்ளேயே இழுபறி க்ள் தொடங்கி விட்டதாகத் தெரிகின்றது. இதில் உட்துறை அமைச்சர் சிதம்பரம், நிதிய மைச்சர் பிரணாப் முகர்ஜி என்று இரு பார்ட்டிகள் நிழல் யுத்தத்தில் ஈடுபடுகின்றன. உள்ளே நடைபெறும் புகைச்சல்கள் வெளியே தெரியாதபடி கஷ்டப்பட்டு அமுக்கப்பட்டாலும், சில-சில கதைகள் கசியத்தான் செய்கின்றன.

புகைச்சலுக்குக் காரணமே, நிதி அமைச்சினால் எழுதப்பட்ட கடிதம், வெ-ளியானதுதான். அந்தக் கடிதம் உட்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தை மறை முகமாக குற்றஞ்சாட்டுகிறது.

இதில், இரு விடயங்களில் பனிப்போர் நடக்கின்றது. முதலாவது, கடிதத்தில் எழுதப்பட்ட விஷயங்கள் ஏன் எழுதப்பட்டன என்பது. இரண்டாவது, கடிதம் எப்படி வெளியானது அல்லது, ஏன் வெளியே வர வைக்கப்பட்டது என்பது. இந்த இரு விடயங்களிலும், காங்கிரஸ் கட்சிக்குள் உள்ள அதி-கார மோதல் இருப்பதாகவே கூறப்படுகின்றது. அதாவது, மன்மோகன் சிங்குக்கு அடுத்த படியாக, யாருடைய கை ஓங்க வேண்டும் என்ற மோதல். மன்மோகன் சிங், தொடர்ந்தும் பிரதமராக நீடிப்பதில் சில கேள்விக்குறிகள் உள்ளன. அவரேகூட, பிரதமராக நீடிப்பதில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை என்கிறார்கள் அப்படியான நிலையில், காங்கிரஸ் அதிகார மட்டத்தில் இருந்து வரக்கூடிய அடுத்த பிரதமர் யார் என்பதில்தான் இழுபறி. ராகுல் காந்தி உடன-டியாக பிரதமர் நாற்காலிக்குத் தயாராக இல்லை என்ற நிலையில், இடைக்கால பிரதமர் ஒருவர் தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியம் என்று காங்கிரஸ் தலைமை நினைக்கின்றது.

அதற்கு இருக்கும் இரண்டு தெரிவுகளும், பிரணாப் முகர்ஜியும், ப.சிதம்பரமும்தான்! இதனால்தான் ஆளையாள் இழுத்து வீழ்த்த சதி செய்கிறார்களோ என்று, இரு தரப்புமே எதிர்த்தரப்பை சந்தேகப்படுகின்றது.

ப.சிதம்பரத்துக்கு பிரதமரின் ஆதரவு உள்ளது உண்மைதான். இதனால் அவர் நிதியமைச்சு வேண்டுமென்றே இந்தக் கடிதம் பற்றிய தகவலை யாருக்கோ கசியவிட்டது என்று பிரதமரிடம் புகார் செய்தார் என்கிறார்கள்.

பிரதமர் விசாரித்தபோது, அப்படியான செயற்பாடு எதிலும் தான் ஈடுபடவில்லை என்றிருக்கிறார் பிரணாப். நேரில் விளக்கம் கொடுத்தது போக, கடந்த புதன்கிழமை இந்த விவகாரம் குறித்து பிர-தமர் மன்மோகன் சிங்குக்கு நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாகத் தெரிகிறது. கடிதம் 4 பக்கங்களில் உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.


இவர், அவருக்கு இரகசியமாக எழுதிய கடிதம் பற்றி எப்படி கதை லீக் ஆகிறது? அதுவும் கடிதம் எத்தனை பக்கங்களைக் கொண்டது என்ற விபரம் உட்பட எப்படி வெளியே தெரியவருகிறது? இதெல்லாம் இன்வெஸ்டிகேஷன் ஜர்னலிசம் ஒன்றும் கிடையாது.

இதற்குள்ள மிகச் சுலப-மான பதில், குறிப்பிட்ட இரு விருந்துபசாரங்களில் ஒன்றுதான், கடிதத்தை லீக் செய்துள்ளது.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)




# பிரச்சினைகளை எதிர்கொள்வது எப்படி?




என்னதான் பெண்கள் படித்துவிட்டு வேலைக்குப் போய் ஆண்களுக்கு நிகராகச் சம்பாதித்தாலும் அவர்கள் ஆண்களைப் போல சுதந்திரமாக நடமாட முடிவதில்லை. வீட்டை விட்டு வேலைக்காகவோ, படிப்பதற்காகவோ வெளியே செல்லும் பெண்ணாகட்டும், வீட்டுக்குள்ளேயே இருக்கும் பெண்ணாகட்டும் அவர்களுக்கு ஆண்களால் எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் ஏற்படலாம்.

தங்களைப் பாதுகாத்துக் கொள்ள எப்போதும் அவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். பெண்ணாகப் பிறந்துவிட்டாலே இந்த உலகில் பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. ஆண்களால் பல பிரச்சினைகள் பெண்களுக்கு எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் நிகழலாம்.

அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் எச்சரிக்கை உணர்வுடன் எப்போதும் இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால் இன்றைய இளம் பெண்கள் பலரும் “எங்களுக்கு அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது” என்ற நம்பிக்கையுடனேயே இருக்கிறார்கள். அதனால் அவர்கள் எந்த ஆபத்தைப் பற்றியும் கவலைப்படாமல் இருக்கிறார்கள்.

இப்படி இருப்பதனால் அவர்களுக்கு உண்மையிலேயே ஆபத்து நேரக்கூடிய சந்தர்ப்பங்களில் எதுவும் செய்ய முடியாமல் அதிர்ச்சியால் உறைந்து போகிறார்கள். இந்த நிலையை மாற்ற பெண்கள் எப்போதும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும். ஆபத்துகளைச் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும். காலம், இடம் அறிந்து செயற்படத் தயாராக இருக்க வேண்டும்.

# முடி உதிர்வைத் தடுக்க...



முட்டை வெள்ளை கருவை நன்கு அடித்து தலையில் தேய்த்து, ஊறவைத்து மாதம் இரண்டு முறை குளித்து வந்தால் பளபளக்கும் உங்கள் கூந்தல்.

முடி உதிர்வதை தடுக்க அதிகம் அயன், விற்றமின் நிறைந்த உணவு வகைகளை சாப்பிட்டு வரவேண்டும்.

இன்று முக்கால் வாசி பெண்கள் தலைக்கு எண்ணெயே பூசுவது கிடையாது. அது முற்றிலும் தவறு. தலைக்கு தவறாமல் தேங்காய் எண்ணெய் தடவ வேண்டும் அதிகம் எண்ணெய் பசை உள்ளவர்கள் வாரம் ஒரு முறை தடவினால் போதும்.

எண்ணெய் குளியல் மிகவும் அவசியம். சிறிது நல்ல எண்ணெயில் இரண்டு மிளகு, பூண்டு இவை இரண்டையும் போட்டு சிறுது நேரம் குறைந்த தீயில் காயவைத்து தலையில் தடவி சீயக்காய் தேய்த்து குளித்து வந்தால் உடல் சூடு தணியும். முடி உதீர்வதையும் தடுக்கலாம்.

கறிவேப்பிள்ளை மற்றும் மருதாணி இரண்டையும் அரைத்து தலையில் தேய்த்து மாதம் இரண்டு முறை குளித்து வந்தால் இளநரையை தடுக்கலாம்.


# கர்ப்பகால படுக்கை ஆய்வு

தாய்மை அடைந்த பெண்கள் பேறுகாலத்திற்கு முந்தைய இரவுகளில் ஒரு சில முறை மட்டும் சிறுநீர் கழிக்கக் கழிவறைக்கு சென்றால் அவர்களுக்கு சுகப்பிரசவத்திற்கு அதிக வாய்ப்பிருப்பதாக நியூசிலாந்து நாட்டின் மருத்துவ ஆய்வில் தெரியவந்துள்ளது.

பிரசவத்துக்கு முந்தைய மாதத்தில் பகலில் உறங்குவதும், இரவில் நீண்ட நேரம் தூங்கிக் கழிப்பதும் நல்லதல்ல என்றும், தாய்மார்கள் பிரசவத்திற்கு சில தினங்களுக்கு முன்பிருந்து இடதுபுறமாக ஒருக்களித்து படுத்து உறங்குவது பிரசவத்தை சிக்கலாக்கலாம் என்றும் இந்த ஆய்வு கூறுகிறது.

கர்ப்பமான பெண்கள், முதுகு தரையில் படும்படி மல்லாந்து படுப்பது அல்லது வலதுபுறம் ஒருக்களித்து படுத்திருந்தால் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு இரத்த ஓட்டம் சீராக இருக்கும் என்கிறது இந்த ஆய்வு.

கர்ப்பிணிகள் கடைப்பிடித்துவரும் ஒழுங்கற்ற பழக்கவழக்கங்களால் உலகில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 25 இலட்சம் பெண்களுக்கு சுகப்பிரசவம் ஏற்படாமல் போகிறது என்றும் அந்த ஆய்வு குறிப்பிடுகிறது.








## சமையல் குறிப்பு

# கோஸ் பொரியல்

தேவையான பொருட்கள்

முட்டைகோஸ் - 1.'.2 கிலோ
வெங்காயம் - பெரியது 1
மிளகாய் வத்தல் - 5
எண்ணெய் - 1 தேக்கரண்டி,



பாசிப்பருப்பு - 2 தேக்கரண்டி, கடுகு - சிறிதளவு,
கறிவேப்பிலை - சிறிதளவு, உப்பு - தேவையான அளவு,
தேங்காய் துருவல் - 3 தேக்கரண்டி

**செய்முறை:**

முட்டைகோஸை பொடியாக நறுக்கி தண்ணீரில் கழுவி தண்ணீரை வடித்துவிடவும். பின் கோஸை வேக வைக்க வேண்டும். அதனுடன் பாசிப்பருப்பையும் சேர்த்துக் கொள்ளவும். தண்ணீர் சேர்க்கத் தேவையில்லை.கோஸில் இருக்கும் தண்ணீரே போதும். அவ்வப்போது கிளறி விட்டுக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும். பின் வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை, வெங்காயம், மிளகாய் வத்தல் போட்டுத் தாளிக்கவும். கோஸ் வெந்தவுடன் தாளித்த கலவையும், உப்பும், தேங்காய்துருவலும் சேர்த்து நன்றாகக் கிளறவேண்டும். சிறிது நேரம் மூடி வைத்துப் பின் பரிமாறினால் சுவையாக இருக்கும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 289**

கேள்வி : கர்ப்பிணிப்பெண்கள் பிரசவத்துக்கு ஒருசில தினங்களுக்கு முன் எவ்வாறு படுக்கக் கூடாது?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 288**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **17.10.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 287 இற்கான வீடை:-** பொருளாதார அமைப்பு.
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:-** எஸ்.மல்லிகா, லெவலன் டிவிசன், லெவலன் குரூப், புபுரெஸ்ஸ.

**289**

பெயர் : ..........................................


முகவரி : ..........................................
..........................................
..........................................

தே.அ. அட்டை இல : ..........................................

விடை : ..........................................

கையொப்பம் : ..........................................

# ஆண்ட பரம்பரையின் நீண்ட நினைவுகள்



யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தை பாதுகாக்கும் நோக்குடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறைக் கலைக்கேசரியின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட 'யாழ்ப்பாண வாழ்வியல்' எனும் தலைப்பிலான கண்காட்சியானது கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட வளாகத்தில் நடைபெற்றது.

நாகரீகம், தகவல் தொழில்நுட்பம் என்பவற்றின் கவர்ச்சிகரமான முன்னேற்றத்தினால் படிப்படியாக மறைந்து போகின்ற யாழ். மக்களின் வரலாற்றுப் பாரம்பரியங்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும். அதுபற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்ற யாழ்.பல்லைக்கழக வரலாற்றுத்துறையினரின் நோக்கிற்கமையவே இக்கண்காட்சி உருவாக்கம் பெற்றிருந்தது.


யாழ்ப்பாணத்து வரலாறு, மதம், மொழி, கலை, வாழ்க்கை முறை, குடும்ப உறவுகள், சமய நம்பிக்கைகள், என்பவற்றையெல்லாம் உள்ளடக்கியதாக இந்த வாழ்வியல் கண்காட்சி அமைந்திருந்தது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வாழ்வியல் என்பதும் குறிப்பிட்ட காலத்தையும் குறிப்பிடலாம். ஆனால் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த யாழ். மக்களுடைய அனைத்துவிதமான பண்பாட்டு விழுமியங்களையும் இக்கண்காட்சி உள்ளடக்கியிருந்ததினால் 'யாழ்ப்பாண வாழ்வியல்' எனும் பெயரைப் பயன்படுத்தியதாகக் கூறுகிறார் யாழ்.பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் P.புஸ்பரட்ணம் அவர்கள்.


இந்தக் கண்காட்சியானது யாழ்ப்பாணத்தில் மனிதக் குடியேற்றம் ஆரம்பித்த காலம் தொடக்கம் அண்மைக்காலம் வரையான அனைத்து வாழ்வியல் முறைமைகளையும் முடிந்தவரையில் எடுத்துக் காட்டுவதை இலக்காகக் கொண்டு இதன் ஏற்பாட்டாளர்கள் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதை கண்காட்சியின் வெளிப்பாடு வெளிப் படுத்தியது. தொல்லியல் முறை அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால மக்கள் பயன்படுத்திய ஒவ்வொரு பொருட்கள், அவர்களிடையே காணப்பட்ட சமூக, சமய நம்பிக்கைகள், கலையுணர்வுகள் தொடர்பான சான்றுகள் முக்கிய அம்சமாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் குடியேறிய மக்கள் பிற சமூகத்துடனும், நாடுகளுடனும் எவ்வாறு உறவை ஏற்படுத்துகிறார்கள் என்பதற்கு பல உதாரணங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக நாணயங்கள், கண்ணாடிப்பொருட்கள், போன்ற வற்றைக் குறிப்பிடலாம். தொல்லியல் என்ற வகையில் இந்தக் கண்காட்சி முக்கியம் பெற்றிருந்ததற்கு யாழ்ப்பாண மக்கள் தமது கடந்த கால வரலாறுகளை அறிந்துகொள்வதில் காட்டிய ஆர்வமும், விருப்பும் மெச்சத்தக்க வகையில் அமைந்திருந்தது.

மக்களின் தொடர்ச்சியான வரலாற்றைத் தெரிந்துகொள்ளும் வகையில் காலத்துக்குக் காலம் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள், மற்றும் அவை கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலிருந்த தொல்பொருட் சான்றுகள் இக்கண்காட்சியில் காட்டப்பட்டதன் மூலம் கடந்த 2500 ஆண்டுகளுக்கும் மேலாக யாழ்ப்பாண மக்களின் வரலாறு தொடர்கிறது என்பது பல்வேறு தரப்பினருக்கும் மீண்டும் ஒரு முறை நிரூபித்துக்காட்டப்பட்டுள்ளது.




அண்மைக்காலமாக குறுகிய சிந்தனைகளை யும், கபடத்தன உள்நோக்கங்களையும் கொண்ட ஒரு சிலரால் யாழ்ப்பாணத்து வரலாறு பற்றியும், யாழ்ப்பாண மக்களின் பூர்வீகம் பற்றியும் கூறப்பட்டு வருகின்ற கருத்துக்களுக்கு அல்லது கதைகளிற்குப் பதில் கூறும் வகையில் இக்கண்காட்சி அமைந்திருக்கின்றது என்றால் மிகையாகாது. தற்போது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கின்ற நாகரீக மாற்றம், சர்வதேச பண்பாட்டு அம்சங்கள், உலகமயமாக்கல் என்பவற்றினால் கவரப்பட்டு சுதேச பண்பாட்டு அம்சங்களை மறந்துபோவது அல்லது அவற்றை இல்லாமல் செய்வது என்பது அண்மைக் காலமாக தீவிரமாக நடந்து வருகின்ற நிலையில் அரங்கேற்றப்பட்டிருக்கின்ற கண்காட்சியில் வைக்கப்பட்ட ஆதாரங்கள் கடந்த 2000 ஆம் ஆண்டுக்கும் மேலாக தொடர்ச்சியான மொழி வழக்கு உண்டு என்பதையும் அதுபோன்று இறுக்கமான பண்பாடுகள் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதையும் பறைசாற்றுகின்றது. இது யாழ். மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.



கடல்கடந்த தேசமெல்லாம் தங்கள் ஆதிக்க வீச்சைப் பரப்பி ஆண்ட பரம்பரையின் நீண்ட வரலாறு இந்தக் கண்காட்சி மூலம் உலகிற்கு மீண்டுமொருமுறை காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை யானது குறித்த சமூகத்தைச் சார்ந்த அனைவருக்கும் பெருமைக்குரிய விடயமாகும்.

எனவே வரலாற்றுக் கடமையுணர்ந்து காலத்தின் தேவையறிந்து இக்கண்காட்சியை ஒழுங்கு செய்த யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினருக்கு நன்றி பாராட்ட வேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாக இருப்பதுடன் கடந்த காலங்களை நினைவில் நிறுத்தி எதிர்காலத்தில் பயணிக்க வேண்டும் என்பதும் மறுக்கக் கூடாத ஒன்றாகும்.



# இலங்கைக்கு எதிராக களத்தில் குதிக்கிறது கனடா

அமலன்

இலங்கையின் இனப் பிரச்சினை இன்று சர்வதேச பிரச்சினையாக மாறிவிட்டமை அனைவரும் அறிந்தது. எனினும் அந்த சர்வதேச பிரச்சினையையும் இலங்கை அரசாங்கம் சில நாடுகளின் உதவியுடன் சாணக்கியமாக சமாளித்து வருகின்றது. அந்த வகையில் இந்தியா, ரஷ்யா, சீனா போன்ற முக்கிய நாடுகளின் ஆதரவை தொடர்ந்தும் இலங்கை தக்க வைத்துக் கொண்டுள்ளமை இராஜதந்திர ரீதியில் முக்கிய அம்சமாக கருதப்படுகிறது. இந்த நாடுகளின் உதவியுடன் இலங்கை பல்வேறு சர்வதேச நாடுகளுக்கு சவாலாக இருந்து வருகிறது. இலங்கை அரசாங்கத்தின் சமாளிப்புத் திட்டங்கள் யாவும் குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டவை என்ற அம்சத்தை கடந்த வாரங்களில் அரசியல் கட்டுரைகளில் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த குறுகிய கால திட்டங்களின் மூலம் பிரச்சினைகளை சமாளித்து வரும் இலங்கை அந்தக் காலக் கட்டத்துக்குள் தம்மை சுதாகரித்துக் கொள்ளும் போக்கை கடைப்பிடித்து வருகிறது. இதுவரையில் அவ்வாறான திட்டங்கள் பெரும்பாலும் இலங்கைக்கு கைகொடுத்தன. ஆனால் தற்போது சர்வதேசத்தில் இலங்கை மீதான பிடி இறுகி வருவதாக கருதப்படுகிறது. குறிப்பாக மனித உரிமை விடயங்களை பொறுத்த வரையில் இலங்கை சர்வதேசம் விரும்புகின்ற அளவிற்கு தம்மை நிரூபிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு கூறப்படுகிறது. இதன் காரணமாக இலங்கை விடயத்தில் தலையிடாத கட்சிகளும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளும் நிலை ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக இதுவரை கனடா இலங்கை விடயத்தில் தீர்க்கமான நாடாக இருந்ததில்லை. அதிக புலம்பெயர் தமிழர்களை கொண்ட நாடு என்ற வகையில் கூட கனடா இலங்கை விடயத்தில் அதிக அக்கறையை கொண்டிருக்கவில்லை என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வந்தது. குறிப்பாக தற்போதைய அரசாங்கத்தின் மீதே அந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வந்தது. ஏற்கனவே பதவியில் இருந்த அரசாங்கம் இலங்கை தமிழர் விடயத்தில் அக்கறையை கொண்டிருந்ததாக காட்டிக்கொண்டது. அது பெரும்பாலும் கடந்த பொதுத்தேர்தலிலும் பிரதிபலித்தது. எனினும் கனடாவுக்கு இலங்கை தமிழ் அகதிகள் அதிகமாக செல்வதை காரணம் காட்டி தற்போதைய அரசாங்கம், கனேடிய மக்களின் ஆதரவை பெற்று ஆட்சியை கைப்பற்றிக் கொண்டது. இவ்வாறான சூழ்நிலையில் ஸ்டீவன் ஹாப்பரின் அரசாங்கம் இலங்கை தமிழர் விடயத்தில் கடுமைப்போக்கையே கடைப்பிடித்து வருகிறது என்ற குற்றச்சாட்டு அண்மைக் காலமாக கூறப்பட்டது. எனினும் திடீரென கனேடிய அரசாங் கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் மனித உரிமை மீறல் விடயங்களில் முன்னேற்றம் காணப்படா விட்டால், 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநல வாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை தாம் பகிஷ்கரிக்கப் போவதாக கனேடிய பிரதமர் ஹாப்பர் அண்மையில் அறிக்கை ஒன்றை விடுத்தார். இது அனைவரை யும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அத்துடன் இந்த அறிக்கைக்கு சமாந்தரமாக ஜெனீவாவில் நடைபெற்றுக்கொண்டிருந்த மனித உரிமைகள் பேரவை யின் கூட்டத்தொடரிலும் கனடா இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்றை முன்வைக்க ஏனைய நாடுகளை காட்டிலும் அதிக அக்கறையை காட்டியது. இதனை தவிர, கனேடிய வெளியுறவுத்துறை அமைச்சர், இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணைகள் குறித்து விமர்சனங்களை முன்வைத்தார். இதன்மூலம் கனேடிய அரசாங்கம் இலங்கைக்கு எதிராக பகிரங்கமாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடிவுசெய்து விட்டது. இதற்கு கனேடிய எதிர்க்கட்சியும் தமது ஆதரவை வழங்கியுள்ளது. அதிலும் பொதுநலவாய நாடுகளின் உறுப்புரிமையில் இருந்து இலங்கையை நீக்கவேண்டும் என்று கனேடிய எதிர்க்கட்சி ஹாப்பரின் அரசாங்கத்தை நெருக்குதலுக்கு உள்ளாக்கியுள்ளது. இந்த மாத இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் இலங்கையின் ஜனாதி-பதி, மற்றும் கனேடிய பிரதமர் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். இந்தநிலையில் கனேடிய அரசாங்கத்தின் புதிய கொள்கை மாற்றங்கள், நிச்சயமாக பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் காரசாரமான வாதப்பிரதி வாதங்களை தோற்றுவிக்கும் என்றே கருதப்படுகிறது. கனடாவின் அரசாங்கம் இலங்கை விடயத்தில் இவ்வாறான ஒரு மாற்றத்தை கொண்டு வந்தமைக்கான காரணத்தை ஆராய்வோமானால் அடுத்த வாரம் ஒன்றாரியோ மாநிலத்தில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வது ஒரு காரணமாக அமைந்துள்ளது. அதேநேரம் தமது நட்பு நாடான அமெரிக்கா, இலங்கை விடயத்தில் காட்டிவரும் முனைப்பு களுக்கு மத்தியில் தமிழர்களை பெரும்பான்மை யினராக கொண்டிருக்கும் தாம் இந்தப் பிரச்சினையில் தலையிடாப்போக்கை காட்டிவருவது தற்போது இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் தமது கட்சிக்குப் பாதிப்பை கொண்டு வரும் என்ற அச்சம் ஹாப்பரின் அரசாங்கத்துக்கு ஏற்பட்டு விட்டது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# பணம் சேர்க்கும் நோக்கில் செயற்பட்டுவரும் வைத்தியர்களுக்கான மக்களின் குரல்

வைத்தியத்துறை என்பது கடவுளின் செயற்பாடுகளுக்கு நிகரானதாகப் பார்க்கப்படுகின்ற நிலையில், அதில் ஏற்பட்டு வருகின்ற போட்டி, பொறாமை என்பன போன்ற மனச்சாட்சியற்ற செயற்பாடுகளால் அதற்குக் களங்கம் ஏற்பட்டுத்தப்பட்டு வருவதாக மக்கள் கவலை கொள்கின்றனர்.

சாதாரண பொதுமக்களே பெருமளவில் இவ்வாறான பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றனர். இலங்கையில் வைத்தியம் இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகவே அறிவிக்கப்படுகிறது. ஆனால் வைத்திய நிபுணர்களின் முழுமையான சிகிச்சைகள் மற்றும் சேவைகளைப் பெறவேண்டுமானால் தனியார் வைத்தியசாலைகளையே நாட வேண்டிய கட்டாயம் இருந்து வருகிறது.

அதற்குக்காரணம் அரசின் கட்டுப்பாடுகளுக்கு வைத்தியத்துறையினர் கொடுக்கும் ஒத்துழைப்பாகும். வைத்தியத்துறையில் ஏற்படுகின்ற குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தால் முன்வைக்கப்படுகின்ற திட்டங்கள் பல வைத்தியத் துறையினரால் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதும் நினைவுபடுத்தப்பட வேண்டும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுகாதார அமைச்சினால் கொண்டுவரப்பட்ட வெளிநோயாளர் பிரிவுகள் குறித்த அறிவித்தலில் 24 மணிநேர சேவை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அதனை சகல வைத்திய சாலைகளிலும் நடைமுறைப்படுத்த முடியாது என ஆரம்பத்திலேயே அது மீறப்பட்டது. பின்னர் முக்கிய வைத்தியசாலைகளில் அது நடைமுறையில் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அதுகூட சில வைத்தியசாலைகளில் சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை. அதனையடுத்து வாரத்தில் சகல நாட்களிலும் காலைமுதல் இரவு வரை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் சில வைத்திய சாலைகளில் சனி, ஞாயிறு போயா தினங்களில் பிற்பகல் 2 மணியுடன் வெளிநோயாளர் பிரிவுகள் மூடப்படுவதாகத் தெரிகிறது.

பணம் படைத்தவர்கள் தனியார் வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சைகளைப் பெறக்கூடிய நிலையுள்ளது. அத்துடன் நகர்ப்புறங்களிலேயே டிஸ்பென்சரி எனப்படுகின்ற தனியார் வைத்திய நிலையங்களும் தனியார் வைத்தியசாலைகளும், அதிகம் உள்ளன. ஆனால் மிகுந்த அடிப்படை வசதிகளற்ற கிராமங்களில் இவை குறைவாகவே இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் சாதாரண மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். வைத்தியசாலைகள் குறித்தும் வைத்திய சிகிச்சைகள் கறித்தும் வைத்திய சாலைகளின் அதிகாரிகளிடம் குறைகள் முன்வைக்கப்படும் போது வைத்தியர் தட்டுப்பாடு, வைத்தியசாலையின் இட வசதி, மருந்துத் தட்டுப்பாடு போன்ற காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை வழங்குவதற்கு செல்லும் வைத்தியர்களுக்கு நேரம் இருக்கும் போது ஏன் வைத்தியத்தட்டுப்பாடு ஏற்படுகிறது என்ற கேள்வி எழுகிறது.

அதேநேரம் அதிகம் பணம் அறவிடப்படும் தனியார் வைத்திய சேவைகளில் பயன் பெறுபவர்கள் ஒரு சிறு தொகை பணம் படைத்தவர்கள். அத்துடன் நடுத்தர வர்க்கத்தினர். இவர்கள் தவிரவும் பாதிக்கப்படும் சாதாரண மக்களின் நிலை குறித்து வைத்திய சேவையிலுள்ளவர்கள் கவனம் எடுப்பது

**-லோகேஸ்வர்-**

குறைவாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.

சில வைத்திய நிபுணர்கள், காலை, பகல், மாலை, இரவு என தனியார் வைத்திய சாலைகளில் 50 வரையானோரைப் பார்வையிடுகின்றனர். நோயாளிகளிடம் தலா 600 ரூபா வரை அறவிடப்படுகிறது. அத்துடன் அவைகளில் சிலவற்றில் இதை விடவும் அதிகமாக அறவிடப்பட்டு வருகின்றன. அவ்வாறானால் ஒரு நாளைக்கு 200 பேரை ஒரு வைத்திய நிபுணர் பார்வையிட முடியுமானால் அரசாங்க வைத்தியசாலைகளில் ஒரு நாளைக்கு 50 பேரையாவது பார்க்க சிகிச்சையளிக்க முடியாதா என்பது பொதுமக்கள் மத்தியில் உள்ள கேள்வியாக இருக்கிறது.

இதற்கிடையில், ஒரு வைத்திய நிபுணரிடம் தனியார் வைத்திய சாலை ஒன்றில் தமது நோய்குறித்து பரிசோதித்த ஒரு நோயாளி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் மற்றைய வைத்திய நிபுணரால் பரிசோதிக்கப்படாத நிலை எற்படுகிறது. அவ்வாறான வேளைகளில் வைத்திய விடுதியில் இரவு அனுமதிக்கப்படுகின்றவர்கள் மறுநாள் காலையிலேயே வீட்டுக்கு அனுப்பப்படுகின்ற நிலை ஏற்படுகிறது. (வைத்தியத்துறை குறித்து எழுதப்படுவதனால் வைத்தியசாலைகளின் பெயர் குறித்து எழுதுவதைத் தவிர்க்கிறேன்)

போதனா வைத்தியசாலை ஒன்றில், கடந்த சில மாதத்துக்கு முன்னர் நடைபெற்ற, கர்ப்பிணித் தாய்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் இதற்கு நல்லதொரு உதாரணமாக அமைந்தது. அந்தச் சம்பவம் குறித்து சுகாதார அமைச்சு கூட விசாரணைகளை நடத்தியிருந்தது. ஆனாலும் அது குறித்து சரியான முறையில் முடிவுகள் கிடைத்ததாகத் தெரியவில்லை.

சிறந்த வைத்திய சேவைகள் வழங்கப்படும் போது மக்களிடமிருந்து கிடைக்கும் பிரதிபலிப்புகள் நல்ல விதமானதாகவே இருக்கும். எந்த ஒரு துறையாக இருந்தாலும் ஆலோசனைகள் நடத்துவதும், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதும் சிறந்ததொரு முடிவு கிடைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதை சில வைத்தியர்கள் புரிந்து கொள்வதில்லை. ஒரு சில துறைசார்ந்தவர்கள் இவ்வாறான ஆலோசனைகளை நடத்துவதன் மூலம் சிறந்த பிரதி பலன்களைக் கொடுப்பதும் இல்லாமல் இல்லை.

அதேநேரம் பல தனியார் வைத்தியசாலைகள் பிரபல வைத்திய நிபுணர்களாலேயே நடத்தப்பட்டு வருகிறது என்றே அறிய முடிகிறது. அவற்றிற்கு வைத்தியசாலையிலிருந்து வைத்திய நிபுணர்களும் தாதியர்களும் கடமை நேரங்களில் சென்று வருவதாகவும் அறிய முடிகிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



# புலிகளின் கப்பல்கள் சிக்கிய இரகசியம்

-ரிஷி-

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

2002ஆம் ஆண்டில் மேற்படி கப்பல் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டபோது, அந்தத் தகவலை பிரான்சின் உளவுத்துறைக்குக் கசியவிட்டது கம்போடியா. பிரான்சின் கடற்படை 'வின்னர்' கப்பலை நடுக்கடலில் வழிமறித்தது. பலவந்தமாக அருகிலுள்ள துறைமுகம் ஒன்றுக்கு கொண்டு போனது. பிரான்சின் வெளியுறவு அமைச்சு, "வின்னர் கப்பலை பிரென்ச் அதிகாரிகள் சோதனை செய்ய அனுமதிக்க வேண்டும்" என்று கம்போடிய அரசுக்கு அவசரத் தகவல் ஒன்றை அனுப்பியது. இந்த அவசர வேண்டுகோளுக்கு, ஆச்சரியகரமாக உடனே பதில் வந்தது. "எமது நாட்டு கொடியுடன் செல்லும் 'வின்னர்' கப்பலை, பிரெஞ் அதிகாரிகள் தாராளமாகச் சோதனையிடலாம்" என்ற அனுமதி கம்போடியப் பிரதமர் ஹூன்-சென்னின் கையொப்பத்துடன் வந்து சேர்ந்தது. 'வின்னர்' கப்பலில் சோதனை நடாத்தப்பட்டது. பெருமளவு போதைப் பொருட்கள் அகப்பட்டன. இதன் மூலம், கடத்தலுக்கு கம்போடிய கப்பல் கார்ப்பரேஷன் துணைபோவதில்லை என்று வெளியுலகுக்குக் காட்டிக்கொண்டது கம்போடியா. ஆனால் உள்ளே வேறு ஒரு திட்டம் இருந்தது. அந்த திட்டம், ஒரு அறிவிப்பு வாயிலாக தொடங்கியது. "இனி வெளிநாட்டுக் கப்பல்களை கம்போடியாவில் பதிவு செய்வதில்லை" என்பதுதான் அந்த அறிவிப்பு. இதில் ஒரு முக்கிய விஷயம், இந்த நடைமுறை புதிய கப்பல்களுக்குத்தான்! ஏற்கனவே கம்போடியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல்களை இந்த அறிவிப்பு பாதிக்காது. மேலும், புதிதாகப் பதிவு செய்யப்படும் கப்பல்கள் பற்றிய விபரங்களை கம்போடியா முன்வந்து வெளியே தெரிவித்தால்தான் வெளியுலகுக்குத் தெரியவரும்.

அதாவது, கம்போடியா நினைத்தால் ஓசைப்படாமல் புதிய கப்பல்களை, பழைய பெயர்களில் பதிவு செய்துவிடலாம்! இது நடைபெற்ற அடுத்த வருடம், 2003இல் வட கொரியக் கப்பலான பொங்-சூ வடகொரியாவில் இருந்து புறப்பட்டது. புறப்படும் போது கப்பலில் வடகொரியக் கொடி இருந்தது.

கப்பல் கடலில் சென்று கொண்டிருந்த போதே நடுக்கடலில் வைத்துப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. புதிய பெயரான 'குவுலு' என்ற பெயர் கப்பலில் பெயின்ட் செய்யப்பட்டு, அதன்பின் சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தது. அங்கிருந்து ஆஸ்திரேலியா செல்வதுதான் கப்பலின் பாதை.

கப்பல் ஆஸ்திரேலிய கடல் எல்லையை அடைந்தபோது, சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டது. கப்பல் சோதனையிடப்பட்டது. இதில் பெருமளவு போதைப் பொருட்கள் அகப்பட்டன. சுமார் 1 வருடகாலமாக அமுங்கிப் போயிருந்த "கொடி மாற்றும்" விளையாட்டு முழுமையாக முடிந்து போய்விடவில்லை என்பது இதன் மூலம் தெரிந்தது. சி.ஐ.ஏ. மீண்டும் வடகொரியக் கப்பல்களையும், கம்போடியப் பதிவுக் கப்பல்களையும் கண்காணிக்கத் தொடங்கியது. இதற்கிடையே கம்போடியாவில் பதிவு செய்யப்பட்ட மற்றுமோர் வடகொரியக் கப்பலான சொங்-சாங் வடகொரியத் துறைமுகம் ஒன்றிலிருந்து கம்போடியக் கொடியுடன் புறப்பட்டது. இந்தக் கப்பல்மீது அமெரிக்க உளவுத்துறைக்கு ஏற்கனவே சந்தேகம் ஏற்பட்டிருந்தது. அதனால் கப்பல் வடகொரியத் துறைமுகத்தில் இருந்து புறப்படும் போதே சட்டலைட் மூலமாக கப்பலை உளவு பார்க்கத் தொடங்கியது சி.ஐ.ஏ.

சட்டலைட் உளவு பார்த்தலைவிட மேலதிகமாக, தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் இருந்த அமெரிக்கக் கப்பல்களின் ராடர்கள் மூலமாகவும், சொங்-சாங் கப்பலின் நகர்வுகள் அவதானிக்கப்பட்டன. சொங்-சாங் கப்பல் நகர்ந்து இந்து சமுத்திரம் பிராந்தியத்துக்கு வந்தபோது, அமெரிக்க மற்றும் ஸ்பானிஷ் கடற்படையினர் கப்பலைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆனால் அவர்களுக்கு அங்கே ஒரு குழப்பம் காத்திருந்தது.

இவர்கள் பிடிக்கச் சென்ற கப்பல் சொங்-சாங் என்ற பெயருடன் வரவேண்டும். ஆனால் ராடர் மூலம் தெரியவந்த நகர்வுகளை வைத்து சுற்றி வளைக்கப்பட்ட கப்பலின் பெயர் சொ-சான். சர்வதேசப் பதிவு ரெஜிஸ்ட்ரி மூலமாக இந்தக் கப்பலும் கம்போடியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல் என்பதும், அதன் ஆவணங்களில் இருந்து இந்தக் கப்பல் ஏமான் நாட்டுக்கு சீமெந்து ஏற்றிச் செல்லும் கப்பல் என்றும் கப்பலைச் சூழ்ந்து கொண்ட அமெரிக்க, ஸ்பானிஷ் கடற்படை அதிகாரிகள் தெரிந்து கொண்டனர்.

அப்படியானால் சொங்-சாங் கப்பல் எங்கே? இருந்த போதிலும், சொ-சான் கப்பலை சோதனை செய்வது என்று முடிவெடுத்த கடற்படையினர், கப்பலைச் சோதனையிட்ட போது, கப்பலில் நிஜமாகவே சீமெந்து இருப்பது தெரிந்தது. தொடர்ந்தும் தேடியபோதே அகப்பட்டது 'புதையல்.'

சீமெந்துக்குக் கீழே, 15 ஸ்கட் வகை ஏவுகணைகள், 15 வார்-ஹெட்கள், 23 பரல்களில் நைட்சிக் அசிட் ரொக்கட் புரொப்பலன்ட், மற்றும் 85 ட்ரம்களில் வேறு இரசாயனப் பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னர்தான் பெயர் மாறியது எப்படியென்ற விஷயம் புரியவந்தது.

கப்பல் புறப்பட்டபோது இருந்து SONG-SANG என்ற பெயரில் முதல் பகுதியில் உள்ள கடைசி இரண்டு எழுத்துக்களையும் கடைசிப் பகுதியிலுள்ள கடைசி எழுத்தையும் அழித்து SO-SAN என்று மாற்றியிருந்தார்கள்.

இந்தக் கப்பல் அகப்பட்ட விஷயம், கம்போடிய அரசுக்கு சிக்கலை ஏற்படுத்திவிட்டது. உடனே மற்றொரு காரியத்தைச் செய்தார்கள் அவர்கள். வெளிநாட்டுக் கப்பல்களை பதிவு செய்யும் அதிகாரத்தை கம்போடிய கப்பல் கார்ப்பரேஷனிடம் இருந்து அகற்றினார்கள். பதிவு செய்யும் அதிகாரத்தை கொடுப்பதற்காக புதிய அரசு அமைப்பு ஒன்றை உருவாக்கினார்கள். அந்த அமைப்புதான், ISRC (International Ship Registry of Cambodia)

இந்த அமைப்பின் அலுவலகங்கள் கம்போடியாவிலும், தென்கொரிய நகரமான பூசானிலும் (ஆம்!? வட கொரியாவின் எதிரியான தென்கொரியாவில்!) இயங்குகின்றன.

இதையடுத்து வடகொரியா புதிய கூட்டாளி ஒருவரைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த வகையில் வடகொரியா இப்போது ஓசைப்படாமல் பிடித்த கூட்டாளி மங்கோலியா. வட கொரியாவின் சில கப்பல்கள் மங்கோலியாவின் கொடியுடன் நடமாடத் தொடங்கின. வட கொரியா இரகசியமாக சப்ளை செய்த ஆயுதங்கள் மங்கோலியக் கொடி பறந்த கப்பல்களில் கடத்தப்படத் தொடங்கின. இந்தக் கடல் விளையாட்டில் அமெரிக்காவின் நடத்தைதான் வெவ்வேறு முகங்களைக் கொண்டது. கொள்கையளவில் வடகொரிய ஆயுதங்கள் மற்றைய நாடுகளுக்கு கடத்தப்படுவதை அமெரிக்கா எதிர்க்கிறது. ஆனால் அது கொள்கையளவில் தான். நடைமுறையில் கதை வேறு. கடத்தப்படும் ஆயுதங்கள் போய்ச் சேருமிடம் தங்களுக்கு பிரச்சனையில்லாத இடம் என்றாலோ அல்லது, தங்களுக்கு வேண்டப்பட்ட இடமென்றாலோ அமெரிக்கா கண்டுகொள்ளாமல் விட்டுவிடும். உதாரணம் வேண்டுமா? நாங்கள் ஏற்கனவே கூறிய சொங்-சாங் கப்பலில் ஸ்கட் ஏவுகணைகள் உட்பட ஆயுதங்கள் இருந்தன அல்லவா, அவை அமெரிக்காவின் மறைமுக ஆசி பெற்ற ஏமன் நாட்டுக்குப் போகின்றன என்பது தெரிய வந்தவுடன், அவற்றைப் பறிமுதல் செய்யாமல் கப்பலை போகவிட்டது அமெரிக்க கடற்படை. வேறு சில கப்பல்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் போகின்றன என்பது தெரியவந்தவுடன், அமெரிக்கா என்ன செய்தது என்பது உங்களுக்கே தெரியும். (முற்றும்)

# தங்கி நிற்க தனி மரம் தேவை! தோப்பு அல்ல!!



நன்றி - இணையம்

> எனக்கு டொலர்களைவிட வாழ்வுதான் முக்கியம். டொலரைத் தேடி நான் புலம்பெயரவில்லை. மாறாக உயிரைப் பாதுகாத்துக் கொள்ள புலம்பெயர் தேசத்திற்கு விருப்பமின்றி எய்தப்பட்டவன். நான் விருப்பின்றி புலம்பெயர்ந்தேன், விருப்பின்றி புலம்பெயர் தேசத்தில் இருக்கின்றேன், விருப்புடன் திரும்பி சென்றுவிடுவேன். நான் தளத்திலிருந்து புலத்திற்கு புடுங்கி நாட்டப்படவில்லை. மாறாக பூச்சட்டிக்குள் கொண்டு வரப்பட்டேன். எனவே மீண்டும் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நிலத்தில் நாட்டப்படுவதையே விரும்புகின்றேன். புலத்தில் உழைப்பில் ஈடுபட்டதினால் டொலர்கள் கிடைத்து என்னவோ உண்மைதான். ஆனால் எமது அடையாளத்தை இழந்து மகிழ்ச்சிகளை இழந்து 'பஞ்சம் பிழைக்கும்' கூட்டத்தில் ஒருவனாக உப்புச்சப்பற்ற காலம் கடத்தலில் ஈடுபட்டதே உண்மை நிலை.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**பின்பு** துப்பாக்கியை மட்டும் நம்பியவர்களால் போராடும் தனது உரிமை மறுக்கப்பட்டு கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளான போது மக்கள் மத்தியில் செய்த அரசியல் வேலைகள் தன்னையும் உயிர் காத்ததையும் அவ்வாறு உயிர்காத்த முகம் தெரியாத, உறவறியாத மனிதர்களையும் தனது தேசம் தோறும் தேடி அலையவேண்டும் என்று விருப்புக்கள் அவனை சுண்டியிழுத்தன. இந்த 23 வருட இடைவெளியில் அவர்கள் போரின் வடுக்களால் இல்லாமல் போய்விட்டார்களோ? அல்லது பாதி சிதைந்து ஒதுங்கி விட்டார்களோ? எங்கு தேடுவது என்ற திசை வழி தெரியாமல் தவித்து போகும் என் நிலைமையை என் சின்ன மகன் புரிந்து கொள்வானோ என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு தனது கிராமத்தின் கல்லு வீதிகளில் கால் தடம் பதித்து நடக்கின்றான் என் தம்பி.

தனக்கு வசதியிருந்தமையினால் என் குஞ்சியப்புவால் என் தம்பியை அன்றே வெளிநாடு ஒன்றிற்கு புலம்பெயர் வைக்க முடிந்தது. பின்பு என் தம்பியை காப்பாற்றிய பலரும் தமிழரசுக் கட்சி வழியில் 'தமிழ் தேசியம்' பேசியவர்களை நம்பி ஏமாறியது வேறு விடயம். தன்னைப் போல் புலம்பெயர முடியாத தன்னால் அரசியல் வாழ்விற்கு கொண்டுவரப்பட்ட கிளி, மனோவை போன்றவர்களை காண வேண்டும் என்ற உந்துதலில் அவர்கள் வீடுதேடிச் சென்று 23 வருட இடைவெளியை ஒரு மணி நேரத்தில் நிரப்ப முயற்சித்த என் தம்பி உண்மையில் களைத்துத்தான் போய்விட்டான். அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முன் வந்தபோதும் கௌரவமான மறுப்புகளுடன் மத்தியிலும் என் தம்பி உதவியே வந்தான். இவர்களுடன் பேசிய போது இடையிடையே எங்கள் மண்ணின் மைந்தன் நடைமுறை இடதுசாரிப் போராளி "சாமி" யின் நினைவலைகளும் குறுக்கே வந்து சென்றன.

போராடும் உரிமை மறுக்கப்பட்டு தமிழ் மக்கள் மத்தியிலிருந்த துப்பாக்கிதாரிகளுக்கு தலை மறைவாக இருந்தபோதும் கிடைத்த சில இடைவெளிகளை பயன்படுத்தி தீவிரமான தலை மறைவு வாழ்விற்கு தள்ளப்பட்ட தனது சகாக்களை தேடி கிராமம் கிராமமாக அலைந்து உதவியதையும் இதற்கு மக்கள் கொடுத்த மறைமுக ஆதரவையும் அவனது நினைவலைகள் மீண்டும் மீண்டும் மீட்டே வந்தன. ம்.... எல்லாம் முடிந்து விட்டது...

எல்லாம் முடிந்து விட்டது என்ற பெருமூச்சின் இடையே 500 மீற்றருக்கு ஒரு தடவை சகஜமாக மக்களுடன் பழகிக்கொண்டு இருக்கும் இராணுவக் காவல் அரண்களில் எந்நேரமும் எம்மை கண்காணிக்கும் துப்பாகிகள் மட்டும் இருப்பது என் தம்பியை உறுத்திக்கொண்டே இருந்தது.

அவர்கள் சிங்கள் மொழி பேசுவதையும், தமிழில் கதைக்க முயலுவதையும் வீதியால் போகும் பெடி பொட்டைகள் இயல்பாகவே அவர்களுடன் கதைத்தபடி கடந்து செல்வதையும் காணக் கூடியதாக இருந்தது. வெடி இல்லை, குண்டுப்பயம் இல்லை, தடுத்து நிறுத்தி சோதனையும் இல்லை..... ஆனால் சுதந்திரம் என்பது இதுவும் அல்ல என்பதை மட்டும் அடி மனம் உறுத்திக் கொண்டுதான் இருந்தது.

30 வருடகால பொது வாழ்க்கையில் கிடைத்த அனுபவம் மீண்டும் எவ்விடத்தில் தன்னை அமையாளப்படுத்திக் கொள்வது என்பதில் ஒரு எச்சரிக்கையுணர்வு என் தம்பிற்கு ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால் ஒன்று மட்டும் புரிகின்றது. இதிலிருந்து விடுபடவும் முடியாது. விடுபடவும் விரும்பவில்லை என்பது மட்டும் யதார்த்தம் என்பது.

ஊரின் வடகோடியிலிருந்து தென்கோடி வரைக்கும் கிழக்கிலிருந்து மேற்கு வரைக்கும் மாமா, மாமி, சித்தப்பா, சின்னம்மா, பெரியப்பா, பெரியம்மா, மச்சாள், மச்சான், அண்ணன், அக்கா, தம்பி, தங்கச்சி, நண்பன், நண்பி என்று பலரும் இருக்கின்றார்கள், ஆனால் வருகின்றேன் என்று அறிவிக்காமல் பெட்டியுடன் வந்திறங்கி ஒரு மூலையில் உரிமையுடன் படுத்துறங்க எனக்கு ஒரு தனிமரம் இல்லை என்பது மட்டும் அவன் கண்களில் கட்டுக்கடங்காமல் கண்ணீரை வரவழைத்தது என்னவோ உண்மைதான்.

ஏன் அப்பா அழுகின்றீர்கள் அம்மாவை நினைத்தா...? என்றான் அப்பாவியாக என் சின்ன மகன். இல்லை என் தந்தையர் நிலத்தை என்று என் மகனிடம் வெளியில் சொல்லாமல்" ம்... என்று மட்டும் சொன்னான் என் தம்பி தங்கி நிற்க எனக்கு ஒரு தனி மரம் வேண்டும் தோப்பு அல்ல என்று மீண்டும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இழந்து போன தான் தவழ்ந்து, உருண்டு, ஓடி, ஆடி, பாடி, விளையாடிய அந்த தனி மரம் தற்போது புதருக்குள்ளும் மரங்களுக்கு இடையிலும் இடிந்து மறைந்து கிடந்தது. ஆமாம். நான் பிறந்து, வளர்ந்த அந்த குடிசை..... இடிந்த பின்பு யாரும் பராமரிக்காமல் தற்போது புதரும், புத்துமாக இருக்கின்றது. தம்பி தங்கியிருக்கு தற்போது தனது கிராமத்தில் ஒரு தனி மரம் இல்லை.... தனி மரம் இல்லை.... தோப்பு அல்ல.. கண்ணீரை அடக்க முடியவில்லை.

என் தம்பியின் கண்ணீர் எனக்கொரு பாடம் சொல்கின்றது. நான் கண்ணீர் விடத் தயார் இல்லை எனவே ஊருக்கு போக முன்பு தங்கியிருக்க எனக்கொரு தனி மரம் வேண்டும். அதுவும் என் கிராமத்தில் நான் பிறந்து தவழ்ந்து, உருண்டு, ஆடிப்பாடி, ஓடியாடி ஆடு மாடு மேய்த்து இதற்கிடையே அகரம் கற்று அதன் அரிசுவட்டில் ஆசானாக என்னை மாற்றிய என் கிராமத்தில் எனக்கொரு தனி மரம்வேண்டும். என் தந்தையின் தோள்களில் தொங்கித் திரிந்த என் வீதிகளில் தடம் பதிக்க எனக்கொரு தனிமரம் வேண்டும். என் கிராமத்து தேவதைகளின் ரம்யத்தில் மிதந்த என் கிராமத்தில் எனக்கு ஒரு தனிமரம் வேண்டும். என் அக்காளும், அண்ணையும், மச்சானும், மச்சாளும், மாமாவும், மாமியும், பெரியய்யா, பெரியம்மா, குஞ்சாச்சி, குஞ்சப்பு, ஆச்சி, அப்பு, நண்பன், நண்பி எல்லோரும் வாழ்ந்து மகிழ்ந்த பூமியில் எனக்கு ஒரு தனிமரம் வேண்டும். எந்தையும், தாயும் காதலித்து, இணைந்து, மகிழ்ந்து, வாழ்ந்த பூமியில் எனக்கு ஒரு தனிமரம் வேண்டும். மண்ணர் அப்பா பிறந்த பூமியில் எனக்கு ஒரு தனிமரம் வேண்டும்...... நான் கேட்பது தனி மரம் தோப்பு அல்ல. என்னுடன் கூடவே வீடற்ற யாவருக்கும் தங்கியிருக்க ஒரு தனிமரம் வேண்டும்.

நம்பிக்கை இருக்கின்றது. இன்னமும் யாவருக்கும் தனிமரம் கிடைக்க செய்ய முடியும் என்று. என் பயணங்கள் தொடரும். என்ன சின்ன மகளுக்கு இது புரியுமோ தெரியாது. என் வளர்ந்த மகனுக்கு புரிகின்றது என் உணர்வுகள். என் பாதையை நான் மாற்றத் தயார் இல்லை, என் சின்ன மகள் என்றோ ஒரு நாள் என்னைப் புரிவாள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. என் வாழ்க்கைத் துணைவியாள் என்றும் என்றுடன் இணைந்து இசைக்க, நானும் அவளுடன் இணைந்து இசைக்க என் கரத்தை தொடர்ந்தும் பற்றியே இருப்பாள், நானும் அவளின் கரத்தை பற்றியே இருப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

கொழும்பிற்கு விமானம் ஏறுவதற்காக புறப்படுவதற்கு முதற் தினம், தனது சகாக்கள் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் அமைத்து செயற்படுகின்றார்கள் என்பதை கேள்விப்பட்ட என் தம்பி ஆட்டோக்காரரை அவ் அலுவலத்தை நோக்கி திருப்பச் சொன்னார். 1985 வரை ஒன்றாக செயற்பட்ட இவர்கள் "அரசியல்" வேறுபாடுகளினால் மூன்று அணிகளாக பிரிந்து செயற்படுவதாய் அறிந்து இருந்தான் இதில் ஒரு அணியைத் தவிர்த்து ஏனைய இருவரையும் சந்திக்கும் நோக்கம் என் தம்பியின் விருப்பாக இருந்தது. ஆட்டோக்காரர் இடத்தை மாறி விட்டதினால் இடம் மாறிச் சென்றவர்களிடம் மற்றயவர்களின் இடத்தைக் கேட்டபோது இராணுவ முகாமிற்கு வழி சொன்ன 'தமிழ் தேசியம்' பேசும் தலைவர்களின் வக்கிர புத்தியை எண்ணி நொந்து கொண்டான். பின்பு பொது மகன் ஒருவரின் வழிகாட்டலில் சரியான இடத்தை அடைந்தான் என் தம்பி. அலுவலக வாசல் முன்றலில் எந்த பாதுகாப்பு கெடுபிடிகளும் இன்றி வீதிவரை வந்து காத்திருந்து தம்பியின் நீண்டகால சகா மோகன் வரவேற்றார். 23 வருட இடைவெளியை ஒரு மணிநேரத்தில் பேசமுடியுமா....? முடிந்தவற்றை பேசி முடித்து விட்டு அடுத்தவர்களின் இடத்திற்கு போகும் வழியை மோகனின் உதவியுடன் அறிந்து கொண்டு புறப்பட்டான் தம்பி.

சினிமா தியேட்டர் ஒன்றில் உள்ள அவர்களின் அலுவலகத்தில் சிறிய முகாமிற்குரிய பாதுகாப்புடன் காணப்பட்டது. பாதுகாப்பு வட்டத்தை கடந்து தனது முன்னாள் சகாக்களை சந்தித்தான் என் தம்பி. இங்கும் 23 வருட இடைவெளியை ஒரு மணிநேரத்தில் பேசித்தீர்க்க முடியாமல் திணறியபடியே வெளியேறினான். 23 வருட இடைவெளி 'சோசலிசம்' பேசிய இவர்களை 3 குழுக்களாக பிரித்திருந்தன. இதில் சில நியாயத் தன்மைகளும், நாற்காலிக் கனவுகளும், காட்டிக்கொடுப்புகளும் இருந்திருக்கின்றன என்பதை தம்பியால் உணர முடிந்தது. வர்க்க நலன்களின் அடிப்படையிலான பிளவுகள் பிரிவுகள் ஏற்பட்டன என்பதை தான் கற்றறிந்த இடதுசாரிக் கோட்பாட்டின் வழியில் பாகுபடுத்திக் அறிந்து கொண்டான். மீண்டும் இவர்களை இன்னுமொரு 23 வருடங்களின் பிறகுதான் காணமுடியுமோ என்று குடும்பம் குட்டி வெளிநாட்டு 'பஞ்சம் பிழைக்கும்' வாழ்வு முறை என்பனவற்றுக்குள் சிக்கித் தவிக்கும் ஓராயிரம் புலம்பெயர் தமிழர்களில் ஒருவனாக என் தம்பியின் நிலையுள்ளதை தளத்தில் உள்ள உற்றார் உறவினர், நண்பர்கள், சகாக்கள் புரிந்து கொள்ளவார்களோ என்ற ஒரு குற்றஉணர்வுடன் மீண்டும் விமானம் ஏறும் திகதியை தனக்குள் நினைந்தவனாய் கிராமத்திற்குப் பயணமானான்.

புலம்பெயர் தேசங்களில் டொலர்கள் கிடைக்கலாம் வாழ்வு கிடைக்குமா என்பது அங்கிருப்பவர்களுக்குத்தான் புரியும். தனது அடையாளத்தை இழந்து வாழுதல் என்பது மனிதனை ஜடமாக்கிவிடும் நிலைக்கு தள்ளிவிடும் என்பது புலம்பெயர் தேசத்து எம்மக்கள் பலருக்கு பொருந்தும். வெளித் தோற்றத்திற்கு 'மினுக்கமாக' தோன்றினாலும் உள்ளே ஓராயிரம் ஏமாற்றங்கள், ஏக்கங்கள், இழப்புக்கள், இல்லாமைகள், இயலாமைகள். இவற்றை கார், வீடு, தொலைபேசி, மின்சார உபகரணங்களுடன் கூடிய டொலர்கள் நிவர்த்தி செய்யுமா என்றால்.... இல்லை என்பதே பதில். தொலைத்து விட்ட வாழ்வை எண்ணி ஏங்காதவர்கள் என்று புலத்தில் யாரும் இல்லை. அப்படியில்லை என்று யாரும் வாதிட்டால் அவர்கள் பொய்மைகளை வாய்மைகள் என்கின்றனர் என்பதாகவே அர்த்தப்படும்.


எனக்கு டொலர்களைவிட வாழ்வுதான் முக்கியம். டொலரைத் தேடி நான் புலம்பெயரவில்லை. மாறாக உயிரைப் பாதுகாத்துக்கொள்ள புலம்பெயர் தேசத்திற்கு விருப்பமின்றி எய்தப்பட்டவன். நான் விருப்பின்றி புலம்பெயர்ந்தேன், விருப்பின்றி புலம்பெயர் தேசத்தில் இருக்கின்றேன், விருப்புடன் திரும்பி சென்றுவிடுவேன். நான் தளத்திலிருந்து புலத்திற்கு புடுங்கி நாட்டப்படவில்லை. மாறாக பூச்சட்டிக்குள் கொண்டு வரப்பட்டேன். எனவே மீண்டும் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நிலத்தில் நாட்டப்படுவதையே விரும்புகின்றேன். புலத்தில் உழைப்பில் ஈடுபட்டதினால் டொலர்கள் கிடைத்து என்னவோ உண்மைதான். ஆனால் எமது அடையாளத்தை இழந்து மகிழ்ச்சிகளை இழந்து பஞ்சம் பிழைக்கும் கூட்டத்தில் ஒருவனாக உப்புச்சப்பற்ற காலம் கடத்தலில் ஈடுபட்டதே உண்மை நிலை. வாசமற்ற பூக்களில் சுகந்தத்தை தேடும் ஜடமாக தொடர்ந்தும் புலத்தில் வாழ விரும்பவில்லை. எனவே என் தாய் நிலமே மீண்டும் என்னை ஏற்றுக் கொள்ளுவாய். வாசமுள்ள பூக்களில் வசந்தத்தை தேடும் மனிதனாக நான் வாழ விரும்புகின்றேன்..

(வாழ்வின் சந்தோஷங்களை தொலைத்து வாசமற்ற பூக்களின் சுகந்தங்களை தேடி அலைந்து மீண்டும் வாசமுள்ள பூக்களிடம் புகலிடம் தேடிச்செல்ல முற்படும் யாபேருக்கும் இது சமர்ப்பணம்) ○

மரியாதையைப் போல மலிவான, அதே நேரம் மதிப்புமிக்க பொருள் வேறில்லை.

ஸ்பெயின்

## வாரம் ஒரு திருக்குறள்



அறிவுடைமை

**அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண்.**

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்;
அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும்
அழிக்கமுடியாத உள்ளரணும் ஆகும்.

குறள்:421




# செய்யும் தொழிலே தெய்வம்!

ராகுல், கோகுல் இருவரும் இரட்டையர்களாகப் பிறந்த சகோதரர்கள். இருவருமே தோற்றத்தில் ஒரே மாதிரி இருப்பார்கள். ஆனால், இருவருக்கும் குணத்தில் வேறு-பாடு இருந்தது. ராகுல் இனிமை யாகப் பேசுவான். கோகுல் கடுமையாகப் பேசுவான்.

ராகுலும், கோகுலும் வெவ் வேறு இடத்தில் ஆளுக்கொரு மளிகைக் கடை வைத்திருந்தனர். ராகுல் ஆறு மணிக்கே கடை-யைத் திறந்துவிடுவான். கோகுல் எட்டு மணிக்குத் தான் கடை-யைத் திறப்பான்.

'ராகுல், கடைக்கு வருபவர் களிடம், 'என்ன வேணும் அக்கா? என்ன வேணும் அண்ணே, என்ன வேணும் தம்பி?" என்று அன்பாக இன்முகத்துடன் கேட்பான்.

கோகுலோ யாராவது பொருள் கேட்டால், கூட எரிந்து விழு வான். "எல்லாரும் ரூபாய் நோட்டை எடுத்து வந்தால், எப்படி? இங்கே என்ன சில்லரை கொட்டியா கிடக்குது?" என்று சிடுசிடுப்பான் கோகுல்.,

ஆறு மாதங்கள் கடந்தன. ராகுலின் கடையில் வியாபாரம் நன்றாக இருந்தது. கோகுலின் கடையில் கூட்டமே இல்லை.

"நாம் ரெண்டு பேரும் ஒரே நேரத்தில் தானே கடையை ஆரம்பித்தோம். உன் கடையில் மட்டும் எப்பவும் ஒரே கூட்டமாக இருக்கு. என் கடைக்கு மட்டும் ஒரு ஈ, காக்கா கூட மாட்டேங் குது?" என ராகுலிடம் தன் சோகத்தை கொட்டித் தீர்த்தான், கோகுல். "கோகுல், முதலில் நாம் செய்யும் வேலையை நேசிக்கவேணும். அதுமட்டும் போதாது. வேலையை சிரித்த முகத்தோடு செய்யணும். அதேநேரத்தில சுறுசுறுப்பாகவும், அழகாகவும் செய்யணும். தேவை யான நேரங்களில சீக்கிரமாக வும் செய்து முடிக்கவேணும்" என்று விளக்கம் அளித்தான்.

ராகுலின் போதனை கோகுலுக்கு போதிய தெளிவை தரவில்லை. அதனால் அவ-னிட மிருந்து வந்த பதில் இது. "அதெல்லாம் ஒன்றுமில்லை. உனக்கு எப்பவுமே நல்ல நேரம். எனக்கு ஒரே கெட்ட நேரம்" என்று புலம்பினான், கோகுல்.

இவனுக்கு எப்படி புரிய வைப்பது என்று சிந்தித்த ராகுல், தனது பதிலை சற்று நிதான-மாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினான், ராகுல்.

"நல்ல நேரம் என்பது தானாக வராது, கோகுல். நல்ல நேரத்தை நாம் தான் உருவாக்க வேண்டும். முன்னேறுவேன் என்ற நல்ல சிந்தனை வேணும். ஜெயிப்பேன் என்று நல்ல நம்பிக்கை வேணும். நல்ல சொல்லும், நல்ல செயலும் இருந்தால் நல்ல நேரமும், நல்ல வாழ்க்கையும் அமையும்" என்ற ராகுலைக் கூர்ந்து கவனித்தான், கோகுல்.

ராகுலின் பேச்சு அவனுக்கு புதிய பாடத்தைக் கற்று தந்ததைப் போல் இருந்தது. "அவன் சொல்வதையும்தான் ஒரு முறை செயல்படுத்தித்தான் பார்ப்போமே" என்று நினைத்தான். சில நாட்களில் கோகுலின் கடையிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

**கதை சொல்லும் நீதி:**
எந்த ஒரு செயலையும் தவறாக செய்து விட்டு, நேரத்தின் மீதும், சூழ்நிலையின் மீதும் பழி போடக்கூடாது. செய்யும் தொழிலை சரி யாக திறம்படச் செய்தால், எப்போதுமே நல்ல நேரம் தான்.




# கனடா

**தலைநகர்:** ஒட்டாவா
**பரப்பளவு:** 99 இலட்சத்து 84 ஆயிரத்து 670 சதுர கிலோ மீற்றர்
**மக்கள் தொகை:** 3 கோடியே 38 இலட்சத்து 41 ஆயிரம்
**மொழி:** ஆங்கிலம், பிரெஞ்சு
**நாணயம்:** டொலர், **மதம்:** கிறிஸ்தவம், **எழுத்தறிவு:** 99 வீதம்
**அமைவிடம்:** கனடாவின் கிழக்கில் அட்லாண்டிக் பெருங்கடல், மேற்கில் பசிபிக் கடல், வடக்கில் ஆர்க்டிக் கடல் உள்ளது. வடஅமெரிக்காவின் பெரும் பகுதியை கனடா ஆக்கிரமித்துள்ளது. இதன் தெற்கு மற்றும் வடமேற்குப் பகுதியை ஒட்டி அமெரிக்கா உள்ளது. **விளைபொருட்கள்:** பார்லி, ஓட்ஸ்.
**கனிம வளம்:** இரும்பு, செம்பு, யுரேனியம், கோபால்ட், கந்தகம், ஈயம், தங்கம் ஆகியவை கிடைக்கின்றன. பெற்றோலியம், எரிவாயு போன்றவையும் உள்ளன.
தொழில்கள்: முதன்முதலில் விவசாயம் மற்றும் மரம் வெட்டுதல். ஆகியவற்றை செய்து வந்தனர். பின்னர், மீன்பிடித்தல், உரோமத் தோல் தயாரித்தல், கால்நடை வளர்ப்பு போன்றவை முக்கியத்
**தொழில்கள்:-** காகிதக்கூழ், காகித உற்பத்தி, கோதுமை மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் ஏற்றுமதி போன்றவற்றில் முதலிடம் வகிக்கிறது. கல்நார், வெள்ளி, நிக்கல், துத்தநாக உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது.

## கனடாவும், அமெரிக்காவும்

கனடா நாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பல பெயர்கள் கொடுக்கப்பட்டன. அந்நாட்டுப் பழங்குடியினரின் சொல் கனாடா (Kanata). அதன் பொருள், 'குடிசைகள் நிறைந்தவை' என்பதாகும். கனடா அச்சொல்லை தன் நாட்டுக்குத் தேர்ந்தெடுத்தது.


'யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு' பல நபர்கள் தேர்ந்தெடுத்த பெயர், கொலம்பியா. அதனால்தான் அந்நாட்டின் தலைநகரான வாஷிங்டன், 'டிஸ்ட்ரிக்ட் ஆப் கொலம்பியா'வில் அமைக்கப்பட்டது. ஆனால் நாட்டுக்கான பெயரைச் சூட்டுவதில் அவர்களால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. சுதந்திரத் துக்காக நடைபெற்ற புரட்சிப் போரின்போது பிரிட்டிஷ்காரர்கள் அவர்களுக்கு அதிகாரப்பூர்வமில்லாது சூட்டிய பெயரையே யுனைடெட் ஸ்டேட்ஸ் குடிமக்கள் தங்களைக் குறிப்பதற்கான பெயராகத் தேர்ந்தெடுத்தனர். அதுதான், அமெரிக்கா.

## ஒட்டுக்கேட்பது.....


**ஒட்டுக் கேட்பது (eaves dropping) என்று குறிப்பிடப்படுகிறது. இடைக்கால வீடுகளில், கூரையில் இருந்து மழைநீரை எடுத்துச் செல்ல குழாய்கள் இருக்காது. அதற்குப் பதிலாக (eaves) என்பவை இருக்கும். அவை சரிவான கூரையின் கீழாக அகலமாக நீட்டப்பட்டிருக்கும். அவற்றின் முனைகள், கூரையில் இருந்து வழியும் மழைநீரில் இருந்து மண் சுவர்களைப் பாதுகாக்கும். திடீரென்று மழை பெய்யும்போது யாராவது இந்த eaves க்கு அடியில் ஒதுங்கினால் உள்ளே இருப்பவர்கள் பேசுவதைக் கேட்க முடியும். அப்படித்தான் மேற்கண்ட வார்த்தை பிறந்தது.**

## குறைவான அறிவு ஆபத்தானது

அற்ப அறிவோடு, எல்லோரையும் விட தனக்கு எல்லாம் அதிகமாகத் தெரியும் என்ற எண்ணத்தோடு இருந்தால் அது பிறருக்குத் தீங்கு விளைவிப்பதில் முடியும். அலெக்சாண்டர் போப் (1688- 1744) எழுதிய திறனாய்வுக் கட்டுரைகள் ((Essays on Criticism) என்பதில் முதன் முதலாக இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.



**இங்கு துண்டு துண்டாக சிதறிக்கிடக்கும் படங்களை சரி யாக இணைத்து உருவத்தைக் கண்டு பிடியுங்கள்.**



## நிறத்தைக் கண்டறியும் உயிரினங்கள்



விலங்குகள், பறவைகள், பூச்சிக ளுக்கு நிறம் தெரியுமா? என்று நிறை யப் பேர் பரிசோதனை செய்தார்கள். அப்போது நடந்த ஆய்வில் தேனீக்களுக்கு மட்டும் நிறம் தெரியும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அது நீல-நிற அட்டை எங்கிருந்தாலும் அதைக் கண்டுபிடித்து வந்துவிடுகிறதாம். சிவப்பு நிற அட்டையை பழுப்பு நிறம் போல பார்க்கிறதாம். தேனீக்களுக்கு இன்னொரு அசாத்தியமான சக்தியும் இருக்கிறது. நம் கண்களுக்கு புலப்படாத அகச்சிவப்பு கதிர்கள் அதனுடைய கண்ணுக்கு நன்றாகத் தெரியுமாம். அதேபோல், கோழிக்கு எட்டு நிறங்கள் தெரியுமாம். நாய், பூனை, மாடு இவற்றுக்கெல்லாம் எந்த நிறமும் தெரியாதாம். குரங்குகளுக்கு நன்றாக நிறங்கள் தெரியுமாம்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 16.10.2011

**வர்ணம் தீட்டும் போட்டி இல.910**

தினமுரசு வாரமலர்

த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 908

**பரிசுக்குரியவர்:** எம்.எம்.எம்.அப்துல்லாஹ், நிவ்எஸ்பிட்டிய, கெலிஓயா.

பாராட்டுக்குரியவர்கள்

01. பு.நிருபன், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
02. ர.வைஸ்ணவி, கடற்கரைவீதி, திருகோணமலை.
03. ப.கரிகரன்,அக்கரைப்பற்று, மட்டக்களப்பு.
04. எம்.வரோதயன், கொழும்பு-6
05. க.அச்சுதன், பாரதிபுரம், கிளிநொச்சி.
07. க.பிருந்தா, புன்னைநீராவி, விசுவமடு.
08. ப.சுதாகரன், வாசிக்குடா,அக்கரைப்பற்று.
09. சி.அபி, வில்வெளி-05, கிண்ணியா.

# உடற்பயிற்சியும் சில உண்மைகளும்

நாம் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு உடற்பயிற்சி மிகவும் இன்றியமையாதது. ஆனால் உடற்பயிற்சி செய்ய ஆரம்பிக்கும் போது நம்மில் பலர் தவறான அறிவுரையாலும், கருத்துக்களாலும் குழப்பம் அடைந்து தாறுமாறாக உடற்பயிற்சி செய்ய நேரிடுகிறது. இந்தக் கட்டுரை உடற்பயிற்சி செய்ய ஆரம்பிப்பவர்களுக்கு அவர்களது குழப்பங்களை அகற்றவும், தவறான கருத்துக்களை நீக்கி, தெளிவு பெற்று, நோயற்ற வாழ்வு என்னும் குறைவற்ற செல்வத்தை அடையவும் உதவும் சிறிய முயற்சியாகும்.

❋ தொந்தியைக் குறைப்பதற்கு சிறந்த வழி, நமது உடலின் நடுப்பாகத்திற்கு (வயிற்றுப் பகுதிக்கு) பயிற்சி கொடுக்க வேண்டும்.

இது ஒரு தவறான கருத்து.

நம்மில் பலர் எந்த இடத்தில் கொழுப்பு அதிகமாக சேர்ந்து இருக்கிறதோ, அந்த இடத்தில் உள்ள தசைகளுக்கு பயிற்சி கொடுத்தால் கொழுப்பு கரைந்து தொந்தி குறையும் என்று எண்ணுகிறோம். ஆனால் ஆய்வுகள் தெரியப்படுத்துவது என்னவென்றால், நாம் பயிற்சி கொடுக்கும் இடத்தில் உள்ள கொழுப்புகள் கரைவதில்லை

இப்படிச் செய்வதற்கு பதில், நாம் உடற் பயிற்சியுடன் கூடிய உணவுக் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தால் நமது உடம்பிலுள்ள கொழுப்புகள் எல்லா இடங்களிலும் சீராகக் குறையும்போது நமது இடுப்புப் பகுதியில் உள்ள கொழுப்பும் கரைந்து தொந்தி குறையும்.

❋ வாரத்துக்கு இரண்டு நாட்கள் உடற்பயிற்சி செய்தாலே நமது உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு போதுமானது.

இதுவும் தவறான கருத்து.

எப்படி விற்றமின்கள் நமது உடலுக்கு தினசரி தேவையோ, அதுபோல் மிதமான உடற்பயிற்சியும், நமக்கு தினசரி தேவை. ஏனென்றால், உடற் பயிற்சிகளால் ஏற்படும் நல்ல மாற்றங்களை 48 முதல் 72 மணி நேரங்கள் வரைதான் நமது தசைகளால் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

ஆகவே நமது தசைகளும், அவற்றுடன் தொடர்புடைய நமது இரத்த, சுவாச, செரிமான உறுப்புகளும் உறுதியாகவும், நல்ல நிலையில் இயங்க குறைந்தது வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் (ஒரு நாள் விட்டு ஒரு நாள்) உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

❋ 3. எடையைக் குறைப்பதற்கு வியர்வை வெள்ளம் போல் கொட்டும் அளவுக்கு உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

இதுவும் ஒரு தவறான கருத்து.

வியர்வையானது உடற்பயிற்சி



செய்யும்போது ஏற்படும் உடல் சூட்டை தணிப்பதற்கு மட்டுமே உதவும். அது நமது எடையைக் குறைக்க உதவாது.

வியர்வை பொங்க கடுமையான உடற்பயிற்சி செய்த பிறகு நமது உடல் எடை குறைந்தாலும் அது உடலில் உள்ள நீரின் அளவு குறைவதால் ஏற்படும் தற்காலிக எடை குறைவே ஆகும்.

இதை விடுத்து உடல் தசைகளுக்கு கடுமையான பயிற்சி கொடுக்காமல் மிதமாக பயிற்சிக் கொடுத்தாலே நல்ல பலன் கிடைக்கும்.

❋ நடப்பது நல்ல உடற் பயிற்சிகளுள் ஒன்று.

உண்மை. நடக்கும்போது இரத்த ஓட்டம் சீராக உடலில் எல்லா பாகங் களுக்கும் கிடைக்கிறது. இதனால் திசுக்களுக்குத் தேவையான சக்தி கிடைப்பதால் நமது உடல் நலம் நன்றாக இருக்கும்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)



# 74 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

அது அசல் பொலிஸ் யூனிபோம் போலவே இருந்தது.

"இது எதற்கு?" என்றாள் பூலான்.

"போட்டுக்கொள் இன்று கொள்ளை அடிக்கப் போகப் போகிறோம்" என்றான் மல்லா.

"அதற்கு இது எதற்கு?" என்றாள் பூலான்.

"பொலிஸ்காரர்கள் மாதிரியே சென்றால் தான் சாலையில் இறங்கி கொள்ளையிட இதுதான் பெரிய வசதியாக இருக்கும். தவிர இது மிகப் பெரிய கொள்ளை! புரிகிறதா? மிகப்பெரிய கொள்ளையாக நடத்த பக்காவான திட்டம் தீட்டியிருக்கிறேன்!" என்றான் முகத்தில் மலர்ச்சி மின்ன மல்லா.

பூலான் தயங்கிவிட்டுக் கேட்டாள்,

"இப்போது ஏன் பணம் தேட அத்தனை அவசரம்.?"

"நல்லா கேட்டாய் போ! குருஜியை எப்படியாவது வெளியே கொண்டுவர வேண்டும். நீதிமன்றத்தில் பிணை கட்டுமட்டும் எவ்வளவு தேவை என்கிறாய்? 34 ஆயிரம் ரூபாய். எவ்வளவு பெரிய தொகை? முடியும் இந்த மல்லாவால் முடியும்! இந்த புத்லிபாயின் அவதாரம் என்னுடன் இருக்கும்போது எனக்கென்ன பயம்? சாதித்துக் காட்டுகிறேன் பார்!" கிட்டத்தட்ட கூவிக்கொண்டே போனான் மல்லா.

பூலான் மட்டுமல்ல மல்லா உட்பட எல்லாருமே பொலிஸ் யூனிபோம் அணிந்திருந்தனர்.

கான்பூர் அக்ரா பிரதான வீதியின் நடுவே பெரிய மரக்குற்றிகளை போட்டுத் தடையை ஏற்படுத்தினார்கள்.

கொள்ளையில் ஈடுபடுவது பூலானுக்கு அதுதான் முதற்தடவை. ஸ்ரீராமின் விடுதலைக்காக திட்டமிடப்பட்ட கொள்ளை என்பதால் பூலானுக்கு முதலில் அத்தனை உற்சாகம் இருக்கவில்லை.

ஆனாலும் சாலையை மறித்து தடை போடப்பட்டு, வாகனங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கத் தொடங்கி யவுடன் பூலானும் உற்சாகமாக மாறிவிட்டாள்.

அந்த சாலை வழியாகத்தான் டில்லிக்கு ஏற்றிச்செல்லும் வாகனங்கள் செல்வதுண்டு.

எதிரே தொடராக சில



வாகனங்கள் வருவது தெரிந்தது மல்லாவும் ஏனையோரும் சாலை யின் குறுக்கே வந்து நின்றுகொண்டனர்.

வாகனங்களில் இருந்த அனைவரையும் கீழே இறங்கச் சொன்னான் மல்லா.

"போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாக சோதனை போட வேண்டும்" என்று கூறினான் மல்லா.

சாரதிகள், நடத்துநர்கள் அனைவரும் இறக்கப்பட்டனர். அவர்களும் சோதனையிடப்பட்டனர்.

தங்களை அசல் பொலிஸ்காரர்கள் என்று, அவர்கள் எல்லாம் தங்கள் முன்பாக மண்டிபோட்டு அமர்ந்திருப்பதைக் காண பூலானுக்கு உள்ளூரச் சிரிப்பாக இருந்தது.

எந்தப் பொலிஸ்காரர் களால் வேட்டையாடப் பட்டார்களோ அதே பொலிஸ்காரரின் உடையில் தான் இப்போது நிற்பதை நினைக்கும் போது திருப்தியாகவும், ஒருவித மான கர்வமாகவும் இருந்தது.

வாகனங்களில் இருந்த பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டன. அவற்றில் வந்திருந்தவர் களில் சிலர் பெரும்தொகை யான பணம் வைத்திருந்தனர். அத்தனை பணத்தினையும் மல்லா பிடுங்கிக்கொண்டான். வழிச்செலவுக்காக மட்டும் கொஞ்சப் பணம் திருப்பிக் கொடுத்தான்.

அன்று இரவுக்குள் பதினைந்து இருபது வாகனங்களில் சூறையாடல் நடைபெற்றது.

"நான்தான் மல்லா. விக்ரம்மல்லா. புத்லிபாயின் புதிய அவதாரம் பூலான் தேவி. பொலிஸ் நாய்களிடம் போய்ச் சொல்லுங்களடா! முடிந்தால் எங்களுடன் மோத வரச்சொல்லுங்கள்! போங்கடா கழிசடை நாய்கள்!"

கொள்ளையிட்ட பொருட்கள் அயலிலுள்ள கிராமத்தினரின் உதவியுடன் கொண்டு செல்லப்பட்டன. அதற்காக அந்த கிராம மக்களுக்குப் பணம் கொடுத்தான் மல்லா. அவர்கள் மல்லாவை குனிந்து வணங்கிவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டார்கள்.

கிராமத்தவரிடமும் பூலானை அறிமுகம் செய்தான் மல்லா.

"பூலான்தேவி, புத்லிபாயின் அவதாரம் பிறந்துவந்துவிட்டாள்! இனி உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வராது! நாங்கள் இருக்கிறோம். பூலான்தேவி இருக்கிறாள்!" பூலானுக்கு ஆரம்பத்தில் வெட்கமாக சங்கடமாக இருந்தாலும், பின்னர் போகப்போக பழகிவிட்டது. மல்லா தன்னைப் பற்றி அறிமுகம் செய்யும்போது முகத்தைக் கல்லாக வைத்துக்கொண்டு நிற்கப் பழகிவிட்டாள்.

பூலானின் பெயர் சம்பல் பள்ளத்தாக்கில் பரவத் தொடங்கியது.

பூலானின் சந்தோசங் களுக்கு சவால்விடப்போவது போல் ஸ்ரீராமிடமிருந்து மல்லாவுக்கு மற்றொரு கடிதம் வந்திருந்தது. அவன் விடுதலை உறுதியாகிவிட்டது.

ஸ்ரீராம் விடுதலையாகப் போவது உறுதி என்று தெரிந்ததும் மல்லாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

கொள்ளைக் கோஷ்டியில் இருந்த போது ஸ்ரீராம் விடுதலையாகப் போகிறான் என்றதும் அந்தத் துப்பாக்கி யை வெளியே எடுத்துச் சுத்தப்படுத்தினான் மல்லா.

பூலானுக்கு எல்லாமே எரிச்சலாக இருந்தது. துப்பாக்கியை சுத்தம் செய்துவிட்டு பூலானின் அருகே வந்து அமர்ந்தான் மல்லா. அவள் தோளில் மெல்லத் தொட்டான்.

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? என் மீது கோபமா?"

"இல்லை!" என்றாள்.

(திருப்பங்கள் தொடரும்...)

# விளம்பரத்தில் நடிக்க 5 கோடி வாங்கும் விஜய்





சினிமாவைத் தொடர்ந்து விளம்பரங்களிலும் நடித்து வரும் விஜய், அடுத்து ஒரு பிரபல டெலிகாம் நிறுவன விளம்பரத்தில் நடிக்கவிருக்கின்றார்.

இதற்காக ரூ.5 கோடி சம்பளம் பேசப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சினிமாவுக்கு அடுத்தபடியாக பணம் அதிக அளவில் வருமானம் கிடைக்கும் துறை என்றால் அது விளம்பரத்துறை தான். பொலிவூட்டில் இருந்து கொலிவூட் வரைக்கும் முன்னணி நடிகர், நடிகையர் பலரும் இதில் காசு பார்த்து வருகின்றனர். அந்தவகையில் தமிழில் முன்னணி நடிகராக இருந்து வரும் விஜய்யும் சமீபகாலமாக விளம்பரங்களிலும் அதிகம் தலைகாட்ட துவங்கியுள்ளார்.

இதுவரை பே.'. ண்டா, கொக்கோ கோலா, ஜோஸ் ஆலுக்காஸ் போன்ற விளம்பரங்களில் நடித்து வந்த விஜய், இப்போது முதன்முறையாக பிரபல டெலிகாம் நிறுவனத்தின் விளம்பரம் ஒன்றில் நடிக்க போகிறார்.

இந்த விளம்பரத்தில் நடிக்க விஜய்க்கு பேசப்பட்டிருக்கும் தொகை ரூ.5 கோடி என்று கூறப்படுகிறது. தற்போது வேலாயுதம், நண்பன் படப்பிடிப்பில் இறுதி பணியில் இருக்கும் விஜய், இப்படங்களை முடித்த பின்னர், டெலிகாம் விளம்பரம் படப்பிடிப்பில் பங்கேற்க இருக்கிறார்.

## தர்காலி

நடிகை சோனா
மது விருந்தில் தயா
மானபங்கம் செய்த
இவ்வழக்கு போனது
பி.பி. சரண் முன் ஜ
ஆதாரத்தை சோனா
சரண் வருத்
இதையடுத்து வழக்
சம்பவங்கள் அவர் ம
சினிமாவை விட்டு

## எனக்கு பலம் தருவது தனுஷ் - செல்வராகவன்

சமீபத்தில் ஓடியோ வெளியான மயக்கம் என்ன படத்தை டைரக்சன் செய்துள்ளார் செல்வராகவன்.

இது பற்றி அவர் கூறுகையில், நாயகன் தனுஷ், நாயகி ரிச்சா இருவரின் நடிப்பில் 'மயக்கம் என்ன' படத்தின் மூலமாக அடுத்த தலைமுறையினரின் பிரச்சினைகளை தெரியப்படுத்தியுள்ளேன்.

தனுஷுடன் படங்களில் கைகோர்ப்பது பற்றியும் அவர் பேசியுள்ளார். தனுஷ் என் சகோதரர் என்பதால் என் படங்களில் நான் அவரை நடிக்க வைப்பதில்லை. நான் உருவாக்கும் கதைகளுக்கு பொருத்தமான நாயகன் தனுஷ் என்பதால் நாங்க இரண்டு பேரும் இந்த படத்தில் கைகோர்க்கிறோம். 'மயக்கம் என்ன' படத்தில் அவருக்கு பொருத்தமான கேரக்டர் என்பதால் நடிக்க வைத்துள்ளேன். அவரை வைத்து படம் பண்ணும்போது, அவர் எனக்கு மிகவும் தூண்டுதலாக இருப்பது எனக்கு கூடுதல் பலமாக நினைக்கிறேன் என்று கூறியுள்ளாராம் செல்வராகவன்.

## விஷாலின் இ

இமயமலை எனக்
எடுப்பதற்காகவே அ
என்று நடிகர் விஷால்
விஷா
றார்



இ
அழகு
வெகுவா
விட்டது. அத
அடிக்கடி சென்று
ஆரம்பித்தேன். இது
10முறை இமயமலை சென்றுள்ளேன். கடைசியாக அவன் படத்தை முடித்த பின்னர் சென்று வந்தேன்.

நான் அடிக்கடி இமயமலை செல்வது, ஆன்மீக பயணத்துக்கோ அல்லது வேறு எந்த காரணத்திற்கோ கிடையாது, முழுக்க முழுக்க ஓய்வு எடுப்பதற்காகவே செல்கிறேன் என்றார்.

## நிஜமாகவே அடி வாங்கிய ஜெயம் ரவி

ஆதி-பகவான் படத்தில் ஜெயம் ரவி இரண்டு வேடங்களில் நடிப்பதாக புதிய தகவல். ஆதி-பகவான் அமீர் இயக்கும் படம். ஜெயம் ரவி, நீது சந்திரா நடித்துள்ளனர். பாங்கொங்கில் பெரும் பகுதி படப்பிடிப்பு நடத்தப்பட்டது. ஜெயம் ரவி இந்தப் படத்தில் இரண்டு வேடங்களில் நடிப்பதை அமீரும் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஹீரோ, வில்லனா இல்லை வேறு வேடமா என்பது மட்டும் இரகசியம். 'ஆதிபகவான்' சண்டை காட்சியில் ஸ்டண்ட் கலைஞர்கள் தாக்கியபோது டைமிங் மிஸ் ஆகி நிஜமாகவே அடி வாங்கினார் ஜெயம் ரவி.

## பாடல் பாடுவதை நிறுத்தக்கூடாது - ஸ்ருதி முடிவு

புலக்பூ என்ற இந்தி படம்மூலம் நடிகையாக அறிமுகமான கமல்ஹாசனின் மகள் ஸ்ருதிஹாசன், தெலுங்கிலும் தலைகாட்டிவிட்டு, தமிழில் இப்போது தான் டைரக்டர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கியிருக்கும் 7ஆம் அறிவு படத்தின் ஹீரோயினாக அறிமுகமாகிறார். பேட்டியின் போது, சென்னையிலேயே பிறந்து வளர்ந்த பொண்ணு நான், முதன்முறையாக தமிழ் சினிமாவில் ஹீரோயினாக களமிறங்குகிறேன். நிறைய எதிர்பார்ப்போடு என் நடிப்பை, தமிழ் ரசிகர்கள் திரையில் பார்க்க போறாங்கனு நினைக்கும் போது, கொஞ்சம் பதட்டமாகவும், அதேசமயம் ரொம்ப ஆவலாகவும் இருக்கிறது. எனக்கு ரொம்ப உதவி செய்த டைரக்டர் முருகதாஸ் சேருக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 6ஆம் நூற்றாண்டுக் கதையில் நானும் இருக்கேன் என நினைக்கும் போது ரொம்ப பெருமையாக இருக்கிறது. இந்த முதல்பட வாய்ப்பை நான் என்றுமே என் வாழ்வில் மறக்கமாட்டேன் என்றார். மேலும் பாடகியாக சினிமா உலகில் நுழைந்த ஸ்ருதிஹாசன் எத்தனை படங்களில் நடித்தாலும் பாடல் பாடுவதை நிறுத்தக்கூடாது என முடிவு செய்திருக்கிறார்.



## ராணி முகர்ஜியாகும் த்ரிஷா

தெலுங்கில் வெளியான 'பாடிகார்ட்' என்ற படத்தில் மூலம் நாயகன் வெங்கடேஷுடன் இணைந்து நடித்துள்ளார் த்ரிஷா.

தற்போது விஷாலுடன் தமிழில் வெளிவர இருக்கும் 'சமரன்' என்ற புதிய படத்தின் மூலமாக கதாநாயகியாக இணைந்து நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

மேலும் சில படங்களில் த்ரிஷா நடிக்கவிருக்கிறார் என்றும் புதிய படத்திற்கான பேச்சுவார்த்தை நடப்பதாகவும் கூறுகிறார்கள்.

பொலிவூட்டின் நட்சத்திர நடிகை ராணி முகர்ஜி 'பிளாக்' படத்தில் நடித்திருக்கும் ரோலில் நானும் நடிக்க விரும்புகிறேன் என த்ரிஷா கூறியுள்ளார்.

படையப்பா பட வில்லி ரம்யா கிருஷ்ணன் நடித்ததை போன்ற பவர்புல்லான ரோலில் நடிக்க துடிக்கிறேன்.

நிச்சயம் அந்த மாதிரி கதாபாத்திரங்களில் நடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது என்று தன் மனதில் உள்ள ஆசையை த்ரிஷா வெளியிட்டுள்ளார்.

## பாலாவோடு கைகோர்க்கும் ஜீ.வி.பிரகாஷ்

'ஜென்டில்மேன்' படத்தில் குழந்தை பாடகராக அறிமுகமாகி வெயில் படம் மூலம் இசையமைப்பாளராக உருவெடுத்தவர் ஜீ.வி.பிரகாஷ்.

அதன்பின்னர் ரஜினியின் குசேலன், அங்காடித்தெரு, ஆடுகளம், மதராசப்பட்டினம் என இவர் இசையமைத்த அனைத்து படங்களிலும் பாடல்கள் மெகா ஹிட்டாகின. தற்போது இயக்குநர் பாரதிராஜாவின் அன்னக்கொடியும் கொடிவீரனும் படத்திற்கு ஜீ.வி.பிரகாஷ் இசையமைக்கிறார்.

தொடர்ந்து படவாய்ப்புகள் வந்துகொண்டிருக்கும் நிலையில் மறைந்த நடிகர் முரளி மகன் அதர்வாவை நாயகனாக வைத்து பாலா இயக்கவிருக்கும் புதிய படத்துக்கு இசையமைப்பாளராக ஜீ.வி.பிரகாஷை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

பாலாவின் படங்களில் இசைக்கு மிகவும் முக்கியத்துவம் உண்டு. திரையிசையில் இவருடைய படங்கள் அனைத்தும் சினிமாவில் ஒரு மைல்கல்லாக கருதப்படும். இந்த நிலையில் பாலாவின் அடுத்த படத்துக்கு இசையமைப்பாளராக ஒப்பந்தமாகியுள்ள ஜீ.வி.பிரகாஷும் அந்த புகழைத் தக்க வைப்பார் என்று நம்புவோமாக...!

## தற்காலிகமாக சினிமாவை விட்டு விலகுகிறேன் - சோனா

நடிகை சோனாவின் பாலியல் புகார் விவகாரம் சமரசத்தில் முடிந்துள்ளது. மது விருந்தில் தயாரிப்பாளர் எஸ்.பி.பி. சரண் கையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்ததாக பொலிஸுக்கு போனார். நீதிமன்றத்துக்கும் இவ்வழக்கு போனது. சரண் பொலிஸார் கைது செய்யாமல் இருக்க எஸ்.பி.பி. சரண் முன் ஜாமீன் பெற்றார். பாலியல் பலாத்காரம் நடந்ததற்கான ஆதாரத்தை சோனா பொலிஸில் அளித்ததால் வழக்கு சூடு பிடித்தது.

சரண் வருத்தம் தெரிவித்து சோனாவுக்கு கடிதம் கொடுத்தார். இதையடுத்து வழக்கை சோனா வாபஸ் பெற்றார். ஆனாலும் நடந்த சம்பவங்கள் அவர் மனதை மிகவும் பாதித்துள்ளது. இதனால் சில நாட்கள் சினிமாவை விட்டு ஒதுங்கி இருக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.



## விஷாலின் இமயமலை பயணத்தின் ரகசியம்

இமயமலை எனக்கு ரொம்ப பிடித்த இடம் ஓய்வு எடுப்பதற்காகவே அடிக்கடி இமயமலை சென்று வருகிறேன் என்று நடிகர் விஷால் கூறியுள்ளார்.

விஷால் அடிக்கடி இமயமலை சென்று வருகிறார். விஷாலுக்கு ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு இருப்பதாகவும், அங்குள்ள குகைகளில் தியானம் செய்துவருவதாகவும் கொலிவூட்டில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இதுகுறித்து விஷால் விளக்கம் அளித்துள்ளார்.

அவர் அளித்துள்ள பேட்டியில், எனக்கு 16வயது இருக்கும் போது என்னுடைய அப்பா, 'ஐ லவ் இந்தியா' என்ற படத்தை தயாரித்தார். இந்தப் படத்திற்காக இமயமலையை ஒட்டியுள்ள பல்வேறு பகுதிகளில் படப்பிடிப்பு நடந்தது. அப்படப் பிடிப்பின் போது நானும் இமயமலை சென்றேன். அப்போது முதலே, இமயமலையின் அழகு என்னை வெகுவாக கவர்ந்து விட்டது. அதன்பிறகு அடிக்கடி சென்று வர ஆரம்பித்தேன். இதுவரை 10முறை இமயமலை சென்றுள்ளேன். கடைசியாக அவன் படத்தை முடித்த பின்னர் சென்று வந்தேன்.

நான் அடிக்கடி இமயமலை செல்வது, ஆன்மீக பயணத்துக்கோ அல்லது வேறு எந்த காரணத்திற்கோ கிடையாது, முழுக்க முழுக்க ஓய்வு எடுப்பதற்காகவே செல்கிறேன் என்றார்.



ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சூர்யா, ஸ்ருதி நடித்துள்ள படம், '7ஆம் அறிவு'. ரெட் ஜெயண்ட் மூவீஸ் சார்பில் உதயநிதி ஸ்டாலின் தயாரித்துள்ளார்.


## 7ஆம் அறிவு தமிழர்களை தலை நிமிர வைக்கும்!

படத்தின் தீபாவளியன்று திரைக்கு வருகிறது.

பத்திரிகையாளர் சந்திப்பின்போது சூர்யா கூறியதாவது, 'கஜினி' படத்துக்குப் பிறகு எனது கேரியரில் மிக முக்கியமான படம். இதை விட பெரிய படத்தில் இனி நான் நடிப்பேனா?, நடிக்க முடியுமா? என்ற பயத்தை இந்தப் படம் உருவாக்கியிருக்கிறது. 6ஆம் நூற்றாண்டில் பிறந்த போதி தர்மன், சீனா சென்று நமது தற்காப்பு கலைகளை பரப்பி பாதி உலகத்துக்கு கடவுளாகியிருக்கிறான். ஆனால் அவனைப் பற்றி நம் யாருக்குமே தெரியாது. அப்பப்பட்ட வரலாற்று புருஷனாக நடிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது.

தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாடு எப்படி இருந்தது என்பதை இன்றைய இளம் தலைமுறையினருக்கு சொல்லும் படமாக அமைந்திருக்கிறது.

சமீபத்தில் முன்னேறிய சில நாடுகளின் கலாசாரத்தை கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றி வருகிறோம். அதைவிட உன்னதமான கலாசாரம் நம்முடையது என்று ஒவ்வொரு தமிழனையும் தலை நிமிர வைக்கும் படமாக இது இருக்கும்.





# முதியோரைப் பாதுகாப்போம்

இன்றைய நவீன யுகத்தில் தொழில்நுட்பங்களும், பொருளாதாரமும், வாழ்கைத்தரமும் வெகுவாக அதிகரித்துச்செல்லும் அதேவேளை பெற்ற பிள்ளைகளே கண்களாக நோக்க வேண்டிய பெற்றோர்களைக் கவனிக்கும் முதியோர் இல்லங்களும் அதிகரித்துச்செல்வதை அதிகமாக காண்கிறோம். சமகாலத்தில் பெருகிவரும் முதியோர் இல்லங்களில் முதியோர்கள் அதிகரித்து வருவது கவலைக்குரியது.

பிள்ளைப்பேறு இல்லாது அவதியுறும் பெற்றோர்களுக்கு மத்தியில் தவமிருந்து எத்தனையோ இன்னல்கள் அடைந்து ஒரு பிள்ளையைப் பெற்று வளர்த்து நல்ல கல்வியை தேர்வு செய்ய வழி செய்து சமூகம் மதிக்கும் நிலைக்கு நல்ல நிலையை உருவாக்கும் ஏணிப்படிகளாக இருப்பவர்கள்தான் பெற்றோர்கள். ஒரு தாயோ தந்தையோ தன் குழந்தையை நல்ல நிலையில் வாழச்செய்வதற்குத்தான் எண்ணுவார்களே தவிர அந்தப்பிள்ளையை தீயவிடயங்களுக்கு இட்டுச் செல்லவோ கெட்ட செயல்களை நாடச்செய்யவோ ஒருபோதும் சிந்திக்கமாட்டார்கள் மாறாக தான் செல்லும் பாதையில் தவறான பழக்கங்களுக்கு ஆளாகும் குழந்தைகள்தான் சமூதாயத்தின் தலையிடியாகவும் தூற்றப்படுபவர்களாகவும் மாறுகிறார்கள் அதற்கு ஒருபோதும் பெற்றோர் காரணமாக அமைவதில்லை.

திருமணம் முடித்து குடும்பமாக வந்தவுடன் கணவன், பிள்ளைகள் என்று அவர்கள் மீது கவனம் செலுத்துகிறார்கள். இதனால் சிலர் பெற்றோர்களை ஒரு பொருட்டாகவே எண்ணுவதில்லை. இதனால்தான் என் சூழ்நிலை இப்படி என்று தப்பித்துக்கொள்கிறார்கள். பெருமனம் கொண்ட பெற்றோரும் தன்பிள்ளை நலமுடன் இருந்தால் போதும் என்று ஒதுங்கிக்கொள்கிறார்கள். இது பிரதான காரணமாக அமைகிறது இயல்பாக நடைபெறும் காரணமாகவும் இருக்கிறது.

இதுதவிர வாய்க்கின்ற மனைவியால் அல்லது கணவனால் ஏற்படும் மனக்கசப்புகளுக்கு விடையாக பெற்றோரைச் சாடுகிறார்கள். இவர்களால்தான் எமக்கு எல்லாப் பிரச்சினைகளும் என்று எண்ணி அவர்களை தனிமைப்படுத்தி இவர்களை வெறுக்கிறார்கள், வேறாகிறார்கள். அவர்களை அநாதைகளாக்குகிறார்கள். மற்றும் செல்வங்களுக்கு அடிமையாகும் சிலராலும் இந்த நிலை பெற்றோர்களின் செல்வங்களை பிள்ளைகள் பங்கு பிரித்துக் கொண்டு ஒவ்வொரு பிள்ளையும் பந்தாடுவது போல் தன் பெற்றோரை நடத்துவதால் இதைவிட முதியோர் இல்லங்கள் மேல் என்றும் நாடுகிறார்கள். இவ்வாறே இயற்கை அழிவு யுத்தம் போன்ற பேரழிவுகளாலும் பெற்றோர் அநாதரவாகி முதியோர் இல்லங்கள் அதிகரிக்கிறது.

எல்லோராலும் அனுமதிக்கப்படுகின்ற தனிக்குடித்தனம் என்ற விடயம்தான் அதிகமான பெற்றோரை பரிதவிக்கச் செய்கின்றது. தனிக்குடித்தனம் என்று கணவன் - மனைவி மாத்திரம் வேறாக நினைக்கிறார்கள். தன்னைப்பெற்ற தாய் தந்தையையோ அல்லது தன் மனைவியைப்பெற்ற தாய் தந்தையையோ பொருட்டுத்துவதில்லை. தனிக்குடித்தனம் செல்லும்போது இவர்கள் எம்மோடு கூட இருந்தால் தலையிடியாக நோக்குவதால்தான் அவர்களையும் வீதியில் விட்ட இவர்கள் உல்லாச வாழ்கையுள் நுழைகிறார்கள். அது பிழை என்பது கருத்தல்ல. நமது சந்தோசம்போல் எமது பெற்றோரையும் சந்தோசமாக வைத்திருப்பது எமது கடமையாகாதா? நாங்கள் அவர்களைக் கவனிக்கிறோம் என்று ஊருக்குக் காட்டுவதற்காக வெள்ளி அல்லது ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் முதியோர் இல்லங்களை பார்வையிட்டுத் திரும்புகிறார்கள். இவைகள் வெட்கப்பட வேண்டிய விடயங்களாக அமைகின்றது


இவ்வாறு பல காரணங்களால் முதியோர் இல்லங்கள் அதிகரிக்கக் காண்கிறோம். ஆனால் அத்தனை காரணங்களுக்கும் விடைகள் இல்லாமல் இல்லை. அதற்கான தீர்வுகள் இருந்தும் நாடுபவர்களுமில்லை. மனித மனங்கள் பல ரகமானவை. ஒருவர் மற்றவர்போல் இருக்க மாட்டார்கள், எதிர்பார்க்கவும் முடியாது. இருந்தாலும் பெற்றோர் என்று பார்க்கும் கோணத்தில் முதியவர்கள் அனைவரும் பெற்றோர்கள்தான். எம்மைப்பெற்றாலும் வேறு ஒருவரைப்பெற்றவராக இருந்தாலும் அவர்களும் எம்போன்றவர்கள் அவர்கள் முதுமை அடைந்தார்களே தவிர அவர்களுக்கும் அத்தனை மனித குணங்களும் இருக்கின்றன. வயது ஏறஏற குழந்தைத்தன்மைதான் அவர்களிடம் அதிகரிக்கும். எவ்வாறு எமது குழந்தைகளை நோக்குகிறோமோ அவ்வாறே எம்பெற்றோரையும் நோக்கினால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். எம்மை குழந்தையாக நோக்கிய பெற்றோரை நாம் குழந்தையாக நோக்குமிடத்து நாளை எம் குழந்தைகள் எம்மை அரவணைப்பார்கள். ஆதரவு தருவார்கள் என்ற எண்ணம் எப்போதும் எம் மனங்களில் குடியிருக்குமேயானால் பெற்றோரை எக்காலத்தும் பிரியமாட்டோம், பிரிபவர்களை அனுமதிக்கவும்மாட்டோம். ஒவ்வொரு மனிதனும் இந்த எடுகோளை வாழ்கையாக கொள்வானேயானால் உலகத்தில் அநாதைப்பெற்றோர் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. தன்னைத்தான் திருத்தினால் உலகம் திருந்தும் என்பது போல் ஒவ்வொரு மனிதனும் தன் பெற்றோர்களை கவனிக்கத்துவங்கினால் அனைத்துப் பெற்றோர்களும் சுபீட்சம் பெறுவார்கள்.

## உன் பார்வையின் அர்த்தம்

தந்தியறுந்த வீணையாய்
சுதியிழந்து கிடந்தேன்
உன் ஓரப்பார்வையின்
அர்த்தம் புரியாமல்!
என் சாளரத்தின்
வழியே நுழையும்
மெல்லிய தென்றலோ
என் நிலை புரியாமல்
உயிரினைத் தழுவி
உஷ்ணமடையச் செய்கிறது.

ஆழ ஊடுருவி மண்ணோடு
பிணைந்து நிற்கும்
வேரினைப் போல்
என்னுள் பின்னியுள்ள
உன் ஞாபகச் சிதறல்களை
விரட்டி விடாதே.

வெயிலுக்குப் பயந்து
பதுங்கிக் கொள்ளும்
பனித்துளி போல்
உன் நினைவுக்குள்
ஒழிந்தே வாழ்கின்றேன் நான்.
விண்ணுலகில் காணாத
உன் தரிசனத்தை
மறைத்தே வைத்துள்ளாய்
எனைத் தொடரும்
என் நிழல் போல
உனைச் சுமந்தபடியே
தனிமரமானேன்.



எம்.கலைவாணி,
யாழ்.பல்கலைக்கழகம்.

# தேன் கிண்ணம்

## தேர்தல்

சூறைக் காற்றடிக்க அள்ளிக்கொண்டு
செல்வது புழுதி
மட்டுமல்ல வாக்குகளும்தான்...
சூறைக் காற்றாய் சுழன்றடித்து வருபவனே
அரசியல் தலைவன்தான்...
அள்ளிச் செல்லும் வாக்குகள்
கொட்டும் இடம் தெரியவில்லை...
குப்பைகள்தான் தெரிகின்றன...

விளைகின்ற காலம்போய்
தலைவர்கள் முளைக்கின்ற காலமோ?...
பட்டம் கிடைத்த சிறுவன் என
பதவியோடு பறந்தவன் வாக்குப் போட வருகிறான்
மீண்டும் வாக்குக் கேட்டு...

புரியும் எம் கஷ்டம்..
தெரியும் எம் தேவை...
வேண்டும் எம் வாக்கு...
அவர்களுக்கு
ஏனெனில் தேர்தல் காலம்...

மாரிகாலம் கொட்டும் பனியென
வாக்குறுதிகளும் கொட்டும் வாயெனும்
அணை உடைந்து...
காலம் கடந்து காய்கள் நகர
கண்கள் குருடு - செவிகள் செவிடு
இவர்களுக்கு...
நாங்களோ மடுவினில்
ஏறுவதற்கு வழியின்றி...

'மெஸ்மரிசம்' தேவையில்லை
'ஹிப்னாடிஸம்' தேவையில்லை
ஏமாறும் நாம் மாறாது போனால்
தினம் தினம் மயக்குவர் பேசிப் பேசியே...

கதைக்கேட்டு கற்பனையில்
மாளிகைகள் கட்டிவிட்டு
விழித்துப் பார்த்தால்
புரியும் - குடிசையும் பறித்திருப்பான்
அன்பார்ந்த 'தலைவன்'

மெய்யான மனதுடன்
பொய்யற்ற வார்த்தைகளும்
பிறழாத வாக்குறுதிகளும்
உழைக்கின்ற நோக்கோடும்
வருகின்ற தலைவன்
எவனோ நம் வாக்குகள் அள்ளி
வழங்கக் காத்திருப்போம்!

ஆஷிகா, கொழும்பு-12

## நான் கண்ட உலகம்

ஒரு நாள் கனவில் நான்
ஏழைகளின்
உலகத்திற்கு
சென்றேன்.
அங்கே வாழ்வதெல்லாம்
இதுவரை நான் காணாத
புது மனிதர்கள்.
தினமும்
உண்பதற்கு
அவர்களுக்கு
ஒருவேளை உணவே
கிடைக்கிறது.
உடலில் கிழிந்த அழுக்கான
ஆடைகளையே
அணிகிறார்கள்.
படிப்பில் குறைவாயினும்
அவர்கள் பண்பில்
உயர்ந்தவர்கள்.
இயற்கை முறையில்
அவர்கள் வாழ்வதால்
நோய்
பிணிகள் வருவதும்
மிகக் குறைவு.
அவர்களின் போக்குவரத்து
நடந்தே என்பதனால்
அங்கு
வாகன இரைச்சலுக்கு
இடமில்லை.
நவீன அறிவியல் சாதனங்கள்
அவர்களை இன்னும்
எட்டியும்
பார்க்கவில்லை.
அவர்களின் அகராதியோ
கண்ணீரினாலேயே
எழுதப்பட்டுள்ளது.
இருந்தும் மனதில்
தன்னம்பிக்கை என்னும்
ஆயுதத்தைக் கொண்டு
நாள் முழுவதும் வியர்வை
சிந்தி
மாடாய்
உழைக்கிறார்கள்
எங்களின் உலகமும்
ஒருநாள்
விடியுமென.

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.


## உறவுப் பாலம்

மறுக்கப்படாமல்
நியாயங்கள்
மதிக்கப்பட வேண்டும்!
மண்ணுக்குள் உண்மைகள்
புதைக்கப் படாமல்
உயர்த்தப்பட வேண்டும்!
ஒடுக்கப்படாமல் சுதந்திரம்
உலா வர வேண்டும்!
தடுக்கப் படாமல்
ஊடக சுதந்திரம்
தலை நிமிர்த்தப்பட வேண்டும்!
மறைக்கப்படாமல்
ஊழல்கள் வெளிவர
வழி திறக்கப்படவேண்டும்!
தேர்தல் காலத்தில்
வழங்கப்பட்ட வாக்குறுதிகள்
திட்டவட்டமாக
வாக்காளப் பெருமக்களுக்கு
வழங்கப்பட வேண்டும்!

காலங்கடத்தும் விசாரணைகள்
கைவிடப்பட்டு
தேசியப் பிரச்சினைக்கு
சிறந்த தீர்வைக்காண
உறவுப்பாலமமைக்க வேண்டும்!

*உண்மை விளம்பி,*
*கட்டைபறிச்சான்*

# காசநோய் பற்றிய விழிப்புணர்வு



Dr. சி. ஜமுனானந்தா

19.காசநோய் தொடர்பாக புதுமையான விழிப்புணர்வு சமூகத்திற்குத் தேவை. இது 2010 ஆம் ஆண்டு உலக காசநோய் தினத்தின் தொனிப் பொருளிலும் அடங்கியுள்ளது.

20.பல நோயாளிகளைக் கட்டாயப்படுத்தியே மருந்து எடுக்க செய்யவேண்டி உள்ளது. அவர்களிடம் மருந்து எடுக்கத் தயக்கம் காணப்படுகின்றது. மேலும் அவர்களுடன் உள்ள குடும்ப உறவுகளை பரிசோதனைககு அழைத்து வருவதற்கும தயக்கம் காணப்படுகின்றது. எனவே இதனை அனைவரும் மாற்ற நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

21.காசநோய் மருந்துகளை எடுக்கும் போது உணவில் விருப்பம் குறையலாம். இதன்போது சிறிய சிறிய அளவில் பல தடவைகள் உணவினை உண்ணலாம்.

22.காசநோய் அறிகுறிகள் பற்றிய அறிவு இருந்தும் எங்கே, எப்படி அணுகுவது என்று தெரியாது பலர் உள்ளனர். உண்மையில் அவர்கள் அரச வைத்தியாசலைக்குச் சென்று அங்குள்ள வைத்தியரிடம் தனது அறிகுறிகளைக் கூறி, காநோய் இல்லை என்பதையோ, உண்டு என்பதையோ உறுதிப்படுத்த உதவுமாறு கோரலாம். காசநோய்க்கான சிகிச்சை முற்றிலும் இலவசம் என்பதனையும் கூறலாம்.

23.காசநோய் இருப்பதற்கான அறிகுறிகள் மக்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும் காசநோய் அறிகுறிகள் பற்றி மக்கள் கூறுவது குறைவு. சகல வைத்திய நிலையங்களிலும் காசநோய் வந்ததென ஏற்றுக்கொள்ளும் தன்மை அல்லது கருதும் தன்மை மிகக் குறைவாக உள்ளது. எனவே காசநோய் அறிகுறியுடன் நோயாளிகள் வந்தால் சளிப்பரிசோதனை செய்வதற்குரிய வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

24.யோகட் கப்பில் (வாய் அகல மானது) சளியினை எடுப்பதால் போதிய அளவு சளியினை இலகுவாகச் சேகரிக்கலாம். சளிப்பரி சோதனையை எங்கே செய்யலாம் எனப் பொதுமக்களுக்கு விளக்கலாம். நோயை இனம் காண நாளெடுப்பதால் மற்றவர்களில் நோய் பரவும் சந்தர்ப்பம் அதிகரிக்கும்.

25.பாடசாலை, வேலைசெய்யும் இடங்கள், சிகிச்சை நிலையங்கள் என்பவற்றில் காசநோய் தொடர்பான கிரமமான விழிப்புணர்வு அவசியம்.

26. சமூகத்தில் வயது முதிர்ந்தவர்கள் இளவயதினில் விசேட கவனம் எடுத்தல் வேண்டும்.

27. பலருக்கு காசநோய் தொடர்பாக வைத்திய ஆலோசனை பெற நேரம் ஒரு தடையாக உள்ளது. ஏனெனில் மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் வேலை நோக்கில் மட்டுமே தொழிற்படுகின்றது. எனவே சிறந்த நேரமுகாமைத்துவம் மூலம், தமது நோய் அறிகுறிகளினூடு வைத்திய ஆலோசனை பெறல் அவசியம். மற்றும் தொழில் வழங்குனர்களும் இதற்கான விசேட விடுமுறையினை வழங்கல் வேண்டும்.

28.வைத்திய சாலையில் காசநோயாளிகளை ஒதுக்குப்புறத்தில் வைத்திருத்தல், அவர்களிற்கு வாய்க்கவசம் கட்டுதல் என்பன நோயாளியினைப் புறக்கணிக்கும் செயல்களே. காசநோயாளி என சளிப்பரிசோதனையில உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களிற்கு உடனடியாக அழிந்துவிடும். ஏனைய கிருமிகளும் இரண்டு கிழமைகளில் அழிந்துவிடும். பெரும்பாலும நோய் அடையாளம் காணப்பட்ட பின் தொற்றும் சந்தர்ப்பம் குறைவு. அடை யாளம் காணப்படுவதற்கு முன்னரே தொற்றும் சந்தர்ப்பம் அதிகம். எனவே, மேற்கூறிய செய்கைகளால் பொதுமக்கள் தமக்கு காச நோய் உண்டெனப் பரிசோதிக்க வரமாட்டார்கள். இது காசநோய்க கட்டுப்பாட்டில் பாரிய பின்னடைவைத் தரும்.

29.சிலர் வர்த்தக விளம்பரங்கள் தொடர்ச்சியான இருமல், காய்ச்சல் இருந்தால் தங்களது இயற்கை மருந்துகளால் குணப்படுத்தலாம் எனக் கூறுகின்றன. இதுவும் மக்களிடையே தவறான கருத்தினை நிலைக்க வைத்து காசநோய் அறிகுறி காணப்படுமிடத்துச் சளிப் பரிசோதனைக்கு வருதலைத் தடுக்கின்றது. இத்தகைய தப்பான விளம்பரங்களைத் தவிர்த்தல் நல்லது.

30.சமூகத்தில் யாராவது காசநோய் அறிகுறி உடையவர்களை மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு கூட்டிவரலாம் அல்லது வழிகாட்டலாம். சமூகத்தின் சகலமட்டத்தினரது பங்களிப்பினையும் எடுத்தல் வேண்டும்.

காசநோயினைக் கண்டுபிடிப்பதில் உள்ள பிரச்சினைகள்.

01.நோயாளிகளுக்குப் போதிய விளக்கங்கள் இல்லை.

02.நோயாளர்களால் தமக்கு காசநோய் வந்துள்ளதை ஏற்றுக்கொள்ளமுடியாமை.

03.சமூகத்தில் தனிமைப்படுத்தப்படுவோம் என்ற பயம்.

போதிய போசாக்கு இன்மை காசநோய் ஏற்படக் காரணமாக அமையலாம்.

31.அதிக வசதி படைத்தவர்களும் கௌரவம் காரணமாக சளிப்பரிசோதனைக்கு வருவதில்லை. இதனைத் தவிர்க்க, தனியார் வைத்திய சாலைகளில் சளிப்பரிசோதனை செய்ய வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

32.ஆரம்பத்திலேயே காசநோய்க்குச் சிகிச்சை எடுத்தால் பூரண சுகம் அடைவர். பல நாட்டிகளின் பின் சிகிச்சை எடுக்கும்போது நுரை யீரலில் நிரந்தரப்பாதிப்புக்கள் ஏற்பட்டு இருக்கும். இதனால் நோய் குணமடைந்த பின்பும், இருமல் இருக்கலாம்.

34.காசநோய்க்கு மருந்து எடுத்துக் குணமடைந்தவர்களை மற்றவர்கள் ஒதுக்குகின்றனர். இது தவறானது.


(தொடரும்...)

# கண்ணதாசனின்

## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 09

188



"அதாவது ஆகாயத்தில் தேவர்கள் இருக்கிறார்கள் அல்லவா, அவர்களெல்லாம் சுருட்டுப் பிடிக்கிறார்கள். அதுதான் இது!" என்பார்.

நான் நம்பி விடுவேன்.

மழை பெய்யும்:"இது என்ன தாத்தா" என்பேன்.

"தேவர்களெல்லாம் குளிக்கிறார்கள்: அதுதான் இது!" என்பார்.

அதையும் நம்பிவிடுவேன். இருபது வயதிலும் இப்படிப்பட்ட பக்குவத்தில் நான் இருந்தேன் என்பதை வெட்கமில்லாமல் ஒப்புக்கொள்கிறேன்.

இல்லையென்றால் எவனோ ஒரு நாத்திகனோடு நட்பு ஏற்பட்டு, நான் நாத்திகனாக இருப்பேனா?

ஒரு மாயா வாதம், போலித்தனம்- மனது அறிந்தே சொன்ன பொய், நாத்திகம் என்பது.

வாழ்க்கையில் அலுத்தவர்கள், சலித்தவர்கள், எவ்வள்வோ காலம் கடவுளை வேண்டியும் பயனில்லை என்று நினைத்தவர்கள் - இவர்களெல்லாம் சிக்கிக்கொண்ட வலையே நாத்திகம்.

சிக்கிக்கொண்ட ஈக்களைக் கடித்துத்தின்ன முயன்ற சிலந்திகளே, அதன் தலைவர்கள்.

அதற்கு அவர்கள் பூசிய சாயம்? 'பகுத்தறிவு' என்பது.

சட்டையைக் கறுப்பாகப் போட்டுக் கொண்டு துக்கம் கொண்டாடிய அவர்கள், உள்ளத்தையும் 'கறுப்பாகவே' வைத்திருந்தார்கள்.

பெண்டாட்டியைக் கோயிலுக்கு அனுப்புவார்கள், பிள்ளையை ஜாதகம் எழுதி வாங்கிவரச் சொல்லுவார்கள். மேடையில், 'எல்லாம் பொய்' என்று பேசுபவர்கள். நான் அதை நம்பினேன்.

அதுவரை கேளாத புதிய விடயமாக இருந்ததால் அதைச் சொல்வதைப் பெருமை என்று நினைத்தேன். எதையும் மறுப்பது அறிவுக்கு அடையாளம் என்று முடிவு கட்டினேன்.

இவ்வளவு கூத்தும், இரண்டு மூன்று ஆண்டுகளே.

ஆயினும், இந்த அனுபவங்களையும், அந்தத் தலைவர்களையும் என்னால் மறக்க முடியாது.

பொய்யும் அயோக்கியத்தனமும் நிறைந்த ஒரு உலகத்தை, புனித உலகமாகச் சித்தரித்த அந்தக் கெட்டிக்காரர்களை, எப்படி நான் மறக்க முடியும்?

அவர்கள் கடவுளைப் பற்றிய கதைகளின் மீதும், புராண இதிகாசங்களின் மீதும் விளையாடினார்களே தவிர, அடிப்படைக் கடவுள் தத்துவத்திற்குச் சரியான விளக்கமும், மறுப்பும் கொடுக்க முடியவில்லை.

அதனால்தான் நான் விரைவிலேயே அதிலிருந்து மீண்டுவிட்டேன்.

பிறப்புக்கு முந்தியதென்ன? இறப்புக்குப் பிந்தியதென்ன?

விஞ்ஞானிகளே திண்டாடும் இந்தக் கேள்விக்கு, இந்த அரைவேக்காடுகள் என்ன பதில் சொல்ல முடியும்?"

"அம்மிக் குழவி சாமி" என்றும், அந்தக் கல்லை உடைத்து ரோட் போடுவோம்" என்றும் ஊர்ச்சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டு திமிர்பிடித்துப் பேச முடிந்ததே தவிர, இன்னபின்ன காரணங்களால் கடவுள் இல்லை என்று எவனுமே விளக்கம் சொன்னதில்லை.

அதிலே, சிக்கிக்கொண்ட நானும், அவர்கள் பாணியிலேயே, "அடியே, காஞ்சி காமாட்சி! மதுரை மீனாட்சி! காசி விசாலாட்சி! உங்களுக்கு ஏனடி மண்டபங்கள்?" என்று பேசத் தொடங்கினேன்.

எந்த வெயிலிலும், வற்றிப் போகக்கூடிய அந்தக் காட்டு வெள்ளம் என்னையும், இழுத்துக்கொண்டு போயிற்று.

நாத்திக வாதம் ஒரு போலித்தனம் என்பதை என்னால் உணரமுடியவில்லையே. அப்போது! அவர்களை மட்டுமே குறைசொல்லி என்ன பயன்? அந்தப் பக்குவம் எனக்கில்லையே அப்போது!

நான் யார் என்பதை முற்றிலும் அறியவில்லையே அப்போது!

மகத்தான காவியங்களைப் படைக்கக் கூடிய உள்ளறிவு எனக்கிருப்பதாகத் தோன்றவில்லையே. அப்போது!

கூட்டம் கூடுவார்கள்; ஆட்டம் போடுவார்கள்; வசூல் செய்வார்கள். வாழ்க்கை நடத்துவாரகள். நானோ கைச்செலவு செய்துகொண்டு, கத்திக்கொண்டிருப்பேன்.

காரைக்குடிக்குப் போகும் போதெல்லாம் சில செட்டியார்கள் கேட்பார்கள், "ஏண்டா தம்பி. எவ்வளவோ பெரிய திறமையை வைத்துக் கொண்டு இந்தக் கூட்டத்தில் போய்க் கிடக்கிறாயே" என்று.

அப்போது எனக்குப் புரிவதில்லை.

பல்லாயிரம் ஆண்டு காலப் பண்பாடுகளைப் பற்றிய வரலாற்று அறிவு எனக்குக் கொஞ்சம்கூட இருந்ததில்லை என்பதை, வெட்கத்தோடு ஒப்புக்கொள்கின்றேன்.

அந்த இரண்டு மூன்று ஆண்டுகள், நானும் கறுப்புச் சட்டை போட்டிருந்தேன். பார்ப்பதற்கே அருவருப்பானதும், வெயில் காலத்துக்கு ஒத்துவராததுமான கறுப்புச் சட்டையை, நான் விருப்பத்தோடுதான் போட்டேன்.

சீதையைப் பற்றியும், திரௌபதியைப் பற்றியும் கேவலமாக எழுதினேன். கம்பனைக் கேலி செய்தேன்.

சுய உணர்வில்லாத செம்மறி ஆடு, கசாப்புக் கடைக்குத் தானே போய்க் கழுத்தை நீட்டுவது போல, நீட்டினேன். நல்ல வேளை, கத்திவிழும் முன்பாகவே புத்தி வந்து வெளியேறினேன்.

நாத்திகன் சொல்வது என்ன?

திரும்பத் திரும்ப ஒன்றுதான்.

"சூரியன் இயற்கையாக வருகிறது. சந்திரன் இயற்கையாக வருகிறது. பிள்ளை தகப்பனாலே பிறக்கிறது. மரணம் இயற்கையாகவே நடக்கிறது. இதிலே கடவுள் என்றொருவன் இல்லவே இல்லை" என்பதே அது.

அதிலே எனக்குப் புரியாத ஒன்று, சில தகப்பன்மார்கள் இருந்தும் அவர்களுக்குக் குழந்தை இல்லையே ஏன்?

அதுவும் இயற்கைதானா? இல்லை, அவன் ஆண்மகன் இல்லையா?

நான், யாரையும் குறிப்பிடவில்லை. பொதுவாகவே சொல்கிறேன்.

எல்லாமே இயற்கையாக நடக்கும் என்றால், செத்துப்போன பிறகு, தானே ஏன் அந்தச் சடலம் சுடுகாட்டுக்குப் போகக் கூடாது?

அப்போது மட்டும் நான்கு பேர் தேவைப்படுகிறதோ, ஏன்?

இந்தச் சிந்தனை, என் கண்களைத் திறந்தது.

உள்ளே இழுக்கும் காற்று, பிராணன், வெளியேவிடும் காற்று, அபானன், இந்தக் காற்றைப் பத்திரமாகப் பாதுகாக்க உடம்பிலே எந்த மூடியும் இல்லை. ஆனால் ஓட்டைகளோ ஒன்பதிருக்கின்றன.!

தினம் தினம் போய் வந்து கொண்டிருக்கும் காற்று, ஒரு நாள் போனால் திரும்புவதில்லை.


தொடரும்...

# நெற்றிக் கண்ணைத் திறக்கிறான்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் மிக முக்கியமான வீரர்களில் ஒருவர் ஷேன்வொட்சன், அவுஸ்திரேலிய அணியன் பலவீனர்கள் பற்றிவர் பேசுகிறார். இன்றைய பலவீனமான நிலைக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை, பயிற்றுனர்கள், தெரிவானார்கள் அத்தனை பேரும் பொறுப்பு என்கிறார் அவர். குறிப்பாக நடந்து முடிந்து அவுஸ்திரேலிய ஆஷஸ் தொடர் தோல்விக்கு இவர்களின் திட்டமற்ற மந்தமான செயற்பாடுகளே காரணம் என்கிறார் அவர்.

முதலாவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேன் நகரில் நடப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்னமே இவர்கள் ஏன் அணித்தெரிவை அவசரப்பட்டு முடித்தார்கள் என்பது இவரது கேள்வி. அதாவது இந்தக் கால இடைவெளிக்குள் ஒரு சில முதல்தரப் போட்டிகள் முடிவடைய இருந்தன. அதோடு அவுஸ்திரேலிய 'A' அணி இங்கிலாந்துடன் ஒரு போட்டியில் விளையாடவிருந்தது. இப்படி இருக்கையில் தெளிவான தெரிவொன்றை மேற்கொள்ள சந்தர்ப்பம் இருந்தவேளையில் ஏன் அவசரப்பட்டார்கள். பொருளாதார, விளம்பர நலன்கள் இங்கு முதன்மைப்படுத்தப்பட்டனவா என்பது அவரது கேள்வி.

அதேவேளை ஆஷஸ் தொடரின் போது கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் பந்து வீச்சாளர்களே என்பது இவரது ஆதங்கம். அதாவது தோல்வியின் சுமை முழுவதையும் எல்லோரும் சேர்ந்து பந்து வீச்சாளர் மீது சுமத்திவிட்டார்கள். அவர்களைத் தைரியப்படுத்தி சரியான வழிகாட்டல்கள் செய்ய யாரும் இல்லாமல் போய்விட்டது. உதாரணமாக நட்சத்திர பந்து வீச்சாளர் மிட்சல் ஜோன்சன் தகுதி நிலை குறைந்திருந்த போது அவரது தகுதியை மேம்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்பது அவரின் கேள்வி. உண்மையில் என்ன செய்திருக்க வேண்டும் என்றால் அவரை அவரது மானசீகக் குருவான டெனிஸ்லிலியிடம் அனுப்பியிருக்கவேண்டும். ஆனால் அதைப்பற்றி யாருமே சிந்திக்கவில்லை. மேலும் அவுஸ்திரேலியப் பந்து வீச்சுப் பயிற்சியாளரான டேவிட் சாகாரை விலகிச் செல்ல ஏன் அனுமதித்தார்கள்.




இவர் உலகப் புகழ்பெற்ற பந்துவீச்சுப் பயிற்சியாளர். ஆனால் அவரைத் தக்க வைத்துக் கொள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் முடியாது போக, எமது நேர் எதிர் அணியான இங்கிலாந்து அவரது சேவையைப் பெற்றுக்கொண்டது. ஆஷஸ் தொடரில் எமக்கு எதிரான சிறப்பான பந்துவீச்சை இங்கிலாந்து வெளிப்படுத்த இவரது பயிற்சி கூடக் காரணமாக அமைந்திருக்கலாம் என்பது இவரின் கருத்து. இது மட்டுமல்ல அண்மைக்காலங்களில் அவுஸ்திரேலியாவின் சிறந்த கிரிக்கெட் பயிற்றுனர்கள் எல்லாம் கடல் கடந்து வேறுவேறு அணிகளுக்குத் தம் திறமையான பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவுஸ்திரேலிய வீரர்களாகிய நாம் அவர்களை இழந்து போய் நிற்கின்றோம். இந்த நிலையில் சில வருடங்களுக்கு முன் இருந்த உன்னதநிலையை அடைவது எவ்வாறு என்று தனது கவலைகளையெல்லாம் கொட்டித் தீர்த்துள்ளார் ஷேன் வொட்சன்.

இலங்கைக்கு எதிரான தொடரில் ஆஹா ஓஹோ என்று அவுஸ்திரேலியா செய்யாவிட்டாலும் வெற்றிக் களிப்புடனேயே நாடு திரும்பியுள்ளது. இந்த வேளையில் ஆஷஸ் தொடரில் இருந்தே எல்லாம் சரியாக இருந்திருந்தால் பழைய நிலையை அடையும் ஒரு முதல்படியாக அது அமைந்திருக்கம் என்பதை ஷேன் வொட்சன் சொல்லாமல் சொல்லிநிற்கிறார்.

தற்போதைய அணியின எழுச்சி இன்னும் விரைவுபடவேண்டும் என்று ஷேன் வொட்சன் விரும்புவதும் தெரிகிறது. எல்லா இடங்களிலும் காணப்படும் ஊழல்கள், மந்த நிலைப் போக்குகள், அலட்சியங்கள் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டிலும் இல்லாமல் போகவில்லை என்றும் தெரிகிறது.

# இந்தியாவின் பெருமை இவராவார்



இவர் இந்தியாவில் காணப்பட்ட சமஸ்தானங்கள் ஒன்றின் மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர். அதனாலேயே நவாப் ஒப் பட்டோடி என்று அழைக்கப் பட்டார். இவரது இயற்பெயர் மன்சூர் அலிகான். இதனையே சுருக்கமாக MAK என்று அழைத்தனர். இவரைக் குறித்து ஊடகங்கள் சொல்லும். அதோடு ரைகர் என்றொரு பெயரும் இவருக்கு உண்டு. இன்றைய இளம்தலை முறையினருக்கு சிறிது தயக்கம் இருந்தாலும் 60களில் கிரிக்கெட் ரசித்தவர்களுக்கு இந்த முன்னோட்டம் அளவுக்கதிகம். ஏனெனில் இந்தியக் கிரிக்கெட்டின் விடிவெள்ளி என அழைக்கப்படுபவர்தான் கடந்த வாரம் காலமான மேற்கண்ட பட்டங்களுக்கெல்லாம் உரித்துடையவர். இருபத் தொரு வயதில் இந்தியக் கிரிக்கெட் அணித்தலைமை திணிக்கப்பட்டவர். விளை யாடிய 46 டெஸ்ட் போட்டிகளில் 40 இல் அணித்தலைவராக விளங்கியவர். இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஒக்ஸ்போட் பல்கலைக்கழகப் பட்டதாரி.

இவரைப்பற்றிச் சமகாலத்து வீரர்கள் கூறுங்கருத்துக்கள் வித்தியாசமானவையாக இருக்கின்றன. இந்தக் காலத்தில் இயல்பாகக் களத்தடுப்பில் நாம் காணும் SLIDE - DIVE - CHASE போன்றவற்றைச் செய்து களத்தடுப்புச் செய்ய இவரது கால வீரர்கள் வெட்கப்பட்டார்களாம். அது நாகரிகமாகப்படவும் இல்லையாம். இந்திய அணியில் இவற்றைப் புகுத்தியவர் பட்டோடிதானாம். இன்று இவை இல்லாத களத்தடுப்பு நினைத்துக் கூடப் பார்க்க முடியாதது.

இன்னொரு விடயம் அந்தக் காலத்தில் கிரிக்கெட் சமஸ்தான ராஜாக்கள் பெரும் தனவந்தர்கள், உயர்குடியினருக்கே உரியதாகக் காணப்பட்டதோடு, சாதாரண மக்கள் சர்வதேச மட்டக் கிரிக்கெட்டை நினைத்துக் கூடப்பார்க்க முடியாமல் இருந்ததாம். அந்த நிலையை மாற்றி சாதாரண மக்களும் கிரிக்கெட் விளையாட்டில் அங்கீகாரம் பெறக்காரணமாக இருந்தவர் இவர்தானாம். இப்படியெல்லாம் கூறிச் செல்பவர் இவருடன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவரும், ஒன்றாக சர்வதேசக் கிரிக்கெட் ஆடியவருமான அப்பாஸ் அலிபோய்க் அந்தஸ்த்துக்கல்ல, திறமைக்கும் தகுதிக்கும் மட்டுமே கிரிக்கெட் என்பதை புகுத்திய பட்டோடி எந்தவித வேறுபாடுகளையும் கடந்தவராக விளங்கினாராம். இதற்கு இவர் பின்பற்றிய மார்க்கம் ஒரு விசேட காரணம் என்றும் சொல்லலாம்.

மேலும் ஒரு காலகட்டத்தில் சர்வதேச கிரிக்கெட் உலகம் கண்டு அஞ்சிய நால்வர் கொண்ட சுழல் பந்துவீச்சாளர்களை உருவாக்கியவர் பட்டோடிதான். பிஷன் சிங்பேடி, பிரசன்ன, சந்திரசேகர்-வெங்கட்ராமன் ஆகிய நான்கு சுழல் பந்துவீச்சாளர்களும் ஒரு காலத்தில் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சிம்ம சொப்பனம். அவர்களை உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும்.

இவரது திருமணம் கூட ஒரு வகையில் புதுமையானதுதான்.



மிகுந்த சமூகக்கட்டுப்பாடுகளுக்குள் வளர்ந்த இவர் அக்காலத்தின் முன்னணி ஹிந்தி நடிகை சர்மிளா தாகூரை பல தடைகளையும் கடந்து திருமணம் செய்துகொண்டார். அந்தத் திருமண வாழ்க்கை இவருக்கு மிக வெற்றிகரமானதாகவே அமைந்தது. இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் ஒரு மகனுக்கும் தந்தையான இவர் பிற்பட்ட காலத்தில் மட்டுமல்ல் தற்போது அவர் மறையும்வரை இந்தியாவின் கௌரவம்மிக்க மனிதராகவே, கிரிக்கெட் வீரராகவே வாழ்ந்து மறைந்தார். இவரது மூன்று பிள்ளைகளும் பொலிவூட் சினிமா உலகைச் சார்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். அதிலும் சாய்ப் அலிகான் மிகமிகப் பிரபல்யமாக இருக்கிறார். இவரது மறைவின் பின் பல விமர்சகர்கள் இவரது ஓய்வின்பின் கிரிக்கெட் உலகம் இந்த ஜாம்பவானைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று ஆதங்கப்பட்டிருந்தார்கள். எந்த ஜாம்பவான்தான் பூரணமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார் கிரிக்கெட் உலகில். எனவே எந்தவகையிலும் பட்டோடி எதையும் இழந்துவிடவில்லை. இவரால் இந்தியாவுக்குப் பெருமைதான்.

## விளையாட்டு

ஜோசப் கிருஷ்ணா

# உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை

DRS என்னும் மூன்றாவது நடுவரிடம் முறையிடும் முறையும், அதனூடான இலத்திரனியல் உபகரணங்களின் பாவனை தொடர்பான நம்பகமும் இந்திய கிரிக்கெட் வட்டாரங்களில் என்றுமே வரவேற்பைப் பெற்றிருக்கவில்லை. இருந்தும் கூட ஏனைய நாடுகள் ஏற்றுக்கொண்டமை, மற்றும் ICCயின் விருப்பம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்திய கிரிக்கெட்சபை ஓரளவில் அதனை ஏற்றுக்கொண்டிருந்தது. கடந்த ஜூலை மாதம் ஹொங்கொங்கில் நடைபெற்ற ICC கூட்டத்தொடரின் பின்பே இந்திய கிரிக்கெட் சபை ஓரளவாவது DRS முறையை ஏற்றுக்கொண்டது. அதாவது (Ball Tracking) பந்து செல்லும் வழியை ஏற்றுக்கொள்ள இயலாது. ஆனால் அதி உயர் தொழில்நுட்பமான Hot Spot முறையை ஏற்றுக்கொள்ளலாம் என்றே கூறியது.

ஆனால் இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் ராகுல் ட்ராவிட்டிற்கு ஏற்பட்ட முறையற்ற அவுட்கொடுப்பு BCCI கடுப்பின் உச்சத்திற்கே கொண்டுசென்றுவிட்டது. இதனால் RDS முறையை ஏற்றுக்கொள்வதில் இருந்து இந்திய கிரிக்கெட் சபை விலகிக்கொள்ளப் போவதான நடவடிக்கையில் ஈடுபடுகிறது போலத் தெரிகிறது. BCCI இன் தலைவர் சிறினிவாசம் இதுபற்றிப் பேசும்போது Hot Spot முறை நம்பகமும் தகுதியும் கொண்டது என்றே நினைத்திருந்தோம். ஆனால் இந்திய இங்கிலாந்துச் சுற்றுப்போட்டியுடன் அந்தக் குழுவில் இருந்து விலகுவதே உசிதம் என்று நம்புகிறோம் என்று கூறியுள்ளார். ஏனெனில் முன்னர் கூறியது போல மைதான நடுவர்களுக்கும் இலத்திரனியல் தொழில்நுட்பத்துக்கும் இடையில் சிக்கிக்கொண்டு மிகவும் பரிதாபமாகப் பாதிக்கப்பட்டவர் ட்ராவிட் ஆவார். இந்திய அணி இங்கிலாந்தில் பரிதாபமாகத் தோற்றுப்போய்க் கொண்டிருந்த நிலை யில் இப்படியான சம்பவங்கள் BCCI மிகுந்த விசனத்துக்கு உள்ளாகிவிட்டன.

ஏற்கெனவே இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனி மூன்றாவது நடுவரிடம் முறையிடும் முறைக்குத் தனது எதிர்ப்பைத் தொடர்ந்தும் காட்டி வந்தார் என்பதைக் குறிப்பிடவேண்டும். ட்ராவிட்டின் சம்பவத்துக்கு முன்னமே பல சந்தர்ப்பங்களில் மூன்றாவது நடுவரிடம் முறையிடும் முறையின் மூலம் அணி வீரர்கள் பாதிக்கப்பட்டமையை எடுத்துக் காட்டியிருந்தார். ஆனாலும் இந்திய கிரிக்கெட் சபை எடுக்கும் முடிவை மீறும் அதிகாரம் டோனிக்கு இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதேவேளை இந்தியக் கிரிக்கெட் சபையும் தானாக விரும்பி இந்திய வீரர்களைப் பலிக்கடாக்கவில்லை என்பதும் தெளிவு.

மொத்தத்தில் எப்பொழுதுமே சர்வதேச கிரிக்கெட் உலகில் இந்திய கிரிக்கெட் சபை மீது ஒரு காழ்ப்புணர்ச்சி உண்டு. அதாவது அதிகார பலமும், பண–பலமும் கொண்டவர்கள். சர்வதேச கிரிக்கெட் சபையைக் கூடத் தம் வியூகத்துக்குள் வைத்துக்கொள்ள முனைபவர்கள். தாம் இட்டதே சட்டம் என்பதை நிறுவ முயல்பவர்கள்... என்று குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து செல்லும். ஆனால், மூன்றாவது நடுவரிடம் முறை யிடும் இலத்திரனியல் தொழில்நுட்ப முறையின் குறை பாடுகளை இந்திய கிரிக்கெட்சபை சரி யாக எடுத்துக் கூறியிருப்பதன் மூலம், இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் சபை சரியான நோக்கையே கொண்டிருந்தது என்பதை நிரூபித்துவிட்டார்கள். எனவே இந்திய வீரர்களுக்கு மட்டும் அல்ல, சர்வதேச கிரிக்கெட் வீரர்களுக்குமாகவே இந்திய கிரிக்கெட்சபை குரல் கொடுத்துள்ளது என்று கூறலாம்.






# வறுமை வாட்டும் மட்டு மாவட்டம்

**“சமீபத்திய** அரசாங்கப் புள்ளிவிவரக் கணக்கின்படி மட்டக்களப்பு மாவட்டம் மிகவும் வறுமையான மாவட்டமாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. இருந்தும் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்கள் இந்தப் புள்ளி விபரத்தில் உள்வாங்கப்படாத படியால் எதிர்வரும் காலங்களிலே மட்டக்களப்பு மாவட்டம் மிகவும் வறுமையான மாவட்டம் என்ற கணிப்பு மாற்றமடையக் கூடும். இருந்தாலும் மட்டக்களப்பில் 20.5 வீதமான மக்கள் தற்போது வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றார்கள் என்று சொன்னால் அதுவொரு பாரிய பிரச்சினையாகக் கொள்ளப்பட வேண்டும். ஆறு இலட்சம் சனத்தொகையைக் கொண்ட இந்த மாவட்டத்திலே 20.5 வீதமானோர் வறுமைக்குள் உளலுகிறார்கள் என்பது கவலைக்குரியது.” இவ்வாறு தகவல் வெளியிட்டார் இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியளிப்புச் செயற்திட்டத்தின் தலைவரும் ஆலோசகரு மான திரு ஆர்.சிறிபத்மநாதன் அவர்கள்.

கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல கிராமப் புறங்களுக்கும் விஜயம் செய்து அங்கு மக்கள் சக்திச் சங்கங்களை அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வுகளில் பங்கு கொள்ளும்போது அவர் வறிய மக்கள் மத்தியில் விளக்கமளித்தார்.

2009 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்புக்கான கடன் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலே முதன்முதலாக அறிமுகப்படுத்தப் பட்டது. அப்பொழுதிருந்து இன்றுவரை நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான குடும்பங்களை இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கியிருக்கின்றோம். பல வங்கிகள் மூலம் பல விதமான கடன்களையெல்லாம் வழங்கியிருக்கின்றோம். ஜப்பானிய நிறுவனத்தினுடைய ஆய்வறிக்கையின்படி அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் வெற்றிகரமாக இருக்கிறதென்பதை எமக்குக் கூறியிருந்தார்கள். இருந்தாலும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

முக்கியமாக இது வறுமை ஒழிப்புக்கான கடன் திட்டமாக இருந்தாலும் வருமானம் குறைந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான திட்டம் என்றுதான் கூறுகின்றோம்.

அதேவேளை இந்தத் திட்டத்தின் கீழ் முற்று முழுவதுமாக வறுமையை ஒழித்துவிடலாம் என்று நாங்கள் ஒருபோதும் கூறுவதும் கிடையாது. அத்தகைய அபரிமிதமான நம்பிக்கையை நாங்கள் வளர்ப்பதுமில்லை. இந்தவொரு திட்டத்தின் மூலம் இலங்கையிலுள்ள வறுமையை முற்றுமுழுவதுமாக ஒழித்துவிடலாம் என்று அரசும் நம்பியது கிடையாது. இது அரசின் திட்டத்தில் ஒரு பகுதிதான். இதைத் தவிர அரசின் வறுமை ஒழிப்புக்கான செயற்பாடுகள் பல்வேறு மட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேறு வேறு திட்டங்கள் இருக்கின்றன. இலங்கை அரசு மாத்திரமல்ல உலக நாடுகளில் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயம், 2015ஆம் ஆண்டளவில் வறுமையை சரிபாதியாகக் குறைத்துவிடலாம் என்று 2004ஆம் ஆண்டு 149 நாடுகள் ஐக்கிய நாடுகள் சாசனத்திலே கையெழுத்திட்டன. இலங்கையும் கைச்சாத்திட்ட நாடுகளில் ஒன்று.

இந்த நாட்டிலே வறுமை ஒழிக்கப்படவேண்டும் என்பதற்கான முக்கியமான காரணம் சமாதானம் ஏற்பட வேண்டும். ஒரு நாட்டின் உண்மையான சமாதானம் அந்த நாட்டிலுள்ள வறுமை ஒழிப்பதனைக் கொண்டுதான் அடைய முடியும்.

யுத்தம் முடிவடைந்துவிட்டது. ஆகவே இந்த நாட்டிலே சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்று யாராலுமே கூறிவிடமுடியாது. ஏனென்றால் உங்களுக்குத் தெரியும், பலவிதமான பிரச்சினைகள், பலவிதமான சட்டவிரோதமான செயல்களெல்லாம் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு முக்கியமான காரணத்தை ஆராய்ந்தால், அவற்றுக்கெல்லாம் வறுமைதான் காரணம். இலங்கையைப் பொறுத்தமட்டிலே ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது பொதுவாக ஆசியாவை வறுமையின் இல்லம் என்று அழைப்பார்கள். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கையிலுள்ள வறுமை 8.9 வீதம்தான் காணப்படுகிறது. அண்டைய நாடான இந்தியா வங்காளதேசத்திலே வறுமை



20 சதவீதமும் எதியோப்பியாவிலே சோமாலியா 80 வீதமும் ஆப்கானிஸ்தானிலே 60 வீதமான மக்களும் உலக நாடுகளில் எங்கெல்லாம் பிரச்சினை அதிகமாக இருக் கின்றதோ அங்கெல்லாம் வறுமைதான் தாண்டவமாடுகிறது.

நோர்வே, சுவிற்சர்லாந்து, ஜேர்மன் போன்ற நாடுகளைப் பார்த்தால் அங்கே வறுமையும் இல்லை, ஆதலினால் பிரச்சினைகளும் இல்லை. ஆகையினால்தான் எங்களுடைய ஜனாதிபதி கூட இந்த நாட்டிலே சமாதானம் எழவேண்டுமாக இருந்தால் வறுமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஜப்பானிய உதவித் திட்டத்தின் கீழ் இந்தக் கடன் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இலங்கையில் 14 மாவட்டங்களிலே அதிகம் வறுமையான மாவட்டங்களைத் தெரிவு செய்துதான் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. கொழும்பு உட்பட ஏனைய மாவட்டங்களிலும் இதனை அமுல்படுத்துகின்றோம். கொழும்பில் என்ன வறுமை இருக்கிறது என்று ஆச்சரியப்படலாம். அங்கு 3.9 வீதமானவர்கள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்றார்கள். Urban Poor ஆகவே எல்லா இடங்களிலும் வறுமையான மக்கள் இருக்கின்றார்கள். வடக்கு கிழக்கிலே ஏற்பட்டிருந்த மூன்று தசாப்த கால யுத்தம் காரணமாக கூடுதலான மக்கள் வறுமைக்குள்ளாகி இருக்கின்றார்கள். அவர்கள் வாழ்விடங்களையும் சொத்துக்களையும் தொழில் வாய்ப்புக்களையும் இழந்தபடியால் கூடுதலான வறுமை வாட்டி நிற்கின்றது.

எங்களுடைய திட்டத்தில் இணைக்கப்பட்டவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களும், வறுமையான மக்களும் மாத்திரம்தான். இந்த மக்களை எப்படித் தெரிவு செய்வதென்பது நாங்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினையாகும். நாங்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று யார் வறுமை என்று தெரிவு செய்யக்கூடிய நிலையில் இல்லை. பிரதேச செயலாளர்களிடமும் உதவி அரசாங்க அதிபர்களிடமும் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. இருந்தாலும் வங்கிகள் போய் இவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று தெரிவு காண்பதில் பல பிரச்சினைகள் எழுகின்றன. எனினும் நாம் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கேற்ப இவர்கள்தான் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்கள், இவர்களைத்தான் நீங்கள் தெரிவு செய்ய வேண்டும் இவர்களுக்குத்தான் இந்தத் திட்டத்தின் மூலம் உதவி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தல்கள் வழங்கியிருக்கின்றோம்.

ஆகவே, வருமானம் குறைந்த நீங்கள் தங்களுடைய வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றி ஒரு நடுத்தர வர்க்கமாக சகல விதமான அடிப்படை வசதிகளுடனும் வாழ வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினதும் இந்தத் திட்டத்திற்கு நிதியளிக்கும் ஜப்பானிய அரசினதும் நோக்கமாக இருக்கின்றது.

அனைத்து அடிப்படை வசதிகளுடனும் நீங்கள் வாழ வேண்டும் என்று விரும்பினால் உங்களுடைய வருமானங்களை அதிகரித்தாக வேண்டும். தற்போதுள்ள வருமானம் உங்களுக்குப் போதாது. ஆகவே வருமானம் அதிகரிக்க



ஏ.எச்.ஏ.ஹுசைன்

வேண்டும் என்றால் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் முயற்சிகளில் நீங்கள் ஈடுபடவேண்டும். ஒரு தொழில் முயற்சியல்ல. பலவிதமான தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இந்தத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முக்கியமான தேவையாக இருப்பது நிதி. வங்கியிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அது இலேசாகச் சாத்தியப் படக்கூடிய விடயமல்ல. ஆரம்ப கால கட்டத்தில் எந்த வங்கியுமே உங்களைப் போன்ற வறிய மக்களுக்கு உதவுவதில் தயக்கம் காட்டின.

ஏனென்றால் உங்களைப் போன்ற மக்களுக்கு வங்கியினுடைய செயற்பாடுகளைப் பற்றி எந்தவிதமான அறிவும் இருந்திருக்கவில்லை. பொதுவாகவே மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்று சொன்னால் அரசாங்கத்தினுடைய பணத்தைத்தான் இவர்கள் கொடுக்கின்றார்கள் என்று வறிய மக்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். கடந்த காலங்களிலே இந்த வங்கிகளிலே பெற்ற கடன்களையெல்லாம் மக்கள் திருப்பிச் செலுத்தாததற்குக் காரணம் அரசாங்கத்தினதுடைய பணம். ஆகவே இதனை நாங்கள் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை என்று மக்கள் நம்பினார்கள்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

ஸ்ரீ ராம ஜெயம்



உண்மை சேவைக்கு ஒரு எடுத்துக்காட்டாக எமது நிறுவனங்களின் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட இலக்கங்கள்

- எமது வரையறுக்கப்பட்ட கம்பனிப் பதிவு இலக்கம் P.V 8189
- ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய பதிவு இலக்கம் HA/6/CBO/99
- இந்து பிரீரஸ்ட் பதிவு இலக்கம் HA/4/2/IC/285
- மலையாள மாந்திரிக (CERTIFICATE) பதிவு இலக்கம் W/A 40262
- விளம்பரம் செய்வதற்கான அனுமதி பதிவு இலக்கம் W/A 38324
- அகில இலங்கை சமாதான நீதவான்

எனக்குக் கிடைத்த கௌரவப் பட்டங்கள்: ஜோதிட ஆராய்ச்சி மையம். பங்களாதேஷ் சோதிட தத்துவ ஞானி, தேச பந்து, பேராசிரியர், கலாநிதி.

காதல் கைகூட. கணவன் -மனைவி பிணக்குத் தீர. பிரிந்தவர் ஒன்று சேர. கல்விஞான கவசம் பெற. கடன் தொல்லை தீர. குபேர வாழ்வு பெற. குடிபோதையிலிருந்து விலக. அந்நியோர் உதவிகிட்ட. திடீர் திருமணம் கைகூட. வெளிநாட்டு பிரயாணத் தடை நீங்க. வெளிநாட்டவருக்கு விஷேட வசிய அச்சரங்கள் பெற. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்பு கணிக்க.

இது 46 வருடகாலம் சேவை செய்யும் நிறுவனம்!

MALAYALA MANTHIRIKAM

UCHADA PEEDAM

No.23,Mayfield Road, Kotahena-Colombo 13. Tel:0112342463
நுவரெலியா கிளை-No. 33, Daily Fair Complex 052-2222508

C/985




"ஆமாம், நீங்கள் இந்தக் கப்பலுக்குள் இருப்பீர்கள் என்று நான் யூகித்தேன். நேற்றிரவு உங்களை நான் மேல்தட்டில் பார்க்கவும் செய்தேன். நாம் அங்கு முதல்முறையாகச் சந்திக்கவேண்டாம் என்பதற்காக நானாகவே ஒதுங்கிச் சென்றேன்?" என்ற ராபின்சன் கிளாஸ் ஒன்றை அவரிடம் எடுத்துக்கொடுத்துவிட்டு மற்றொன்றை எடுத்துக்கொண்டான்.

இருவரும் சியர்ஸ் சொன்ன பிறகு ஆளுக்கு ஒரு தடவை உறிஞ்சுவிட்டு விஸ்கி டம்ளரை மேசை மேல் வைத்தனர்.

"முக்கியமான ஒரு விடயம்" அவன் பேசத் தொடங்கினான். "இந்தக் கப்பலில் நடுக்கடலில் நமக்கு இடையே எந்தவிதமான விரோதமும் வேண்டாம். நாம் இருவரும் ஒரே மாதிரிதான். எனக்கு இங்கு பலம் அதிகம். நீங்கள் யாரைக் காப்பாற்றிக் கொண்டுபோக விரும்புகிறீர்களோ, அவரை அதே மாதிரிக் காப்பாற்றிக்கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டியது என் கடமை. இந்தக் கப்பலில் எவரும் எனக்கு விரோதமாகச் செயற்பட முடியாது. கப்டன் உட்பட. ஏனெனில், எல்லோருக்கும் அவரவர் உயிர் மீது பயம் உண்டு" என்ற ராபின்சன் தனது கிளாசைக் காலி செய்தான் ஒரே மூச்சில்!

"அப்படியா!" புஷ்பராஜ் கேட்டார்.

"அதுதான் உண்மை. டிக்சன் இலட்சிய இடத்தை அடைந்ததும் நான் உரிய ஊதியம பெற்றுக்கொண்டு பத்திரமாகி விடுவேன். அதுவரை இதையெல்லாம் இயக்கி நடத்துவது நம் கண்களுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தி. எனவே, நாம் பரஸ்பரம் ஒருவரையொருவர் கொன்று கொள்வதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை!"

**இருவரும்** சியர்ஸ் சொன்ன பிறகு ஆளுக்கு ஒரு தடவை உறிஞ்சிவிட்டு விஸ்கி டம்ளரை மேசை மேல் வைத்தனர்.

அதைத் தொடர்ந்து கிளாஸ்கள், முந்திரிப் பருப்பு, ஐஸ், சோடா என்று எல்லாமே வரிசையாக அணிவகுத்தன மேஜை மீது.

"வறுத்த முந்திரிப் பருப்பு உங்களுக்கு மிகவும் பிடிக்கும என்று எனக்குத் தெரியும்."

"உண்மைதான்... அது எப்படி உங்களுக்குத் தெரியும்!" புஷ்பராஜ் வியப்புடன் கேட்டார்.

அவன் அந்தக் கேள்வியையே கவனிக்காதவன் போல் கிளாஸ்களில் விஸ்கியைப் பகர்ந்தான்.

"எனக்கு உங்களை நன்றாகத் தெரியும். காரணம் நாம் இருவரும் ஒரே மாதிரியான இயல்பு கொண்டவர்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எதிரெதிர் துருவங்களாகச் செயற்படுகிறோம். எனவே, நாம் பரஸ்பரம் தெரிந்து கொள்ளாமல் இருந்தால் அது முட்டாள்தனம்." ராபின்சன் சிரித்தபடியே பேசினான்.

"நீங்கள் என்னை அடையாளம் தெரிந்து கொண்டீர்கள்!"

புஷ்பராஜ் அவனை ஊன்றிப் பார்த்தார். உண்மைதான். அவன் சொன்னதில் எந்தவிதமான தவறும் இல்லை. மட்டுமன்றி, அவனுக்குக் கொஞ்சம் கூட பயமே இல்லை.

"அதாவது நீங்கள் என்னை மற்றவர்களிடம் காட்டிக்கொடுக்கமாட்டேன் என்று சொல்றீர்கள்... இல்லையா?" புஷ்பராஜ் கேட்டார்.

"இந்தச் செயலை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவன் நான். அதன் முழுப்பலனும் எனக்குத்தான். எனவே தற்சமயம் நான் இதைப் பற்றித் தீர்மானித்தால் போதும்." சொல்லிவிட்டு சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துச் சிரித்தான் ராபின்சன்.

புஷ்பராஜுக்கு ஒரு விடயம் தெளிவாக விளங்கியது. தான் இதுவரை சந்தேகித்த, கண்ணுக்குத் தெரியாத சக்தி இந்த ராபின்சன்தான். கங்காபிரசாத் இந்த ஒரு தனி மனிதனிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பது புஷ்பராஜுக்கு வியப்பு அளிக்கவே செய்தது.

"மிஸடர் புஷ்பராஜ், உங்களை நான் உங்களின் உண்மையான பெயரிலேயே இப்போது அழைக்க விரும்புகிறேன். நமக்குள் இங்கு எந்த ஒரு விரோதமும் தேவையில்லை. நீங்கள் எனக்கு எந்தவிதமான தொல்லையும் தராமல் இருந்தால் நானே உங்களுக்கு, என்னுடைய ஊதியத்தில் இருந்து ஒரு பெரும் தொகையைத் தருகிறேன். அந்த விடயத்தில் நான் ஒரு போதும் கஞ்சன் இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்....ம்... சாப்பிடுங்கள்!"

ராபின்சன் மீண்டும் கிளாஸை நிறைக்க முற்பட்ட போது புஷ்பராஜ் தடுத்தார்.

"இன்னும் ஒரு ரவுண்டு?" ராபின்சன் கேட்கவும் செய்தான்.

"எனக்கு இதில் ஆர்வம் அதிகமில்லை" புஷ்பராஜ் கூறினார்.

ராபின்சன் திருப்தி ஏற்படும் அளவுக்குக் குடித்தான்.

இறுதியில் பரஸ்பரம் 'குட்நைட்' சொல்லிப் பிரிந்தனர்.

மறுநாள் மதிய நேரத்தில் கப்பல் அசைவற்று நின்றிருப்பதாக புஷ்பராஜ் உணர்ந்தார். அவர் மேல் தளத்துக்கு விரைந்தார். உண்மைதான்... கப்பல் சுத்தமாக நின்றுவிட்டிருந்தது.

"என்ன நடந்தது?" அருகில் நின்றிருந்த செக்யூரிட்டியிடம் கேட்டார்.

"தெரியவில்லை சேர்... நேற்றிரவு முதல் கப்பலின் வேகம் குறையத் தொடங்கி, இப்போது சுத்தமாக நின்றுவிட்டது." அவன் பதிலளித்தான்.

கப்பல் எந்தத் திசையில் பயணம் செய்ய வேண்டும் என்கிற திட்டமான கட்டளை கிடைக்கவில்லை என்று புஷ்பராஜுக்கு விளங்கியது.

கப்டனிடம் பேசிப்பார்க்கலாம் என்ற நோக்கத்தில், அவரது கேபின் பக்கமாகச் சென்றார்.

அவர் புஷ்பராஜை வரவேற்றார். ராபின்சன், கப்டனிடம் தன்னைப்பற்றி எதுவும் எச்சரிக்கவில்லை என்று விளங்கியது.

"கப்பல் ஏன் நின்றுவிட்டது கப்டன்?"

"நேற்றிரவு கிடைத்த கட்டளையை ஓட்டித்தான்?"

"அப்படியானால் மறு உத்தரவு வரும்வரை நாம் இப்படியே கிடக்க வேண்டியதுதானா?"

"ஆமாம்... ஆனால், இரண்டுமாத காலத்துக்குத் தேவையான உணவுப் பொருள் நம் கைவசம் உள்ளது.".

"அப்படியா!"

அப்போது கப்டனின் அறையில் இருந்த டிரான்ஸ் மீற்றர் பீப்...பீப் என்று ஒலித்தது.

புஷ்பராஜ் திரும்பிப் பார்த்தார். சிவப்பு நிற விளக்கு ஒன்று மின்னி மறைந்து மின்னியது.

கப்டன் அதை நெருங்கினார்.

கப்டன், புஷ்பராஜை ஒருமுறை பார்த்தார்.

"நான் வெளியேறட்டுமா?" என்று சைகையால் கேட்டார் புஷ்பராஜ்.

"வேண்டாம்... உட்காருங்கள்!" என்று பதிலுக்கு சைகை செய்தார் கப்டன்.

புஷ்பராஜ் இருக்கை ஒன்றில் அமர்ந்தார்.

"005Z...005Z" கப்டன், ரகசிய எண்ணை இரண்டு முறை கூறினார்.

அப்போது எதிர்முனையிலிருந்து

(தொடரும்...)

# இயற்கை இடரும் இனி வரப்போகும் மார்கழியும்!

- வாகரை வாணி -

**உலக** நாடுகளிடையே சமூகம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளில் ஒன்று இயற்கை இடராகும்.

இத்தகைய அபாயகரமான இடர்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எல்லா நாடுகளும் இயற்கை அழிவினால் சிக்குண்டு மிகவும் மோசமான் நிலையில் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டுள்ளன.

வெள்ளப் பெருக்கு, வறட்சி, மண்சரிவு, சூறாவளி, சுனாமி என்பன எமது நாட்டில் வாழும் மக்களுக்கு ஒரு புதிய அனுபவம் அல்ல. ஆனாலும், இவற்றை எதிர் கொள்வதற்கான சரியான திட்டமிடலுடன் கூடிய முகாமைத்துவம் செயற்படவில்லை என்பதுதான் அதிருப்திகளாக நிலவுகிறது.

2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற சுனாமியின் பின்னர் இலங்கையில் இடர் முகாமைத்துவத்தின் அவசியம் உணரப்பட்டு பாராளுமன்றத்தில் 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பேரழிவுச் சட்டம் / இடர் முகாமைத்துவ சட்டம் உருவாக்கப்பட்டு அதன் பின்னர் தேசிய இடர் முகாமைத்துவ பேரவை ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படுகின்ற இடர் அபாயங்களைக் கண்டறிந்து சமூகத்திலும், தேசத்திலும் பாதுகாப்பு பயன்பாடு ஒன்றை உருவாக்கி பாரிய அளவில் சமூகத்தில் நின்று நிலைக்கக் கூடிய அபிவிருத்தியை மேற்கொள்ளல் வேண்டும் என்பதே இதன் நோக்காகும். இருப்பினும் உள்ளூர், பிரதேச, மாவவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் உரிய பதில் இயக்க முறைமைச் செயற்பாட்டுத் திட்டங்கள் இல்லாமையால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முகாமைத்துவ முன்னேற்பாடு, அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. எவ்வாறெனில், குறிப்பாக நிவாரணம், புனர்நிர்மாணம், இடர் தவிர்ப்பு போன்றவற்றை சரிவர முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போய்விட்டது. இதன் அடிப்படையில் மேற்கூறப்பட்ட குறைபாடுகளை எதிர்காலத்தில் நிவர்த்தி செய்து இடர்களிலிருந்து பாதுகாப்புப் பெற வேண்டும் என்ற நோக்குடன் அரசாங்கம் சில முகாமைத்துவ வேலைத் திட்டங்களை முன் வைத்துள்ளது. அவற்றுள் முக்கியமானவை,

தகவல் முகாமைத்துவம், நீண்டகால இடர்க் குறைப்பு, முன் கூட்டியே எதிர்வு கூறல், தகவல் பரப்புதல், இடர் இடம்பெறுகின்றபோது அதிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கை, அவசர முகாமைத்துவம், இடருக்குப் பின்னரான அவசர உதவி என்பனவற்றை உள்ளூர், பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் நடைமுறைப் படுத்துவதற்காக பல்வேறுபட்ட இடர் முகாமைத்துவ, முன் ஆயத்த வேலைத்திட்டங்களை அரசாங்கம் மேற் கொண்டு வருகின்றது.

இடர் முகாமைத்துவ முன் ஆயத்த வேலைத்திட்டங்கள் தற்போது கிராம மட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் கிராமத்தில் உள்ள மக்களுக்கு இடர்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்துதல் வேண்டும், கிராம மக்களால் தங்களுடைய கிராமத்தின் வரை படம் வரையப்படுதல் வேண்டும், குறிப்பிட்ட சில இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் இடராயத்தங்கள் சம்பந்தமாக ஆறு வகையான செயற்பாடுகளைக் கொண்டு இயங்குவதற்கு 15 -25 அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.

அபாய முன் அறிவிப்புக்குழு, தேடுதல் காப்பாற்றுதல், அப்புறப்படுத்துதலுக்கான குழு, முகாம் அமைத்தல் மற்றும் நிவாரண முகாமைத்துவக் குழு, சுகாதாரம் மற்றும் முதலுதவிக் குழு, நீர் மற்றும் உணவுக்கான குழு, மேற்பார்வை மற்றும் ரோந்து நடவடிக்கைக் குழு போன்ற ஆறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி கிராம மட்டத்தில் சிறந்த இடர் முகாமைத்துவத்தை உருவாக்குதல் என்பவை இவற்றில் உள்ளடங்கும்.இடம் பெயர்ந்து செல்லும் போது கவனிக்க வேண்டியவை

ஏற்கனவே பாதுகாப்பான இடமாக தெரிவு செய்யப்பட்ட இடத்தை நோக்கிச் செல்லவேண்டும், வீட்டின் மின் இணைப்பைத் துண்டிக்கவேண்டும், சான்றிதழ்கள், காணி உறுதிகள், வங்கிக்கணக்குப் புத்தகம், அடையாள அட்டை, கடவுச்சீட்டு, தங்க ஆபரணங்கள், மருந்துப் பொருட்கள், குழந்தைகள், கர்ப்பினித்தாய்மார், வயோதிபர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றை கொண்டு செல்லுதலும் வேண்டும்.

இடம்பெயர்ந்து எங்காவது கூட்டமாகத் தங்கியிருக்க நேர்ந்தால் தொற்று நோய்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. எனவே அதற்கு முன் ஏற்பாடாக கொதித்தாறிய நீரைப் பருகவும் வேண்டும்.

நீரில் நனைந்த உணவுகளை உட் கொள்வதை தவிர்த்தல் நல்லது.

அடித்துச் செல்லும் நீருக்கருகில் நடந்தோ, வாகனத்திலே செல்லக்கூடாது.

கீழே விழுந்திருக்கும் மின் கம்பத்திற்கு அருகில் செல்லவும் கூடாது.

இடம்பெயர்ந்து செல்லும் போது கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்கள். நாளாந்த உபயேகத்திற்கான மருந்துப் பொருட்கள்.

வயது முதிர்ந்தவர்கள், வலது குறைந்தவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள். (ஊன்று கோல்) கர்ப்பிணித்தாய், சிறு குழந்தைகளுக்குத் தேவையான பொருட்கள் (பால் மா, மருந்து)


பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ், உறுதி, அடையாள அட்டை, கடவுச்சீட்டு போன்ற முக்கிய ஆவணங்கள் ஆபரணம் ஏனைய பெறுமதியான பொருட்கள், பணம், அத்தியவசிய ஆடை, அணிகலங்கள். அநேகமான இடர்களில் பலரின் உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. உடைமை அழிவுகள் ஏற்படுகின்றன.

ஆகவே, நாங்கள் எப்போதும் இடர்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாகவும், பக்கத்திலுள்ள உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் உதவி செய்யக் கூடிய மனநிலையினை உடையவராகவும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வதும் சிறந்த ஒரு விடயமாகும். இதனால் பாதிப்புக்களை குறைந்தளவில் எதிர்கொள்ளலாம்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# மனதுக்கு நிம்மதி

# உங்களுடைய இலட்சியப் பாதை எது?




சகலகலா வல்லவனாக வேண்டும் எனும் ஆர்வம் இன்று பலரிடம் காணப்படுகிறது. ஒரு விஷயத்தைக் கற்க ஆரம்பிப்பார்கள். நண்பனிடம் இன்னொரு திறமை இருக்கும், அதை நோக்கி மனம் தாவும். அதைக் கற்க ஆரம்பிக்கும்போது இன்னொன்றில் மனம் லயிக்கும். அதன்பின் வேறொன்றுக்குத் தாவும். கடைசியில் நமது 'ஸ்பெஷாலிட்டி' எது என்பது பிரித்தறிய முடியாக் கூட்டாஞ்சோறாகிப் போகும்.

கொஞ்சம் ஆற அமர உட்கார்ந்து உங்களுடைய முதலாவது திறமை எதில் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். சட்டென ஒரு விஷயம் உங்களுக்குத் தோன்றினால், உண்மையிலேயே உங்களுடைய திறமையை நீங்கள் அறிந்து வைத் திருக்கிறீர்கள் என்று அர்த்தம். அந்தத் திறமை எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஒருவேளை நீங்கள் யோசிக்கும் போது ஒரு விஷயமும் உங்களுக்குப் பிடிபடாமல் போனால் விழித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு இருக்கும் திறமைகளை எல்லாம் பட்டியலிட்டு எதில் நீங்கள் வல்லவர், எதில் நீங்கள் சுமார், எது உங்களுக்குப் பிடிக்கவே பிடிக்காத விஷயம் என வரிசைப்படுத்துங்கள். அந்தப் பட்டிய லைப் பார்க்கும்போது இதுதான் என்னோட தனித்திறமை என உங்க ளுக்கே ஒரு விஷயம் நிச்சயம் பிடி- படும்.

உங்களுடைய உண்மையாக விருப்பம் இருக்கும் விஷயத்தில் உங்க ளுக்கு இயல்பாகவே திறமையும் இருக்கும். அந்த இடத்தில் நீங்கள் மூச்சடக்கி, முக்குளித்து முத்தெடுக்க வேண்டும். அது நிச்சயம் உங்களை வெற்றிகளின் உச்சியில் கொண்டு சேர்க்கும்.

நீங்கள் தேர்வு செய்யும் விஷயம் குறித்த தகவல்களையும், விஷயங்களையும் தேடித் தேடிப் படிப்பது அடுத்த கட்டம். வெறு- மனே வாசிப்பது மட்டுமல்லாமல் அது குறித்த சிந்தனைகளிலும் அதிகம் ஈடுபடுங்கள். குறிப்பாக அதே துறையில் விருப்பமுடைய நண்பர்களைக் கொண்டிருப்பது அடுத்த தேவை. அந்தத் துறையில் திறமை மிக்கவர்கள் நண்பர்களாகக் கிடைத்தால் நல்லது. யாராவது ஒரு நல்ல நபர் வழிகாட்டியாய்க் கிடைத்தால் ரொம்ப ரொம்ப நல்லது. நல்ல உற்சாகமூட்டக்கூடிய வழிகாட்டி, இலட்சியப் பாதையில் உங்களைச் சுமந்து செல்லும் ஒரு குதிரையைப் போன்றவர். "உங்களுக்குப் பிடித்த மான விஷயமே வேலையாகிப் போ- னால் வாழ்க்கையில் ஒருநாள் கூட வேலை செய்யும் உணர்வே வராது" என்கிறார் கன்பூஷியஸ்.

உங்களுக்குப் பிரியமான வேலையை கண்டுபிடிப்பது ஒன் றும் கம்ப சூத்திரமில்லை. எந்த வேலை உங்களை மெய்மறக்க வைக்கிறதோ, எந்த வேலை செய்யும் போது சோர்வே ஏற்படவில்லையோ, எந்த வேலை உங்களை உற்சாகம் கொள்ள வைக்கிறதோ அதுவே உங்களுடைய கனவு வேலையாய் இருக்கலாம். கனவு வேலைக்குள் காலெடுத்து வைத்தபின் உடனடி யாகப் பயன் கிடைக்கவில்லையே எனும் கவலையே இருக்கக் கூடாது. விதைகள் உடனடியாக மரமாகி விடுவதில்லை. முளைவிட்டதும் கனிகளைத் தேடுவதிலும் நியாயமில்லை.

எதை அபரிமிதமாக நேசிக்கிறோமோ அது நமது உணர்வுகளில் பின்னிப் பிணைந்து நம்மை மாபெரும் வெற்றியாளராய் கொண்டு சேர்க்கும். வின்செண்ட் வான்கா எல்லாவற்றையும் விட அதிகமாய் ஓவியத்தை நேசித்தார். ஓவியம் வரைய அமர்ந்தால் சாப்பிடவே மறந்து போய் விடுவாராம். தனது தூரிகையிலிருந்து விழும் ஒவ்வொரு துளியையும் நேசித்ததால்தான் இன்று ஓவிய உலகம் அவரை கொண்டாடுகிறது.

உங்களுக்குப் பிரியமான வேலை- யை கண்டுபிடிப்பது ஒன்றும் கம்ப சூத்திரமில்லை. எந்த வேலை உங்களை மெய்மறக்க வைக்கிறதோ, எந்த வேலை செய்யும் போது சோர்வே ஏற்படவில்லையோ, எந்த வேலை உங்களை உற்சாகம் கொள்ள வைக்கிறதோ அதுவே உங்களுடைய கனவு வேலையாய் இருக்கலாம்.

கனவு வேலைக்குள் காலெடுத்து வைத்தபின் உடனடியாகப் பயன் கிடைக்கவில்லையே எனும் கவலையே இருக்கக் கூடாது. விதைகள் உடன- டியாக மரமாகி விடுவதில்லை. முளைவிட்டதும் கனி களைத் தேடுவதி லும் நியாயமில்லை. ஒவ்வொரு வளர்ச்சியையும் கவ- னமுடன் கவனித்து, முன்னேறிச் செல்கிறோம் எனும் நிலையை மட்டும் உறுதிப்படுத்திக் கொண்டாலே போதுமானது.

"எதில் இருக்கிறாயோ, அதில் சிறப்பானவனாய் இரு" என்கிறார் ஆபி ரகாம் லிங்கன். பிரபல எழுத்தாளர் மால்கெம் கிளாட்வெல் சொல்லும் விஷயம் கவனிக்கத்தக்கது. ஒரு மனிதன் ஒரு துறையில் வல்லவனாக விளங்க நிறையப் பயிற்சி தேவைப்படுகிறது. 10 ஆயிரம் மணி நேரம் ஒரு மனிதன் ஒரு செயலுக்காக அர்ப்பணிக்கும் போது அவன் அதில் உச்சத்தைத் தொட்டு விடுகிறான் என்கிறார் அவர்.

அதென்ன 10 ஆயிரம் மணி நேரம்? வாரம் 20 மணி நேரம் வீதம் பத்து ஆண்டுகள். அதுதான் அவரது கணக்கு. ஒரு கால்வாசி உயரத்தை எட்டிப் பிடிக்க இதில் கால்வாசி நேரம் ஆகும், அதாவது 2 ஆயிரத்து 500 மணி நேரம். உச்சத்தை எட்டிப் பிடிப்பதொன்றும் எளிய வேலையல்ல, அதற்கு ஏகப்பட்ட உழைப்பும், அர்ப்பணிப்பும் தேவை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

ஒரு துறையில் நிபுணர் ஆகிவிட்டால் அந்தத் துறையில் உங்களுடைய இருப்பை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக பளீரடிக்கும் வைரமானாலும் அதைப் பத்தாயத்தில் போட்டு வைத்தால் யாருக்குமே தெரியா- மல் போய்விடும். எனவே இருக்கும் திற மையை வெளிப்படுத்தும் வாய்ப்புகளை வரவேற்கவேண்டும்.

ஒரு விஷயத்தில் கில்லாடியானதும் உங்களுடைய உழைப்பு அத்துடன் முடிந்துபோய் விடுவதில்லை. அந்த இடத்தைத் தக்க வைக்கத் உங்கள் கவனத்தை அதன் மீது தொடர்ந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

ஒருவர் பல விஷயங்களில் கில்லாடியாய் இருக்கலாம் என பலர் சொல்வதுண்டு. உண்மையில் அதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு. ஒருவர் பல விஷயங்களில் திறமைசாலியாய் இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு விஷயத்தை ஆழமாகக் கற்கும்போதுதான் அவர் சாதனையாளராய் மாறுகி- றார். சாதாரண வெற்றிக்கும், சாதனை வெற்றிக்கும் இடையேயான வேறுபாடு அங்கே உண்டு.

குவிலென்ஸ் ஒரு புள்ளியில் தனது சக்தி அனைத்தையும் குவிக்கும்போது எரிக்கும் தன்மையைப் பெறுகிறது. அது போலத்தான் இதுவும். நமது சக்தியெல்லாம் ஒரே இலட்சியத்தில் குவிக்கப்படும் போது அதன் தாக்கம் வீரியமானதாக இருக்கும். பரந்துபட்ட சிந்தனை பல விஷயங்கள் மீது பரிச்சயத்தைத் தரும், ஆனால் ஒன்றிலும் உங்களை உச்சத்தில் வைக்காது.

நீங்கள் ஏதோ ஒரு விடயத்தில் அசைக்க முடியாத நபராய் இருப்பதுதான் உங்களை அலுவலகத்திலும் வெற்றியாளராக்கும். ●

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.437 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

கு.குலமாலிகா, வட்டுக்கிழக்கு, சித்தன்கேணி, யாழ்ப்பாணம்.

| பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள். |
|---|
| 01. ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, மகாபுத்கமுவ,கொட்டிகாவத்தை. |
| 02. கு.சண்முகரத்தினம், பாரதிலேன், சங்கானை. |
| 03. மு.நக்கீரன், வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| 04. கே.அரசேஸ்வரன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். |
| 05 M.S.ஜரீன், 5 ஆம் குறுக்குத்தெரு, ரத்மலயாய. |
| 06 யோ.பாஸ்கரன், தொட்டிலடி, சங்கானை. |
| 07. எஸ்.மல்லிகா, லெவலன் டிவிசன், புபுரெஸ்ஸ. |
| 08. அ.சந்தியாகோ, தென்னக்கும்புர, கண்டி. |
| 09. கா.பொ.பாலகிருஸ்ணன், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| 10. கி.சியாமளா, சின்னக்கடை, மன்னார். |

## குறுக்கெழுத்துப் போட்டி - 439

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | ■ | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | ■ | 16 | ■ | ■ |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| ■ | ■ | 27 | ■ | 29 | ■ |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

### இடமிருந்து வலம்

01.டாவின்சி என்றதும் நினைவிற்கு வரும் ஓவியம்.

10.இசையில் உள்ளடங்குவது.

13.மன்மதனின் மனைவி.

21.ஒரு பெண்ணை இவ்வாறும் அழைக்கலாம்.

31.பழமையின் எதிர்ப்பதம். (திரும்பியுள்ளது)

35.பலரைக் குறிப்பது. (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01.ஓர் அணிகலன்.

04.போதையினை உருவாக்குவது.

06.மூலமந்திரம்.

21.காதலின் ஜீவநாடி.

23.தாவர வகைகளில் ஒன்று.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 17.10.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-439
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 437- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 யா | 2 ழ் | ■ | 4 பா | 5 ன | 6 ம் |
| ■ | 8 அ | ■ | 10 தை | 11 சீ | ■ |
| 13 ங் | 14 க | 15 கை | ■ | 17 த | 18 லை |
| 19 ச | 20 வு | 21 தி | ■ | 23 ம் | ■ |
| 25 கு | ■ | ■ | 28 கை | ■ | 30 ரி |
| ■ | 32 வு | 33 ர | 34 கு | 35 ல் | 36 ந |



தங்கச் சுரங்கம்

பூமியின் அடியில் புதையுண்டு கிடக் கும் தங்கம் போன்ற மதிப்புமிக்க உலோ கங்களின் படிவுகள், பூமியைத் தாக்கிய எரிகற்களின் பரிசு என்கிறார்கள், பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.

இதுதொடர்பாக,

# பூமியின் பொக்கிஷங்கள்!

'நேச்சர்' இதழில் அவர்கள் வெளியிட்டுள்ள கட்டுரையில், பூமி தோன்றிய 20 கோடி ஆண்டுகள் கழித்து, விண்ணிலிருந்து வந்து பூமியைத் தாக்கிய எரிகற்களாலேயே மதிப்புமிக்க உலோகப் படிவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துள்ளனர். பூமி உருவானபோது, உருகிய இரும்பு, பூமியின் மத்தியில் திரண்டு அதன் அடிப்படையை உருவாக்கியது. அப்போது அது, பெரும- ளவிலான தங்கம், பிளாட்டினத்தையும் எடுத்துச் சென்றது. உண்மையில், பூமி முழுவதும் நான்கு மீற்றர் கனமுள்ள அடுக்கால் மூடும் அளவிலான தங்கம், பூமியின் மத்தியப் பகுதியில் உள்ளது. எரிகல் பூமியின் 'சிலிக்கேட் மேண்டிலிலும்' முன்பு கருதப்பட்டதைவிட ஆயிரக்கணக்கான மடங்கு அதிகமான தங்க, பிளாட்டினப் படிவுகள் இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆகவே, தங்கம், பிளாட்டினம் போன்றவை முற்றிலுமாக மத்தியப் பகுதிக்குச் சென்றிருந்தால், மேல் அடுக்குகளில் இந்த அளவு அவை காணப்படாது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

மேலடுக்கில் இவ்வளவு அதிகமான தங்க, பிளாட்டினப் படிவுகள் காணப்படுவதற்கு, பூமியில் பொழிந்த விண் எரிகல் மழைதான் காரணம். அந்த விலை மதிப்புமிக்க உலோகப் படிவு- கள் அனைத்தும் பூமியின் மையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு விடவில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.



> உங்களுக்குப் பிரியமான வேலையை கண்டுபிடிப்பது ஒன் றும் கம்ப சூத்திரமில்லை. எந்த வேலை உங்களை மெய்மறக்க வைக்கிறதோ, எந்த வேலை செய்யும் போது சோர்வே ஏற்படவில்லையோ, எந்த வேலை உங்களை உற்சாகம் கொள்ள வைக்கிறதோ அதுவே உங்களுடைய கனவு வேலையாய் இருக்கலாம். கனவு வேலைக்குள் காலெடுத்து வைத்தபின் உடனடி யாகப் பயன் கிடைக்கவில்லையே எனும் கவலையே இருக்கக் கூடாது. விதைகள் உடனடியாக மரமாகி விடுவதில்லை. முளைவிட்டதும் கனிகளைத் தேடுவதிலும் நியாயமில்லை.




"பாரும்மா சமயம் கிடையாது. எல்லா மதமும் சம்மதம்தான். உனக்கு ப்ரேயர்ல சொல்லப்பட்ட விடயம் என்ன? அது கீதை, மதம் இல்லை. இங்கே மனுஷத்தனம் தான் உண்டு. உன் வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய அதிர்ஷ்டம் இங்க வர சம்மதிச்சது. உன் எதிர்காலம் பொன்மயமா இருக்கப்போறதுங்கறதுக்கு அறிகுறி இது."

"இங்க பிள்ளை பெத்ததும் என்ன செய்வா?"

"எல்லாம் அவங்களே பாத்துப்பாங்க. ஏன் கவலைப்படறே?

உன் கடமை என்ன...? நல்லா சாப்பிட வேண்டியது, படிக்க வேண்டியது. தூங்க வேண்டியது. உரிய காலத்தில் வலியெடுத்து பிள்ளைபெற வேண்டியது!"

"அதுக்கப்புறம்?"

"ரெண்டு, மூணு ப்ளான் இவங்க வெச்சிருக்காங்க... அதையெல்லாம் விபரமா சொல்வாங்க" என்றார். இந்தக் கேள்விக்குப் பதில் விபரமா சொல்வாங்க." என்றார். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதில் அவருக்கு சற்றுத் தயக்கம் இருப்பதாகப்பட்டது.

கிருத்திகா சாரி அவளை ஒரு வாரம் கழித்து வந்து பார்த்தபோது, 'மை கோட்! ஜொலிக்கிறேம்மா அகல்யா...நல்லா ஊட்டம்போல."

"சும்மா சாப்பிட்டுட்டு தூங்கறேன் மேடம்!"

"இந்தா... போன மூன்று வருசத்துக்குக் கேள்வித்தாள்கள் எல்லாம் இருக்கு. இதுக்கெல்லாம் என்ன வரும் என்று சரியாப் பார்த்திடு. இதிலிருந்துதான் வரும்."

அகல்யா அவற்றைப் புரட்டிக்கொண்டிருக்கும்போது,

"அகல்யா, உங்கம்மாவுக்கு சேதி சொல்லட்டுமா? அவ வந்தா தெம்பா இருக்கு" என்றார் கிருத்திகா.

சட்டென்று, "வேண்டாம் வேண்டாம்." என்றாள். "மேடம், உங்கக்கிட்ட ஒண்டு கேக்கணும். இந்த இடத்தைப் பத்தி உங்களுக்கு யார் சொன்னது?"

கிருத்திகாவின் முகம் சட்டென்று

**தண்டையார் பேட்டை வைத்தியசாலையில் ஸ்ரீதர் எயிட்ஸ் நோயாளி என பரிசோதிக்கப்பட்டான். ஸ்ரீதர் தான் வெகு விரைவாகச் செத்துப்போயிடுவேன் என்று பயந்தான். ப்ரேலைப் இல்லத்தில் புது உலகத்தில் இருப்பது போன்ற உணர்வை அனுபவித்தாள். அங்கு அகல்யாவுக்குத் தேவையான அனைத்தும் அவள் கேட்காமலே அவளை வந்து சேர்ந்தன. அவள் இப்போது மூன்று மாதக் குழந்தையைச் சுமக்கும் தாயாகி-னாள்.**

மாறியது.

" ஏன் கேட்கறே?"

"இல்லை முதல்லயிருந்தே உங்களுக்கு நான் அபோஷன் பண்ணிக்கிறதில் இஷ்டமில்லைதானே?"

"சேச்சே.. என்ன அப்படி கேக்கிறே.. இந்த இடத்தைப் பத்தி ஒரு விசிட்டிங் புரொப்பசர் சொன்னார். நல்ல தைரியம் கொடுப்பாங்க என்று. அதனாலதான் நான் அனுப்பினேன். சுபாசினிக்கும் இதைப் பற்றித் தெரியும். பாரு, எல்லாமே உன் இஷ்டம்தான். உன்னை இங்க யாரும் பிள்ளையைப் பெற்றெடுக்கத்தான் வேணும் என்று வற்புறுத்துறாங்களா?"

"இல்லை. இருந்தாலும் கொஞ்சம் பயமா இருக்கு."

"அதெல்லாம் சரி பண்ணிடுவாங்க!"

'எப்படிச் சொல்றீங்க?"

"இதுக்கெல்லாம் பணம் எவ்வளவு கொடுக்கணும் என்று விசாரிக்கிறீங்களா..."

"எல்லாமே இலவசம்தான்..."

"அதான் நம்ப முடியலை.!"

"இவங்களுக்கு எக்கச்சக்கப் பணம் இருக்கு. வெளிநாட்டில இருந்து நிறைய நன்கொடை வருதாம்.."

"அதுக்கு நான் என்ன செய்ய முடியும் இவங்களுக்கு..."

"அவங்களே சொல்வாங்க..." என்றாள் கிருத்திகா.

அகல்யாவுக்கு அந்த உயிர் வளர்வது முதலில் தெரியவில்லை. ப்ரோ லைஃபில் படம் போட்டோவெல்லாம் காட்டினார்கள். வீடியோ காட்டினார்கள். முட்டைக்குள் ஸ்பெர்ம் நுழைந்து ஒரு ஸ்பெர்ம் நுழைந்து ஒரு செல்லாகி, பாதிபாதியாகப் பிரிந்து, இரண்டு, நாலு, எட்டு, பதினாறு என்று பெருகிக்கொண்டு, ஒரு மாசத்துக்குள் கால் இஞ்சிக்கு வந்து, அதிலேயே துளியூண்டு தலை, வேலை செய்யும் ஒரு மினியேச்சர் இதயம், வயிறு, மூளை,... ஏன் ஒரு தேவையில்லாத வால் கூட... அடிக்கடி தொட்டுப் பார்த்துக்கொண்டாள். 'இருக்கிறாயா சௌக்கியமா'என்று விசாரித்தாள். மூன்றாவது மாதத்தில் ஜீரண உறுப்புக்கள் எலும்பின் ஆதாரங்கள் ஏற்பட்டுவிட்டன என்று சொன்னார்கள். ஒரு அடி உயரம், ஒரு பவுண்டு.

அவளுக்கு இயற்கையாகப் பிரசவிப்பதைப் பற்றிப் பல பாடங்கள் கொடுக்கப்பட்டன. நீச்சல் உட்பட பல தேகப் பயிற்சிகள் கொடுத்தார்கள். இடையே வேளைக்கு வேளை சாப்பாடு, வேளைக்கு வேளை உடை மாற்றம், குளிப்பாட்டல், டால்கம் பவுடர் போட்டு மணக்க மணக்க அவளையே குழந்தை போல வைத்துக்கொண்டிருக்க, சாயங்காலங்களில் வெளிச்சத்தின் அருகில் அளுக்கு பாடப்புத்தகங்கள் கொண்டு வந்து உறுத்தாமல் எக்கனமிக்ஸ், ஸோசியலோஜி எல்லாம் வகுப்பு எடுத்தார்கள். ஐ.ஏ.எஸ். பிரிலிமினரி பற்றி அறிமுக வகுப்பு ஒன்று நடந்தது. என்ன என்ன புத்தகங்கள் சேகரித்து என்ன என்ன படிக்க வேண்டும், ஷேக்ஸ்பியரின் ஜுலியஸ் சீஸர், நான் -டிடெய்ல், அந்த கதையில் உள்ள சோகத்தைக் குறைத்துச் சொன்னார்கள், உணர்ச்சிவசப்படக் கூடாது என்று!

ப்ரமோத், சீனு இருவரையும் சந்தர்ப்ப சாட்சியங்கள் சரியில்லை என்று மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விடுதலை பண்ணிவிட்டாலும அவர்களைக் கஸ்டடியில் வைத்து நிறைய அடித்திருந்தார்கள். இருவருக்கும் ரகுவின் மேல் மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது. "நம்மை மாட்டிவிட்டுட்டு இவன் தப்பிச்சுட்டான் பாத்தியா ப்ரமோம்? என்னடா நண்பன் இவன்? இவனுக்காக என்னவெல்லாம் செய்திருக்கேன் சொன்னா உனக்கு மலைப்பா இருக்கும்' என்று சீனு அழுதான்.

"உலகமே இப்படித்தாண்டா. ரகுவை நான் பழி வாங்கலே, என் பேர் ப்ரமோத் இல்லை. முதல்ல அகல்யாவை பார்க்கணும்."

"அவ என்ன ஆனா?"

"விசாரிச்சதில வகுப்புக்கே வரேல்லை என்று தெரிந்தது. கிருத்திகா சாரி மேடம் தனக்குத் தெரியாது என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கு.

மைதானத்தில் ரகு தனியாக விளையாடிக்கொண்டிருந்தான். மற்ற ஆட்டக்காரர்கள் வரக் காத்திருந்தான்.

"ஹாய் ஃபரெண்ட்ஸ், எப்ப ஜெயில்லயிருந்து வந்தீங்க?"

'கேப்படா..."

"ப்ரமோத், எப்படி இருக்கே? ஏன் வாயைப் பொத்திக்கொண்டு பேசறே..."

"அவனுக்கு ரெண்டு பல்லு போச்சு" என்றான் சீனு.

"உனக்கு?"

"அடிச்ச அடில சரியா ஒண்ணுக்கு போக முடியலை."

"வெரிகுட்" என்றான் ரகு.

"உன்னை நிக்க வைச்சுச் சுடணும்

"சுடு"

"சுடத்தான்போறேன்"

"நீ ஒரு நாள் லாக்கப்பில இருந்து பா[illegible]த்தியா? அந்த மூத்திர நாத்தம், சாராயநெடி, மு[illegible]டியில அடி..."

"அதைவிட அடிவாங்கியாச்சு..."

**இன்பம் தொடரும்**

# இவ்வாரச் சிறுகதை

# நான் கிறுக்கன் ஆக மாட்டேன்!



நட்ட நடு இராத்திரியில் மொட்டை மாடியில் படுத்திருந்து கருமையான வானத்தில் மின்னுகின்ற விண்மீன்களை ரசிப்பதில் உள்ள சுகத்தை எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கிறார்கள்?

யாருக்கு தெரியுமோ தெரியாதோ அதைப்பற்றிய அக்கறை எனக்கில்லை. எனக்கு தெரியும். அதன் சுகம் எனக்கு புரியும்.

ஆயிரம் குழப்பங்களும் கவலைகளும் மண்டைக்குள் சுற்றி வந்தாலும் இரவு நேர வானத்தை பார்த்தவுடன் அத்தனையும் மறந்துவிடும். அது நல்ல பழக்கமா? அல்லது ஒருவித மனவியாதியா? என்பதையெல்லாம் நான் ஆராய்வது கிடையாது. இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு அம்மா சோறு ஊட்டிய காலத்திலிருந்தே இது என்னை பற்றிக் கொண்டது.

வயசுக்கு வந்த பொண்ணு நெடு நெடுன்னு வளர்ந்து நிக்கிறா. அவளுக்கு ஏதாவது நல்ல காரியம் செய்யனுன்னு அக்கறையே உங்களுக்கு இல்லையா? என்று மனைவி திட்டினாலும், இவன் சுத்த பைத்தியக்காரப் பையன். விவரம் தெரிஞ்ச நாளில் இருந்தே ஆகாயத்தை 'பார்த்து மல்லாந்து கிடந்து கனவு காணுகிறான். இப்படியே போனா ஒரு நாளைக்கு சட்டையை கிழிச்சிட்டு மாடியிலிருந்து இறங்க போகிறான் பாரு என்று அப்பா வசவை கொட்டினாலும், நான் பெத்த பிள்ளை இப்படி சொரணையே இல்லாமலா இருக்கணும்.

அப்படி என்ன தான் வானத்துல அவனுக்கு மட்டும் தெரியுதோ? யாருக்கோ வச்ச சூனியத்துல மிதிச்சதினால தான் இப்படி பேக்கு மாதிரி ஆயிட்டான் என அம்மா அர்ச்சனை செய்தாலும், எங்க அப்பா ஆகாயத்தை பார்த்து கனவு காணும் நேரத்திற்கு மண்வெட்டி எடுத்து தோட்டத்தில் பத்து கிணறு வெட்டியிருக்கலாம். தண்ணீர் பஞ்ச காலத்துல குடம் பத்து காசிற்கு வித்திருந்தாலும் கூட நாலு வீடு கட்டியிருக்கலாம் என்று பிள்ளைகள் கிண்டலடித்தாலும், நீ சரியான வாத்து மடையன்டா ஊரு உலகத்துல என்ன நடக்கு, எவன் எப்படி இருக்கான் என்பதை கூட தெரிஞ்சிக்காம சாயங்காலம் ஆயிட்டா வானத்த வெறிச்சு பார்க்க ஆரம்பிச்சறே. உன்னை கட்டி அழுவதற்காகவே உன் பொண்டாட்டிக்கு கோயில் கட்டி கும்பிடலாம் என்று நண்பர்கள் நையாண்டி பேசினாலும், நான் வானத்தை பார்க்கும் பழக்கத்தை விடுவதே இல்லை.

இத்தனை பேரும் இவனை இப்படி பேசுகிறார்கள் இவன் எந்த வேலைவெட்டியும் செய்யாமல் தெண்டத்துக்கு வாழுகிற மனிதன் போல் இருக்கிறது என்று நீங்கள் யாராவது நினைத்தால் அது முட்டாள் தனம். காரணம் படிக்கிற வயதில் பெரியதாக படிக்கவில்லை என்றாலும் சுமாராகவாது படித்தவன் நான். ஆண்டவன் அருளோ, என் திறமையோ, உள்ளூரில் இருக்கும் ரேஷன் கடையில் குமாஸ்தா வேலை கிடைத்துவிட்டது.

ரேஷன் கடை வேலை என்றாலே தகிடுதித்தம் செய்யாமல் இருக்க முடியாது. சாராய கடையில் இருந்தாலும் குடிக்காதவன் மாதிரி ஒரு கிலோ சீனியை கூட இதுவரை வீட்டிற்கு எடுத்து வந்ததும் இல்லை, தெரிந்தவர்களுக்கு கொடுத்ததும் இல்லை. அதே நேரம் சுற்றி நடக்கும் தவறுகளை மேல் அதிகாரிகளுக்கு போட்டு கொடுத்து நல்ல பெயர் வாங்கினதும் கிடையாது. அதனால் இன்று வரையில் உத்தியோகத்தில் எதிரிகளும் இல்லை. இடஞ்சலும் இல்லை. அப்பா சம்பாதித்து கட்டிய ஒரு வீட்டோடு தாத்தா சம்பாதித்த சொத்துக்கள் இருப்பதினால் வருவாய்க்கும் பெரிய குறையில்லை. விடுமுறை நாளானால் வீட்டுக்கு ஒட்டடை அடிப்பதிலிருந்து பையனுக்கு சைக்கிள் துடைத்து கொடுப்பது, அப்பாவுக்கு ஒத்தாசையாக நிலத்து வேலைகளை கவனிப்பது என்று எல்லா வேலைகளும் நன்றாகவே செய்வேன்.

இன்னும் உண்மையை சொல்ல வேண்டுமென்றால் வேறு எந்த வேலையும் இல்லை என்றால் வீட்டில் உள்ள துணிகளை துவைத்து காயப்போட்டு மடித்து வைப்பதும் நான் தான். இப்படி எல்லா வேலைகளையும் செய்யும் ஒருவன் தனக்கு பிடித்தமான ஒரு செயலை யாருக்கும் தொந்தரவு இல்லாமல் செய்தால் என்ன தவறு?

நான் ஆகாயத்தை ரசிப்பதினால் கடல் வற்றிப் போய்விட்டதா? மணலில் நெருப்பு பிடித்துவிட்டதா? அப்படி எதுவும் நடக்கவில்லை. பிறகு எதற்காக இத்தனை பேர் கிண்டலடிக்கிறார்கள்? எனக்கு அது புரிவதில்லை. அதை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பெரிய ஆவலும் இல்லை.

ரேஷன் கடை செக்ரட்ரி போன மாசத்தில் ஒரு நாள் என்ன மாணிக்கம் அண்ணே உங்க வீட்டுக்கு பக்கத்துல இருக்கிற செந்தில்நாதனுடைய பொண்ணு யாரோ ஒரு பையனோடு ஓடி விட்டாளாமே என்று கேட்டார்.

எனக்கு அப்போது தான் செந்தில்நாதனுக்கு ஒரு பெண் இருக்கிற விஷயமே தெரியும். இந்த இலட்சணத்தில் அந்த பெண் யாரோடு ஓடினாள். அவன் என்ன ஜாதி என்று எனக்கு எப்படி தெரியும். அதனால் அவரிடம் எனக்கு விஷயமே தெரியாது என்றேன்.

அதற்கு அவர் அட என்ன அண்ணே நீங்க, சுத்த அசமந்தமா இருப்பீங்க .போல என்று சொல்லி குறைபட்டுக் கொண்டார். அடுத்தவர்கள் விஷயத்தை தெரிந்து வைத்துக்கொண்டு அவர்களது செயல்களை விமர்சித்து வாழ்வதில் அப்படி என்ன சுகமோ? ஆகாயம் எனக்கு கற்றுத் தந்த பல விஷயங்களில் இதுவும் ஒன்று. நான் மழை பெய்விக்கிறேன். வெயிலாகவும் காய்கிறேன். பனியை கூட சில காலம் தருகிறேன், அதற்காக சிலர் திட்டுவார்கள், பலர் பாராட்டுவார்கள்.

பாராட்டுக்காக மயங்குவதோ, ஏச்சுக்காக கலங்குவதோ நமது வேலையைத் தான் பாதிக்கும். நமது கடமையை செய்து கொண்டே போனால் யாருக்கும் பிரச்சினை இல்லை என்று அது என்னோடு பேசுவது போல் இருக்கும். வானம் சொல்வது நியாயம்தானே.

மற்றவர்கள் விவகாரத்தில் தேவையில்லாமல் தலையிட்டால் வம்பு தும்புகள் தான் வந்து சேரும். சின்ன வயசில் இருந்தே சண்டை, சச்சரவுகள், பிரச்சினைகள் என்றாலே ஒதுங்கிப் போகும் சுபாவம் எனக்கு வந்துவிட்டது. அந்த சுபாவம் தான் வானத்தோடு உறவாடுகின்ற மனோநிலையை உருவாக்கியது.


கல்யாணமான புதிதில் மனைவியிடம் கேட்டேன். உனக்கு வானம் பிடிக்குமா? அதிலுள்ள நிலா, நட்சத்திரம் பிடிக்குமா? என்று கேட்டேன். ஒரு விசித்திரமான விலங்கை பார்ப்பது போல் பார்க்க ஆரம்பித்த மனைவி இன்று வரை அந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

நம்ம பொண்ணு உங்க அக்கா மகனை விரும்புகிறாள் போலிருக்கு. அக்காவிடம் பேசி கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க என்று அவள் சொன்னபோது நீ விருப்பப்படுவது போல அக்காவும் விருப்பப்பட்டால் பரவாயில்லை. ஒருவேளை அக்காவுக்கு விருப்பம் இல்லையென்றால் வீணான மனஸ்தாபம் தான் வரும் என்றேன்.

முகத்தை தோள்பட்டையில் இடித்து கொண்டு அவள் இதை உங்ககிட்ட சொன்னதுக்கு மரம் மட்டைகிட்ட சொல்லியிருக்கலாம். ஏதாவது பிரயோசனமாக இருக்கும் என்றவள் எப்படியோ அக்காவிடம் பேசி நிச்சயதார்த்தம் வரை போய்விட்டாள்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

# பொன்மொழி



முன்னேற
வேண்டுமென்றால்
முதலில் நமக்கு நம்மிடம்
நம்பிக்கை வேண்டும்.
பிறகு கடவுளிடம்
நம்பிக்கை வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! கொழும்பு மாநகரசபைத் தேர்தல் பறறி உமது எதிர்வு கூறல் என்ன?

**க.கீதபொன்கலன், கொழும்பு.**

● பாராளுமன்றத்தின் பெரும்பான்மை கிடைக்காத வேளையில் ஏனைய சுயேட்சை மற்றும் சிறுகட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கின்ற நடைமுறை உண்டு. அதேபோன்று மும்முனைப்போட்டியை எதிர்கொண்டிருக்கும் கொழும்பு மாநகரசபை முடிவுகளும் கூட்டு நிர்வாகம் ஒன்றைச் சந்திக்கின்ற வாய்ப்புக்களே உண்டு.

இதில் தமிழ் மக்களின் வாக்குகள் புதிய செய்தியை வழங்கும் என்று எதிர்பார்க்கலாம். இந்தத் தேர்தல் முடிவுகள் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை, மற்றும் தேசிய அரசாங்கம் என்ற 'அரசாங்கத்தின் திட்டம் என்பவற்றையும் தீர்மானிக்கவுள்ளது.

✉ சிந்தியா!கூட்டமைப்பைத் தடை செய்யச் சொல்கிறதாமே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்...?

**எஸ்.கோகுலராஜன், யாழ்ப்பாணம்.**

● அந்தச் செய்தியைத் தலைப்புச் செய்தியாக்கிய தமிழ் பத்திரிகைகளின் உள் நோக்கத்திற்கும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூற்றுக்கும் பெரிய வித்தியாசத்தைக் காண முடியவில்லை. இனவாதத்தின் வளர்ச்சிப் போக்கையே இவையிரண்டும் வெளிப் படுத்துகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் தேசியம் என் பதை தமிழ் இனவாதமாகவே முன்னெடுக்கின்றது. அதன் எதிரொலிப்பு இவ்வாறு பல தூண்டுதல்களை ஏற்படுத்தவே செய்யும்.

✉ இலங்கை மீன் வளத்தை இந்தியாவுடன் பங்கீட்டுக் கொள்ள சிந்தியாவுக்குச் சம்மதமா?

**க.வண்ணன், பருத்தித்துறை.**

● இலங்கை இந்திய இராஜதந்திர உறவுகள் எப்போதும் காத்திரமானதாக இருக்க வேண்டுமென விரும்பு கின்றவர்கள் கடல் விவகாரத்துக்குக் காத்திரமான தீர்வைக் காண முயற்சிக்கவில்லை. இரண்டு தமிழ் தரப்புக்கள் மோதிக் கொள்ளும நிகழ்வாகவே பார்க்கப்படுகின்றது.

தொப்புள் கொடி உறவுகளாக இருந்தாலும் தொழில் என்று வருகின்ற போது, விட்டுக்கொடுக்காத நிலைமையே தென்னிந்திய மீனவர்களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் இடையே தொடர்கின்றது.

எனவே இதில் அத்துமீறல் களுக்கும் அநியாயங்களுக்கும் இடமளிக்காமல் இருதரப்பு மீனவர்களும் தங்களது எல்லையையும் வரம்பையும் மீறாமல் நடந்துகொள்வது நல்லது.

✉ சிந்தியா! யாழில் நடைபெறும் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் முறைகேடு நடைபெறுகிறதாமே?

**ம.சிவசிங்கம், கொக்குவில்.**

● வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் மட்டு மல்ல நீரிறைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், அவ்வளவு ஏன் மண்வெட்டியைப் பகிர்ந் தளிப்பதில் கூட பயனாளிகள் தெரிவு செய்யப்படுவதில் குளறுபடிகள் இருக்கின்றன. இதில் அரச அதிகாரிகளின் கவனயீனம் அரசி யல் விருப்பு, வெறுப்பு, பாரபட்சம், உறவு என்று பல காரணிகள் செல்வாக்குச் செலுத்து பவையாக இருக்கின்றன.

இவ்வளவு சிக்கல் இருந்தாலும் அவர்களே தெரிவு செய்ய வேண்டிய வர்களாக இருப்பதால் மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும் என்ற கதையே தொடரும். இந்நிலைமையில் முன்னேற்றம் இருக்குமாக இருந்தால் இழப்புக்களைச் சந்தித்திருக்கும் மக்கள் இந் நேரம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் அடைந்திருப்பார்கள்.

ஆகவே இக்குறைபாட்டை நிவர்த்திக்கக் கூடிய கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது அவசியமாகிறது. அதில் அரசியல் தலையீடுகளுக்கும், அதிகாரத் துஷ்பிரயோகத்துக் கும் இடமளிக்கக் கூடாது. அவ்வாறானதொரு சூழல் உருவாகுவது கடினமே. ஏனென்றால் பூனைக்கு யார் மணிகட்டுவது.

✉ சிந்தியா! ஒரு மனிதனின் உணர்வுகளை மதிக்கத் தெரியாதவர்களை எதற்கு ஒப்பிடலாம்?

**எச்.எம்.எம்.ஹிமாயா, புத்தளம்.**

● மிக இலகுவான முடிவு தான். மனித உணர்வுகளைப் புரிந்து கொள்ளத் தெரியாதவர்கள் மனிதரே இல்லை. அத் தகையவர்களை இனிமேல் நீங்கள் அவர்கள் என்பதற்குப் பதிலாக அதுகள், இதுகள் என்று அழைத்தால் அது தப்பில்லை.

✉ சிந்தியா! திருமணத்தின் போது அருந்ததி பார்ப்பது இணைபிரியாமல் வாழ்வதற்காக என்று சொல்லப் படுகிறதே?

**கே.ஜமுனானந்தா, நீர்கொழும்பு.**

● நல்ல செய்தி. ஆனால் அது ஒரு சாஸ்திர கடமையாக மட்டும் இருந்துவிடுகிறதே என்பதுதான் கவலையான விடயம். மணமக்களிடம் அருந்ததியைக் காட்டுகின்றேன் என்று வானத்தின் ஒரு திசையைக் காட்டுகின்றமை பூசகரின் பொய்மையை நம்பிவிடுவதாலோ என்னவோ திருமண வாழ்வில் பெரும்பான்மையான தம்பதிகளிடையே வாழ்வு பொய்ப்பித்துப் போகின்றது. உங்களுக்குத் தெரிந்தவர்களில் அருந்ததியைப் பார்த்தவர்கள் இருந்தால் அதுபற்றி முரசுக்குத் தெரியப்படுத்தச் சொல்லுங்கள்.

✉ சிந்தியா! மன்னார் அகழ்வாராய்ச்சியின் போது எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் இலாபம் யாருக்கு?

**சென்யோசப், மன்னார்.**

● இதுபற்றி மிக விரிவாகப் பார்க்க வேண்டியுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் மலையகத் தமிழர்கள் முதல்தர தேநீர் அருந்தக் கிடைப்பதில்லை. புத்தள மக்களுக்கு அனல் நிலைய மின்சாரம் இலாபமான விலையில் கிடைப்பதில்லை. திருகோணமலை மக்களுக்கு இல்மனைட், மற்றும் தீந்தா களிமண் என்பவை ஏற்றுமதி செய்யப்படுவதால் இலாபப்பங்கு ஒன்றும் கிடைப்பதில்லை. இப்படி நமது பகுதியில் வளங்கள் இருந்தாலும் அதன் இலாபப் பங்காளிகளாக மக்கள் இருந்ததில்லை. அதேபோல் மண்ணில் எண்ணெய்வளம், எரிவாயு என்பன கிடைத்தாலும், இதனால் பயனடையப் போகின்றவர்கள் அதனைப் பொறுப்பேற்றிருக்கும் நிறுவனங்களும் தரகர்களும் வியாபாரிகளுமே ஆவர். ■

---


இலக்கிய நயம் 47

**கே.வி. குணசேகரம்**

# பொருள் செயல் வகை

**"பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லது இல்லை பொருள்."**

ஒரு பொருளாக மதிக்கத் தகாவனையும் பெரும் மதிப்புள்ளவராக்குவது செல்வம். இழி குணத்தவராக, தீயவராக இருந்தாலும் பொருள் உள்ளவரிடத்தில் ஏதோ ஒரு காரணத்திற்காக உயர் குலத்தவர்களும், அறிவுடையவர்களும் சென்று இரப்பர் என்று மேற்சொன்ன குறளில் வள்ளுவர் கூறுகிறார்.



அன்புடமை, அறிவுடமை, தானம், தவம், ஈகை என்றெல்லாம் சொன்ன வள்ளுவர் உலக நடைமுறையைப் பார்த்தார். நீதி நூல்களும், இதிகாச புராணங்களும் கூறுபவற்றைப் பார்த்தார். இவற்றில் தானதர்மங்கள் செய்து ஒழுக்கமாக வாழ்பவர்களை விடத் தனவந்தர்கள் மேன்மையுடன் வாழ்ந்தனர். எல்லோராலும் மதிக்கப்பட்டனர். அதனால் உலக நடைமுறைபற்றித்தானும் சொல்ல வேண்டும் என்பதற்காகப் 'பொருள் செயல் வகை' என்ற அதிகாரத்தில் பொருளைப்பற்றிக் கூறி, பொருளை அளவுக்கு அதிகமாகத் தேடுங்கள் என்று கூறுகிறார்.

ஒருவன் பொருளைத் தேடும் வழிவகைகளைப் பற்றி யாரும் ஆராய மாட்டார்கள். அப்படி ஆராய்ந்தாலும் அவனை ஒதுக்கி வைக்காது அவனால் புகழ்ந்து தமது காரியங்களைச் செயற் படுத்தவே நினைப்பார்கள்.

விநாயக புராணத்தில் காமாந்தன் என்பவன் பெரும் தீமைகளையெல்லாம் செய்பவன். பிராமணர்களைக் கூடக் கொன்றவன். பெருந் திருடன். அவன் திருடியே பெருந்தொகைப் பணத்தைச் சேர்த்தான். பிற்காலத்தில் தான் திருடிய பணத்தைக் கொண்டு கோயில்களில் கும்பாபிஷேகம் செய்துவந்தான். தானதர்மம் செய்தான். அதன்னால் அவன் அடுத்த பிறப்பில் அரசனாகப் பிறந்தான். உலக நடைமுறை இவ்வாறிருக்கத் தான் கூறும் தர்ம முறைப்படி வாழ்வோர் மிகுந்த கஷ்டங்களை அனுபவிப்பதை வள்ளுவர் கண்டார். அதன் பின்தான் வள்ளுவர் பொருளைப் பற்றிப் பாடினார்.

வள்ளுவரது காலத்தில் அவர் மதிக்கப்படவில்லை. அவரைப் போன்ற சிறந்த புலவர்களும் மதிக்கப்படவில்லை. அரசர்கள் தமக்கு விரும்பியவர்களுக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தனர். புலவர்கள் அரசரை மிகவும் புகழ்ந்து பாடினர். அவர்களைச் சபையில் புகழ்ந்தனர். புகழுக்கு ஆசைப்பட்ட அரசர் தகுதியில்லாத பல புலவர்களுக்குப் பரிசளித்தார்.

வள்ளுவர் தன் வாழ்நாளில் ஒருபோதும் அரச சபைக்குச் சென்றதில்லை. மற்றைய புலவர்களையும் புகழ்ந்ததில்லை. அரசனுக்கு விருப்பமான புலவர்களைப் புகழ்ந்து அவர்களை மதித்து அவர்களுக்குச் சேவகம் செய்வோரைப் பற்றிப் புலவர்கள் அரசர்க்குச் சொல்லிப் பரிசுகளும், பட்டங்களும் வாங்கிக் கொடுப்பார்கள். அரசன் தனக்கு விரும்பியவர்களை அரசவைப் புலவனாக்குவான். கல்லாதவர்களுக்கும் பெரும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிப்பான். இது இன்றும் நடைமுறையில் உள்ளது.

காளமேகப் புலவர் அரசசபையில் இருக்கும் போது 'திருமலைராயன்' என்ற அரசர் காளமேகப் புலவரை அவமதிப்பதற்காக ஒரு புலைமை இல்லாத புலவனுக்கு 'கவிராயர்' பட்டம் கொடுத்தான். அதைக்கேலி செய்த காளமேகம், "மன்னா பெரும் அறிஞனுக்குக் கவிராயர் பட்டம் கொடுத்திருக்கிறாய். நீ பட்டம் கொடுத்த கவிராயரின் வாயெங்கே? நீண்ட வயிறெங்கே? முன்னிரண்டு காலெங்கே? உட்குழித்த கண்ணெங்கே? உலகெங்கினும் உள்ள கவிராயர்களுக்கு (குரங்குகளுக்கு) இவை யாவும் இருக்கும்' என்றார். கவிராயர் என்று குரல் களுக்கும் ஒரு பெயர் உண்டு. கல்லாத ஒருவனுக்குப் பெரும்பட்டம் கொடுத்ததைப் பெரும் புலவரான காளமேகம் கிண்டல் செய்வதற்காக அப்படிக் கூறினார். இவற்றை எல்லாம் அறிந்த திருவள்ளுவர் தானும் அதை ஏற்றுத் திருக்குறளில் அதைப் பாடியுள்ளார். அப்படிப் பாடியமையால் தான் திருக்குறள் உலக நடை முறைகளைக் கூறும் நூல் என்றும் அது எக்காலத்திற்கும் எம் மக்களுக்கும் பொருந்தும் என்றும் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்றும் செல்வம், செல்வாக்குள்ளவர்களுக்கு அறிஞர்கள் பல்வேறு வகையான தில்லு, முல்லுகளைச் செய்து பட்டங்கள், பதவிகள் வழங்கி வருவதை நாம் காண்கின்றோம். இப்படியானவர்களை வரலாறு பரிகசிக்கும்.

தொடரும்...

18 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இயற்கை...

இவ்விடர்களைச் சந்தித்த மக்களை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசாங்க அதிகாரிகள் உட்பட சமூகத்திலுள்ள எல்லோருக்கும் உண்டு. பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, குடிநீர் உட்பட அத்தியவசியத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

பாதிக்கப்பட்ட சமூகத்தினரை மீண்டும் பழைய நிலைக்கு நிலைக்குக் கொண்டு வந்து அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பதுடன், அவர்களது வாழ்வாதாரத்திற்கும் வழி ஏற்படுத்தி கொடுக்க வேண்டிய பொறுப்பு சமூகத்திலுள்ள அனைவருக்குமுண்டு.

ஒரு நாடோ அல்லது கிராமமோ அபிவிருத்தியில் சென்று கொண்டுள்ள போது இயற்கை அல்லது செயற்கை அழிவுகளை தொடர்ச்சியாக எதிர் நோக்குவதனால் சலிப்படைந்து போவதுடன், மன உளைச்சலுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

இடர்கள் எல்லா அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பாரதூரமான அச்சுறுத்தல்களை நிலைக்கச் செய்கின்றது. அழிவானது மரணத்தையும், ஏனைய சேதங்களையும் விளைவிப்பதோடு சில பௌதீக, சூழல் பொருளாதார நாசங்களையும் உண்டு பண்ணுகின்றன. சமூக உறுதிப்பாட்டினை வலுவிழக்கச் செய்வதோடு இடர்களை எதிர் கொண்டுள்ள மக்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிப்படைந்து மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவது மிகவும் கடினமான தொன்றாக மாறிவிட்டிருப்பதையே கடந்த கால அனுபவங்களில் கண்டிருக்கின்றோம். ஏற்கனவே அரிதா-கிப் போயுள்ள உள்ளூர் வளங்களை அவசரத் தேவைகளுக்கு திசை திருப்பி அபிவிருத்தி செய்வது பெரும் சவால் நிறைந்த ஒன்றாகவுமுள்ளது.

தனிமனித வாழ்விலும், எந்தவொரு அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் இடர் முகாமைத்துவம் என்பது முக்கிய இடத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டால் ஏற்படக்கூடிய எல்லா வகையான இடர்களையும் கூடிய பட்சம் தவிர்க்க முடியும் என்று நம்பிக்கை நிறைந்த ஆலோசனையை முன்வைக்கிறார் மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் பதில் இணைப்பாளர் ஏ.எம். முஹம்மட் கசீர்.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வெளியிடப்பட்ட ....

அது அநேகமாக பிரணாப் தரப்பாக இருக்கலாம் என்பது எமது ஊகம். இந்த 4 பக்க கடிதம் என்ன சொல்கிறது? முதலில் வெளியான கடிதம். (சிதம்பரத்தைக் குற்றம் சாட்டும் கடிதம்) 100வீதம் நிதி அமைச்சகத்தின் தயாரிப்பு அல்ல என்று பிரணாப் எழுதியுள்ளாராம்.

அந்தக் கடிதம், சட்ட அமைச்சகம், தொலைத் தொடர்பு அமைச்சகம், பிர-தமர் அலுவலகம் ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படை யிலேயே தயாரிக்கப்பட்டது என்பது தான், இந்தக் கடிதத்தில் பிரணாப் கொடுத்துள்ள விளக்கம்! கடிதம் தயாரிக்க, தகவல்களை எங்கிருந்து வேண்டுமானாலும் பெற்று விட்டுப் போங் கள். கேள்வி என்னவென்றால், கடிதத்தை ஏன் தயாரித்தீர்கள்? நீங்கள் கடிதம் அனுப்பிய விடயம் எப்படி வெளியே தெரியவந்தது?

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பணம் சேர்க்கும்...

ஆனால் அவற்றினைச் சட்டரீதியாக நடவடிக்கைக்குட்படுத்த முடியாத வகையில் மிகவும் கனகச்சிதமாக பதிவுகளும் ஏனைய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிகிறது.

கிழக்கின் முக்கியத்துவம் மிக்க வைத்திய சாலையாகத் திகழும் போதனா வைத்தியசாலை ஒன்றில் நடைபெற்றுவருகின்ற சில சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் பல்வேறு விசனங்களைத் தோற்றுவித்திருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை போன்ற நவீன வைத்தியசாலை ஒன்றையும் தாபிக்க எனது நிறைவேற்றுத்துறை நடவடிக்கை எடுக்கும் என கிழக்கு மாகாண நிறைவேற்றுத்துறையின் கொள்கை அறிக்கையினை சமர்ப்பிக்கும்போது இந்தவருட ஆரம்பத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்திருந்தார்.

வைத்தியத்துறையின் மேன்மை யானது மக்கள் மத்தியில் சுகாதாரப் பிரச்சினை வைத்தியப்பிரச்சினைகள் ஏற்படுவதைக் குறைக்கும்என்ற நோக்கில் அரசாங்கமும், மாகாண சபையும் நடவடிக்கைகளையும் செயற்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்ற நிலையில் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் கருத்தில்லாச் செயற்பாடுகள் எந்தவகையில் முழுமையான பிரயோசனங்களைக் கொடுக்கும். அதனை விடவும் தனியார் வைத்தியசாலைகளுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தால் பிரயோசனமாக இருக்கும் என பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மாதாந்தம் தொழில் நிபுணர்கள் என்ற வகையில், அதிக மாதச் சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் அத்துடன் இன்னும் சில அலவன்ஸ்சுகள் எனப்படுகின்ற கொடுப்பனவுகள், வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திடம் வரிச்சலுகை எனப் பல வசதி-களை அரசாங்கம் கொடுக்கின்ற போதும், சாதாரண மக்களுக்கு சிறந்த பயன் கிடைக்கக் கூடிய சேவையினை வைத்தியத்துறையினர் வழங்காமைக்கு என்ன காரணம் என்பது பொது மக்களது கேள்வியாக இருக்கிறது.

தனியார் வைத்தியசாலைகள் அதி கூடிய வருமானத்தை எதிர்பார்த்து செயற் படுகின்றமையானது. பணம் படைத்தவர்கள் பயன் பெறுவதற்காக என்றாலும், வைத்திய நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்ற வேளையில் சாதார மக்கள் தமது வீடு காணிகளை அடகு வைத்தோ விற்பனை செய்தோ அதனைப் பெற வேண்டிய நிலை உருவாகிறது.

இந்த நிலைமையை மாற்றுவதற்கு தனி யார் வைத்தியசாலைகளின் கட்டணக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தலாம் அல்லது, அரசாங்க வைத்தியசாலைகளில் கடமை புரி யும் வைத்தியர்கள் தமது கடமை நேரத்தில் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்வது தொடர்பில் கட்டுப்பாடுகளை விதிக்கலாம். இல்லையானால் வைத்தியர்களே தமது வைத்தியசாலைகளிலிருந்து விலகி தனியார் வைத்தியசாலைகளில் தமது கடமைகளை மேற்கொள்ளலாம்.

அதனை விடுத்து தனியார் வைத்திய சாலைகளையே நோக்காகக் கொண்டு கடமைநேரங்களிலும் ஏனைய நேரங்களிலும் சாதாரண மக்களைக் கவனியாத செயற்பாடுகள் வைத்தியத்துறையின் புனிதத் தன்மைக்கே களங்கமாக அமையும்.

கிழக்கில் நிலவும் வைத்தியத் துறைசார் சிக்கல் குறித்து இக்கட்டுரை எழுதப்பட்டாலும் நேரடியாக வைத்தியசாலைகளின் பெயர்களைக் குறிப்பிடுதல் வீணான பிரச்சினைகளைக் கொண்டுவரும் என்பதற்காக பெயர்கள் குறிப்பிடப்படாமல் பொது மக்களின் நன்மை கருதி எழுதப்பட்டுள்ளது.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இலங்கைக்கு எதிராக...

எனவே இலங்கை விடயத்தில் தலையீட்டை ஏற்படுத்திக்கொண்டுள்ள கனடா இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, எதிர் வரும் மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

எனவே. கனடாவுக்கும் இலங்கைக்கும் இடையி லான ராஜதந்திர போர் தற்போதைக்கு நிறைவு பெறாது

ஏனெனில் இலங்கையுடன் கனடா முரண்பட தயாராகி விட்டது. கனேடிய அரசாங்கம்

புலம்பெயர்ந்த தமிழர்களின் வாக்குகளை மைய மாகக் கொண்டே இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ராஜதந்திர குற்றச்சாட்டுக்களை முன்வைப் பதாக இலங்கை

அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. எனவே கனடா எதிர் இலங்கை ராஜதந்திர போரை தொடர்ந்தும் எதிர்ப்பார்க்கலாம்.

17 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வறுமை வாட்டும் ...

அதன் காரணமாகத்தான் வங்கிகள் உங்களை ஏறிட்டும் பார்க்கவில்லை. ஆகவே அதிகரித்த வட்டிக்குத்தான் நீங்கள் பணம் வாங்க வேண்டி யிருந்தது. சமீபத்தில் ஒரு கிராமத்திற்குச் சென்றிருந் தோம். அங்கே ஒரு கிழமைக்கு 20 சதவீத வட்டிக்கு மக்கள் கடன் வாங்கியிருந்தார்கள்.

இலங்கையில் 37 வகையான வெவ்வேறு வங்கிகள் நாலாயிரத்திற்கு மேற்பட்ட கிளைகளுடன் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்றன. ஆயினும் இலங்கையின் சனத்தொகையில் 60 சதவீதமான மக்கள்தான் வங்கிச் சேவையைப் பெறுகின்றார்கள். ஏனையோருக்குக் கைகொடுப்பது வட்டிக்குப் பணம் கொடுப்போர்தான்.

இந்த வறுமை ஒழிப்புத்திட்டத்தில் நீங்கள் தனியாக இருந்து செயற்பட முடியாது. சிறு சிறு துரும்புகளாக நீங்கள் சிதறியிருக்கும்போது ஒரு போதுமே உங்களால் முன்னேறிவிட முடியாது. ஆகவேதான் உங்களை நாங்கள் குழுக்களாக அமைத்தோம். இது சுயஉதவிக் குழு அல்லது சகோதரக்குழு. ஒட்டுமொத்தமாக வருமானம் குறைந்த நிலையிலிருந்து மீள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக குழுக்களாக இணைந்து செயலாற்றினால் இந்தத் திட்டத்தின் மூலம் உண்மையான பயனைப் பெற்று நீங்களும் சமூகமும் நாடும் முன்னேறலாம்.

சமூக ஒன்று திரட்டல் மூலம்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். இது வறுமைக்குட்பட்ட உலக நாடுகளிலே வெற்றியளித்திருக்கிறது. வங்காள தேசத்திலே உள்ள பெண்கள் இதனைச் சாதித்துக் காட்டியிருக்கின்றார்கள். இன்று உலகில் 101 நாடுகள் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்திக் கொண்டிருக்கின்றன.

2002ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஆறு மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் வெற்றி கரமான முறையில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அவர்கள் இன்று 147 வங்கிச் சங்கங்களைச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்தக் கடன் திட்டத்தினை நாங்கள் 2008ஆம் ஆண்டு ஆரம்பித்தோம். ஒரு இலட்சத்துப் பதினோராயிரம் குடும்பங்கள் தற்போது உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள். 1300 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட கடன்களை வழங்கியிருக்கின்றோம். வங்கிகளிலே மக்களுடைய சேமிப்பு 1900 மில்லியன் ரூபாய்கள் வைப்பாக இருக்கின்றன. கடனை விடக் கூடுதலாக மக்களிடம் சேமிப்பு இருக்கின்றது. தாங்கள் வாழ்க்கையில் எப்படியும் முன்னேறவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பதையே இது காட்டுகிறது. இதுவரையும் 444 மக்கள் சக்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது 445ஆவது சங்கமாகும். வறுமையிலிருந்து நீங்கள் மீண்டெள வேண்டும். இது சுதந்திரமாக யாருடைய கட்டுப்படுத்தலுக்கும் உள்ளாக முடியாத சுதந்திர மக்கள் சக்தி அமைப்பு. நாளடைவில் இது மக்கள் வங்கியின், மக்களின் காலடியில் பணியாற்றும் ஒரு வங்கியாகச் செயற்படும்.

20 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நான் கிறுக்கன் ....

அப்போது கூட ஆகாயம் தான் சபாஷ் சொன்னது. பார்த்தாயா நீ சொல்லியிருந்தால், எப்படியாவது சொதப்பி இருப்பேன். உன் வேலையை மட்டும் நீ பார்த்து கொண்டதினால் நடக்க வேண்டியது நடந்தது. நானும் உன்னை மாதிரிதான். இடிக்க வேண்டுமென்றால் இடிப்பேன். மின்ன வேண்டுமென்றால் மின்னுவேன். குளம் குட்டையும் நிரம்பும், எவனாவது சாவதாக இருந்தாலும் சாவான். இரண்டுக்கும் நான் பொறுப்பல்ல.

இதையெல்லாம் ஏன் சொல்ல வருகிறேன் என்றால் நான் இருப்பது போல் எல்லோரும் இருங்கள். எதி லும் பட்டு கொள்ளாதீர்கள் என்பதற்காக அல்ல. என் வேலை சம்பாதிப்பது வீட்டுக்கு தேவையான வேலை களை செய்வது அவ்வளவுதான். வீட்டு வேலையை கவனிப்பது. குடும்பத்தில் உள்ளவர்களின் வாழ்க்கையை தீர்மானிப்பது யாராவது ஒருவர் தான் செய்ய வேண்டும். ஒரு இடத்தில் இரண்டு உடல்கள் வேலை செய்யலாம். இரண்டு அறிவு வேலை செய்யக் கூடாது. செய்தால் விபரீதங்கள் தான் ஏற்படும்.

எல்லோரும் என்னை அசமந்தம் அப்பிராணி என்று சொல்லுகிறார்களே என ஒரு நாள் நானும் மற்றவர்கள் செய்யும் வேலையை கவனித்துப் பார்க்க ஆரம்பித்தேன். அன்று ரேஷன் கடையில் மண்ணெண்ணெய் கொடுத்தார் கள். நிறைய கூட்டம் எல்லோருக்கும் அளந்து ஊத்திய வர் ஒரு லீற்றரில் நூறு மில்லியாவது குறைத் துத்தான் ஊற்றினார். இப்படி செய்வது சரிதானா என்று சேல்ஸ் மேனிடம் கேட்டேன். பரல் வரும் போதே பத்து லீற்றர் குறைவாகத் தான் வரும். அந்த கணக்கை ஈடுசெய்ய இப்படி செய்வதை தவிர வேறு வழியில்லை என்று சொன்னார்.

ரேஷன் அட்டையில் கோதுமை மட்டுமே வாங்கியவனுக்கு அரிசியும் வாங்கியதாக வரவு வைக்கிறீர்களே இது தப்பில்லையா? என்று கேட்டேன். அதற்கு அவர் பள்ளிக்கூடத்துல போய் தூங்குகிற வாத்தியாருக்கு 25,000 சம்பளம். ரிட்டையர்டு ஆகி வீட்டில் போய் தூங்கினாலும் கூட பென்ஷன் உண்டு. நம்ம வாங்குற சம்பளம் வாய்க்கும் கைக்குமே எட்டாது. குடும்பத்த நடத்தும்னா இப்படி ஏதாவது பண்ணினால் தான் உண்டு. என்ற அவரின் பதில் என்னை பெரிய குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது. மண்ணெண்ணெய் குறைப்பது யார்? ஏன் குறைக்கிறார்கள், ஒவ்வொரு லீற்றருக்கும் 100-மில்லி என்றால் ஒரு அட்டைக்கு அரை லீற்றர் குறைந்து விடுகிறதே? வாங்குபவன் அந்த அரை லீற்றருக்கும் சேர்த்துத் தானே காசு கொடுக்கிறான். அரசாங்கக்கடையிலேயே மக்கள் கொள்ளையடிக்கப்பட்டால் தனியார்கள் எந்தளவு கொள்ளையடிப்பார்கள். நினைக்கும் போதே தலை சுற்றியது.

நியாயப்படி கொடுக்க வேண்டிய அரிசியை கொடுக் காமல் வெளி மார்க்கெட்டில் கொடுக்கும் அரிசி மில்லுக்கு சென்று பளபளப்பாகி கடைக்கு வரும் போது பலமடங்கு விலையில் மீண்டும் மக்களுக்காக விற்கப்படுகிறது. ஆக மக்கள் எப்படியெல்லாம் ஏமாற் றப்படுகிறார்கள்.

ஒரு சின்ன ஊருக்குள் ஒரு சிறிய அலு வலகத்தி லேயே இத்தனை மோசடிகள் என்றால் பரந்து விரிந்த உலகத்தில் எவ்வளவு தில்லு முல்லு நடக்கும். இதை நினைத்து பார்க்கும் பொழுதே இரவு உறக்கம் போய் விட்டது. ஒரு நாள் உலகத்தை கவனித்ததற்கே உறக்கம் போய்விட்டது என்றால் ஒவ்வொரு நாளையும் கவனித்து கொண்டு இருக்கின்ற மனிதர்களுக்கு எப்படி பைத்தியம் பிடிக்காமல் இருக்கிறது. என்னை அசடன், அசமந்தன் என்று எப்படி வேண்டுமென்றாலும் பேசட்டும், அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை.

இவைகளையெல்லாம் கவனித்து மற்றவர்களிடம் பாராட்டை பெற்று என் அமைதியை துலைக்க நான் தயாரில்லை. என் ஆயுட்காலம் மிகக் குறைவு தான். அந்த குறைந்த காலத்தில் பைத்தியம் பிடிக்காமல் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால் நானும் என் ஆகாயமும் பிரியாமல் இருக்க வேண்டும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(06.10.2011 தொடக்கம் 12.10.2011 வரை

### மேடம்

ஆன்மீகச் சிந்தனையும், மிகச்சிறந்த பேச்சாற்றலும் கொண்ட மேஷ ராசி அன்பர்களே! நீங்கள் ஈடுபடும் காரியங்களில் நன்மையும், தொல்லையும் கலந்ததாகவே இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்த்து சுமூகமாகப் பழகி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். வழக்கு விவகாரங்களில் அனுகூலமான திருப்பத்தை சந்திக்கலாம். பொருளாதாரத்தில் பலன் பெற கடினமான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் அதிகமான வேலை நெருக்கடிகளை சந்திப்பீர்கள். குடும்பத்தில் சிறுசிறு மனவேறுபாடுகள் அங்கத்தினரிடத்தில் காணக்கூடும் சுபகாரியங்கள் தள்ளிப்போகலாம். பணவரவு சுமாரா – கவே இருக்கும். அதிர்ஷ்ட நாள் – வியாழன்

### இடபம்

சிந்தனை ஆற்றலும், முன்னெச் சரிக்கையும் கொண்டு சாமர்த்தியமாக செயல்படும் ரிஷப ராசி அன்பர்களே! நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் வெற்றிகள் கிட்டும். குழப்பத்தில் தவிக்கும் குடும்ப உறுப்பி னர்களுக்கு தக்க ஆலோசனைகளை வழங்குவீர்கள். உத்தியோகத்தர்கள் கடமைகளில் அதிகக் கவனம் செலுத்துவீர்கள். சிலருக்கு வெளியூருக்கு இடமாற்றம் ஏற்படலாம். சம்பள உயர்வு பெற்று சிலர் மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகளைச் சந்தித்து அதன்பின் நல்ல முடிவெடுப்பீர்கள். பெண் அல்லது மகன் திருமண முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் புதிய வாய்ப்புகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவார்கள். அதிர்ஷ்ட நாள் –சனி

### மிதுனம்

செய்வதை சிறப்பாக செய்ய எண்ணி அதிகமாக உழைக்கும் மிதுன ராசி அன்பர்களே! வேலைகளைத் திற மையாக முடித்து மற்றவர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். காரியங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் விலகி முன்னேற்றம் ஏற்படும். எதிர்பாராத பண– வரவு இருக்கலாம். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை செய்ய வேண்டி இருக்கும். தொலை பேசியில் வரும் தகவல் மகிழ்ச்சியைத் தரக்கூடும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த காரியங்கள் இனிதே நடைபெறலாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்து ஒத்திவைத்த காரியம் ஒன்றை உடனே செய்யும் சந்தர்ப்பம் ஏற்படும். சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். அதிர்ஷ்ட நாள் – சனி

### கடகம்

நண்பர்களிடம் மலர்ந்த முகத்தோடு பேசி மகிழும் கடக ராசி அன்பர்களே! எதிர்பாராத திருப்பங்களை நீங்கள் சந்திப்பீர்கள். முயற்சிகளில் நன்மையும், தொல்லையும் கலந்தே காணப்படும். செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தாலும் கூட அதிக செலவுகள் ஏற்படுவதை தவிர்க்க இயலாது. விருந்தினர் வருகை உண்டு. உத்தியோகத்தர்கள் சக அதிகாரிகள் விஷ யங்களில் தலையிடுவதால் சிக்கல்களை அடையக் கூடும். அலுவலகத்தில் எதிர்பாராத திருப்பத்திற்கு இடமுண்டு. சுயதொழிலில் போட்டிகள் தொல்லை தந்தாலும் சாமர்த்தியத்தால் வெற்றியடைவீர்கள். திட்டமிட்ட பணிகளை நாளை செய்யலாம் என்று தள்ளி வைக்கக் கூடும். அதிர்ஷ்ட நாள்– வியாழன்

### சிங்கம்

எதையும் கவனமாக ஆராய்ந்து உறுதியான முடிவெடுக்கும் சிம்ம ராசி அன்பர்களே!மனம் முழுக்க மகிழ்ச்சி நிறைந்திருக்கும். சிலர் புதிய வீட்டில் குடி– யேறி மகிழ்வார்கள். குல தெய்வ வழிபாடு உற்சாகம் தருவதாக இருக்கும். உத்தியோகத்தர்களில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். முடிந்து விடும் என்று எண்ணிய ஒரு காரியம் தள்ளிப் போகலாம். அவசர வேலைக்காக வெளியூர் பயணம் உருவா– கலாம். சுயதொழில் செய்பவர்கள் எதிர்பாராத ஒரு காரியத்துக்காக அலைச்சலைச் சந்திக்கலாம். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் உருவாகி தொல்லை கொடுத்தாலும் அமைதியாக நடைபெறும். அதிர்ஷ்ட நாள் – ஞாயிறு

### கன்னி

ஆற்றல் மிக்கவர்களாக எடுத்த காரியங்களை எளிதில் சாதிக்கும் கன்னி ராசி அன்பர்களே! எதை யும் செய்து முடிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதேனும் ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்க நேரலாம். சிலருக்கு வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தர்கள் பொறுமையோடு பணிக– ளில் ஈடுபடுவீர்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த பணம் கைக்கு வரத் தாமதமாகலாம். வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும், இலாபம் குறைவுபடாது. குடும்பத்தில் ஒரு சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பழைய கடன் தொல்லை கொடுக்கலாம். அதிர்ஷ்ட நாள் –வெள்ளி

### துலாம்

மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்ட துலாம் ராசி அன்பர்களே! கால நேரம் பார்க்காமல் கடமையாற்றுவீர்கள். எடுத்த காரியங்களில் அலைச்சல் ஏற்பட்டாலும் முடிவில் ஆதாயம் கிடைக்கலாம். உத்தியோகத்தர்களில் பணப்பொறுப்புகளில் உள்ளவர்கள் கணக்குகளில் கவனமாக இல்லாவிட்டால் பிரச்சினைகள் உருவாகலாம். அதிகாரிகளிடம் அவசியமில்லாமல் பேசி தொல்லைகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை இருக்கும். இல்லத்தில் சிறு மங்கல நிகழ்ச்சி நடைபெறலாம். கலைத்துறையினர், புதிய வாய்ப்புகள் பெற்று மகிழ்ச்சி அடைவர். புகழ் செல்வாக்கு அதிகரிக்கலாம். அதிர்ஷ்ட நாள் – புதன்

### விருச்சிகம்

புத்தி கூர்மையும் சிந்தனை ஆற்றலும் பெற்ற விருச்சிக ராசி அன்பர்களே! எதிர்பாராத வகையில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். சொந்த பந்தங்களை அனுசரித்துச் சென்று சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். மனதை குழப்பிக் கொண்டிருந்த காரியங்களில் ஒன்று நல்ல தீர்வுக்கு வரும். உத்தியோகத்தர்கள் முக்கியமான காரியம் ஒன்றை அவசரமாகச் செய்து முடிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் முதலீட்டை அதிகரிக்க ஆலோசனை மேற்கொள்வீர்கள். புதிய கிளை தொடங்கும் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். பயணத்தின் போது பாதுகாப்பு அவசியம். அதிர்ஷ்ட நாள் – திங்கள்

### தனுசு

உறுதியான எண்ணங்களை கொண்டு உழைத்து நற்பெயர் பெறும் தனுசு ராசி அன்பர்களே! உங்களது முயற்சி நல்ல பலனை தரும். பொன்னான வாய்ப்புகளைப் பெற்றுப் புகழ் அடைவீர்கள். தெய்வீகச் சிந்தனை மேம்பட்டு தெம்பூட்டும். எதிர்பாராத திடீர் பணவரவுகள் கிடைக்கக்கூடும். உத்தியோகத்தர்களில் சிலருக்கு இடமாற்றமும், சம்பள உயர்வும் கிடைக்கலாம். குடும்பம் சிறுசிறு பிரச்சினைகளுக்கு மத்தியில் நன்றாக நடைபெறும். சுபகாரியம் நடைபெற முயற்சிகளை மேற்கொள்வீர்கள். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் கவனம் செலுத்துவார்கள். பெண் கலைஞர்களால் முன்னேற்றத்திற்கு இடமுண்டு. அதிர்ஷ்ட நாள் – ஞாயிறு

### மகரம்

எதிர்காலத்தை துல்லியமாக கணிக்கும் வல்லமை பெற்ற மகர ராசி அன்பர்களே! நல்லவர்கள் சந்திப்பால் பெருமை அடைவீர்கள். தெய்வீகமான காரியங்களில் மன தைச் செலுத்தி தான், தருமங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் கடமைகளில் கவனமாக இருப்பீர்கள். அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய பணியில் அதிகக் கவனம் செலுத்துவீர்கள். அலுவல– கம் சம்பந்தமாக வெளியூர் சென்று வரும் சந்தர்ப்பம் உண்டாகும். குடும்பத்தில் பொருள் வரவு மகிழ்ச்சி அளிக்கும். பெண் அல்லது மகனின் திருமணப் பேச்சுகளில் வெற்றி கிடைக்கும். சிலருக்கு வீடு, நிலம் வாங்கும் யோகமும் ஏற்படலாம். அதிர்ஷ்ட நாள் – புதன்

### கும்பம்

நீதி, நேர்மையை கடைபிடித்து வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்ட கும்ப ராசி அன்பர்களே! எதிர்பாராத நண்பர்கள் சந்திப்பு லாபத்தை தரும். முக்கிய நபர் ஒருவரின் அறிமுகம் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும். மேற்கு திசையிலிருந்து செவி குளிரும் செய்தி வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். பொறுப்பான வேலை களை அவசரமாகச் செய்து முடிக்கும் நிலை ஏற்படும். சுயதொழில் செய்பவர்களுக்கு நிலுவைகள் சுலபமாக வசூலாகும். குடும்பத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, நிலம் வாங்கும் யோசனை வெற்றி பெறும். சுபகாரியங்கள் செய்ய முயற்சிகள் மேற்கொள்வீர்கள். அதிர்ஷ்ட நாள் – வெள்ளி

### மீனம்

மீனம் எதிலும் முன்னணியில் நிற்க விருப்பப்படும் மீன ராசி அன்பர்களே! வசதி படைத்த சிலரின் நட்பைப் பெற்று முன்னேறுவீர்கள். தொழிலுக்காக எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வாழ்வில் புதிய திருப்பம் ஏற்படும். எதிர்பாராத பணம் கைக்கு வந்து சேரும். வாடிக்கையாளர்களும், பணியாளர்களும் எதிர்பார்த்த ஆதரவு தருவார்கள். குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினை தலைகாட்டினாலும், சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவீர்கள். கலைஞர்களில் சிலருக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம். அதிர்ஷ்ட நாள் – செவ்வாய்

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**தந்தைசெல்வாவும் தளபதி அமீரும் ஆவியாக இறங்கி வருகின்றனர். போர் தந்த மிச்சங்களாக அதன் எச்சங்களாக இன்றும் காணப்படுகின்ற அழிவுகளைப் பார்க்கும்பொழுது தந்தையின் கண்கள் கலங்குகின்றன.**

**தந்தை:-** இதெல்லாம் யாரால் வந்த வினையடா தம்பி?
**அமீர்:-** வாயால் வந்த வினை தந்தையே.

**தந்தை:-** தம்பி புரியும்படி சொல்லடா?
**அமீர்:-**பத்துத் தடவை பாடவை வராது பதுங்கிப் பாயும் புலியே தமிழா செத்து மடிதல் ஒருதரம் என்றோ சிரித்துக்கொண்டே செருக்களம் வாடா. என்று முழங்கினோம். கேட்டோமா, போனோமா வாக்குப்போட்டோமா என்றில்லாமல் சாகத் தயார் என்று சிரித்துக்கொண்டே வருவார்கள் என்று யார் கண்டோம்?! அவர்கள் சிரித்துக்கொண்டே வந்தார்கள். நாங்கள் பிளயிட் ரிக்கெட் எடுத்துக்கொண்டே தமி ழகம் ஓடிவிட்டோம்.

**தந்தை:-** (வாய்க்குள் சிரிக்கிறார்) அப்போதே சொன்னேனே. கூட்டத்தைக் கண்டதும் கூவ வேண்டாம். உணர்ச்சியை மண்ணில் தூவவேண்டாம். தம்பிமாருக்கு உசுப்பேத்தவேண்டாம் என்று யார்தான் கேட்டார்கள், நீதான் கேட்டியா? சிவசிதம்பரம் கேட்டாரா? அலையாய் வந்த கூட்டத்தின் முன்னே வங்கக் கடலாய் உங்கள் வாய்களை விரித்தீர்கள். அதனால்தான் தம்பி வந்தது இந்த வினை.
**அமீர்:-** நீங்கள் மெதுவாய்ச் சொன்னால் எங்களுக்கு எப்படி தந்தையே கேட்கும்?

**தந்தை:-** கேட்டாலும் கேட்காதது போலல்லவா கொக்கரித்துக்கொண்டு திரிந்தீர்கள்.

**பேசிக்கொண்டே நல்லூர் வீதியை இருவரும் அடைந்துவிட்டனர்.**

**தந்தை:-**தம்பி அமீர் அங்க பாரடா சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றது. அதில எங்கட படங்களும் இருக்குது போல தெரியுது.
**அமீர்:-** ஆம் தந்தையே. எங்கள் இருவரின் படங்கள் மட்டுமல்ல அண்ணல் சிவா உட்பட இன்னும் சிலரது படங்கள் இருக்கின்றது தந்தையே.

**தந்தை:-**இவையெல்லாம் எதற்காகத் தம்பி? (சிரிக்கிறார்)
**அமீர்:-**மாநாடு நடத்துகிறார்களாம் தந்தையே. அதற்காக விளம்பரம் பண்ணியிருக்கிறார்கள்.

**தந்தை:-** (சிரித்துக்கொண்டே) பரவாயில்லைத் தம்பி. மகாநாடு நடக்கும் போதாவது எங்களையும் ஞாபகப்படுத்துகிறார்கள்.
**அமீர்:-** எங்களை ஞாபகப்படுத்தி, மக்கள் மத்தியில் தங்களை ஞாபகப்படுத்துகிறார்கள்.

**மாநாட்டு மண்டபத்தை நெருங்குகையில் மாகாட்டு உரை ஒலிபெருக்கி வாயிலாகச் செவிகளை எட்டுகிறது. கூட்டணியின் தலை வர் பேசிக்கொண்டிருக்கிறார்.**

"எங்களுடைய இந்தக் கட்சி ஆரம்பம் முதலே தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமான அரசி யல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக்கொண்டிருக்கின்றது. இந்த நாட்டின் சகல இன மக்களுடனும் ஒரு அந்நியோந்நியத்துடன் பழக வேண்டும் என்பதுதான் எங்கள் தந்தை செல்வாவினுடைய அவாவாக இருந்தது. அதனால்தான் பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்துமுடித்தார். அதேபோன்று அவரைத் தொடர்ந்து வந்த தலைவர்களான தளபதி அமீர், அண்ணர் சிவா போன்றோரும் எமது மக்களுக்கு கௌரவமான சமஷ்டி முறையிலான தீர்வையே வலியுறுத்தி வந்தனர்.

இன்று கூட அவர்கள் இருந்திருந்தால் சமஸ்டி முறை பற்றியே பேசிக்கொண்டிருந்திருப்பார்கள். என்னைப்போன்றே 'இந்திய மொடலை' துருவித்துருவி ஆராய்ந்துகொண்டிருந்திருப்பர்கள். துரதிர்ஷ்டவசமாக விவேகமற்ற தம்பிமார் துரோகம் என நினைத்து அவசரப்பட்டதால் எமது தலைவர்கள் என்னைப்போன்று இந்திய மொடலை ஆராயும் பாக்கியமற்றுச் சென்றுவிட் டார்கள்....

பின்னால் நின்றுகொண்டிருந்த தந்தையை திரும்பிப் பார்க்கிறார் அமிர். மூச்சற்று விழுந்து கிடக்கிறார் தந்தை. ஆம். மீண்டுமொருமுறை தந்தை செத்துக்கிடக்கிறார். இல்லை இல்லை மீண்டும் ஒருமுறை சாகடிக்கப்பட்டிருக்கிறார்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# அணுவைப் பிளந்தவர்



இன்னும் அதன் வேகத்தை, சத்தத்தை எப்படி அதிகரிக்கச் செய்யலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்தான்.
தான் உருவாக்கிய பொம்மைப் பீரங்கியின் சக்தியை அதிகமாக்குவதில் அந்தப் பையன் வெற்றி கண்டானோ இல்லையோ தெரியாது.
ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பையன் பெரிய விஞ்ஞானியாகி, உலகிலேயே மிகப்பெரிய பிரமாண்டமான ஒலி உண்டாக்கக் கூடிய ஒரு வெடிகுண்டை உருவாக்க வழிவகுத்துக்கொடுத்தான்.
அணுவைப் பிளந்து மகத்தான சக்தியைப் பெற முடியும் என்று நிரூபித்துக் காட்டினான் எக்னஸ்ட் ரூதர்∴போர்ட்டு என்றும் அந்தப் பையன்.
மிகச் சிறந்த விஞ்ஞானியான, எர்னஸ் ரூதர்∴ போர்ட்டு, நியூசிலாந்திலுள்ள நெல்சன் என்னுமிடத்தில் 1871- ஆம் ஆண்டு, ஓகஸ்ட் 3 ஆம் திகதி பிறந்தார். விவசாயக்குடும்பம். சிறு வயதில் ரூதர் ∴போர்டு, பெற்றோர்களுக்கு பண்ணையில் உதவியாக இருந்தார். புத்திசாலி, உழைப்பாளி. பாடங்களை உருப்போட்டு ஒப்புவிப்பரல்ல. இவரது அறிவுத்திறமை, நெல்சன் காலேஜ் உபகாரச் சம்பளம் கொடுத்து இவரைத் தன் மாணவனாக்கிக்கொண்டது. பின்னால் இந்த ஸ்கொர்சிப் பற்றி ரூதர்∴போர்ட்டு இப்படிக் குறிப்பிட்டார்.

உலகை வியக்க வைத்தவர்கள்

(வியப்புக்கள் தொடரும்...)

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)

## திறமை



பொதுவாகவே கிளிகள் பேசும் திறமை உடையது என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இந்தக் கிளி விசித்திரமானது. பொதுவாகவே கிளிகள் மனிதர்கள் பேசுவதை அவதானித்து அவை மீண்டும் ஒப்புவிக்கும்.

ஆனால் இந்தக் கிளியோ 103 விதமான மொழிகளில்(சப்தங்கள்) பேசுகிறதாம். (இது நேரில் பார்த்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல் அல்ல)

தென்கொரிய நாட்டில் பிரபல்யமாக இருக்கும் இந்தக் கிளியை வாங்கு வதற்கு பலரும் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் இந்தக் கிளியினுடைய உரிமை யாளர் கூறும் விலைதான் வாயைப் பிளக்க வைக்கிறது. அதன் விலை அதி-கம் இல்லை. நம்மூர் மதிப்பில் 6 கோடி ரூபாய்தான். அம்மாடியோவ்.....!

## முயற்சி

இப்படத்தைப் பார்க்கும்போது தொங்குபாலம் போன்று தோன்றுகின்றதல்லா? ஆனால் இது ஒருவகை பாலம். பொதுவாகவே தொங்கு பாலம் அமைக்கும் போது மரங்கள், கம்பிகளாலேயே தான் தொங்குபாலம் அமைப்பார்கள். ஆனால் இங்கு மரங்களின் வேர்களைக் கொண்டு பாலம் பின்னப்பட்டுள்ளது.

இந்தியாவின் மேகாலயா மாநிலத்தில் உள்ள சோரா என்கிற ஊரில் ஒரு வகை மரங்களின் உயிருள்ள வேர்களில் பாலங்கள் அமைக்கப்படுகின்றன. இங்கு பழங்குடி மக்கள் இவ்வித்தையை அறிந்து வைத்திருக் கின்றனர். இப்பாலங்கள் மிகவும் பலமானவை. ஆனால் பாலங்கள் முழுமை பெறுகின்ற மைக்கு 10 முதல் 15 வருடங்கள் வரை பொதுவாக எடுக்கின்றது. பல நூற்றாண்டு காலத்துக்கும் நீடிக்கக் கூடியவை.







## இயற்கை



இப்படத்தைப் பார்த்ததும் பாரிய உப்பளங்கள் என்றே உங்கள் மனதில் தோன்றும். ஆனால் இது ஒன்றும் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட உப்பு விளையும் பூமி அல்ல.

இலங்கையிள் வடபகுதியில் தற்போதைய கால நிலையில் சூரிய பகவானின் கரங்கள் ஓங்கி நிற்கின்றன.

அதன் விவைாகவே வெப்பம் அதிகரித்து வாட்டியெடுத்துக் கொண்டிருக்கிறது.

இதனால் கைதடி, நாவற்குழி பகுதி யில் ஆழம் குறைந்த கடல்நீரேரிகள் வற்றி ஆவியாகிப் போய்க் கொண்டிருக்கின்றன.

இதனால் உப்புக்கள் குவியல் குவியலாக சேர்ந்திருக்கின்றது.

அதை எடுத்துச்செல்வதில் அப்பிரதேசவாசிகள் மும்மூரமாக போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். ஆம், தன் வீட்டு முற்றத்து மல்லிகைக்கு வாசம் அதிகம் என்பர். அதுபோல நம்மூரில் விளையும் உப்புக்கு சுவை அதிகம் என்று முந்தியடிக்கின்றனர் போலும்...

## வெள்ளப் பெருக்கு

பீசட் புயலினால் ஒரு தேசமே கலங்கியிருக்கிறது. ஏற்கனவே பருவ மழை காரண-மாக தொடர்ச்சி யாக மழை வீழ்ச்சியை பெற்று வரும் பர்மா நாட்டில் அண்மையில் வீசிய புயல் காற்று காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதனால் மக்கள் படும் அவஸ்தைகளையும் திண்டாட்டங்களையும் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கிறது. பாவம் யார்தான் என்ன செய்ய முடியும். இயற்கையின் சீற்றத்துக்கு யாரும் விதிவலக்கல்லவே.



## மோசடி



**சர்வதேச பள்ளியை துவக்கிய ஷேவாக் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார். ஒப்பந்தப்படி இவர், கிரிக்கெட் பயிற்சி அகடமியை அமைக்கவில்லை என, கிராம மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். இந்திய அணியின் அதிரடி துவக்க வீரர் ஷேவாக். இவர், அரியானா வில் கிரிக்கெட் பயிற்சி அகடமி அமைக்க திட்டமிட்டுள்ளார். இதனை ஏற்று ஜஜ்ஜார் மாவட்டத்தில் உள்ள சிலானி கேயூஷா கிராம மக்கள், மிக குறைந்த வீலைக்கு (ஒரு ஏக்கர் ரூ. 3 இலட்சம்) 23 ஏக்கர் நிலத்தை 33 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கியுள்ளனர். இங்கு 5 நட்சத்திர அந்தஸ்தில் சர்வதேச பள்ளியை ஷேவாக் நிறுவியுள்ளார்.**

**இப்பள்ளியில் "மெகா கட்டணம் வசூலிக்கப்படுகிறதாம். இதனை கேள்விப்பட்ட கிராம மக்கள் ஆத்திரமடைந்தனர். ஒப்பந்தப்படி பயிற்சி அகடமி அமைக்காமல், பள்ளியை துவக்கிய ஷேவாக் பெருமளவில் பணம் சம்பாதிப்பதாக புகார் கூறினர். இவரது இந்த திட்டத்தால் வளரும் வீரர்களுக்கு எவ்வித பயனும் இல்லை என்று குற்றஞ்சாட்டினர். இது குறித்து பொலிஸ் துணை கமிஷனர் சந்தர் பிரகாஷ் கூறுகையில், கிராம மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கிரிக்கெட் அகாடமி தவிர, பள்ளி ஒன்றும் திறக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து விசாரித்து வருகிறோம், என்றார்.**



இப்பத்திரிகை 373, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு - 06 டீடி என்டர்பிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஒக்டோபர் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.